# தும்பைப் பூ

(நாவல்)

நாரண-துரைக்கண்ணன்
"ஜீவா"

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்
2/96, பெரிய தெரு, சென்னை-600005

தமிழ் உறவு—21.
வகை : நாவல்
முதல் பதிப்பு : 1965
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல், 1977
உரிமை : ஆசிரியருக்கே.

விலை ரூபாய் ஐந்து பத்து.

| | |
|---|---|
| Author's Name | NARANA-DURAIKAN<br>Jeeva, Pseud : B. 1906. |
| Book's Title | Thumbaipoo (Novel) |
| Language | Tamil |
| Paper | White 11.6. KG. |
| Size | 18.5×12.5 c.m. 160 Pag |
| Price | Rs. 5.00 |
| Edition | First Edition, October<br>Second Edition. April |
| Publisher | Tamil Writers' Co-ope<br>Society Ltd., Madraa-5 |
| Printer | Moovendar Achagam<br>Madras-600 014 |

# பதிப்புரை

எழுத்தாளர்களின் நன்மைக்காக எழுத்தாளர்களின் சொந்த முயற்சியால் எழுத்தாளர்களே நடத்தி வருவது தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம். இதுவரை எண்பத்தெட்டுப் புத்தகங்கள் தமிழுறவு வரிசையில் வெளியாகியுள்ளன. இது இருபத்தோராவது புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு.

தமிழ் உறவு என்ற பெயரைப்பெற்ற இக்கூட்டுறவுச் சங்கத்தின் வெளியீடுகளைப் பல நிறுவனங்களும் தமிழ் மக்களும் ஆதரித்து நலம் செய்வதால் மேலும் மேலும் பல புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற ஊக்கம் எங்களுக்கு உண்டாகியிருக்கிறது. நல்ல புத்தகம், பயனுள்ள புத்தகம் என்று யாவரும் பாராட்டும் சிறப்பைத் தமிழுறவு நூல்கள் பெறவேண்டும் என்பது எங்கள் அவா. எழுத்தாளர்களின் சொந்தமுயற்சி, தரமான வெளியீடுகள் என்ற இரண்டையே ங்கள் தகுதியாகக் கொண்டு புத்தகம் வெளியிடுகிறோம். மக்களின் ஆதரவு மிகுதியாக ஆக எங்கள் முயற்சி விரிந்து பரந்து யாவருக்கும் நலந் தரும் என்பதில் ஐயமே இல்லை.

ஒரு பதிப்புக்கு இரண்டாயிரம் பிரதிகள் வெளியிட்டு அவற்றை ஓர் ஆண்டுக்குள் விற்றுவிட வேண்டும் என்பது எங்கள் அவா. இது நிறைவேற முடியாத ஒரு பேராசை அன்று. நூல் நிலையங்களும், பள்ளிக்கூடங்களும், பிற நிறுவனங்களும் இந்த வெளியீடுகளை வாங்கி ஆதரித்தால் இந்த அவா எளிதில் நிறைவேறும். கூட்டுறவுத்துறையின நம் அரசாங்கமும் எங்களுக்கு மேலும் மிகுதியான ஆதரவைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

எங்கள் முயற்சியை ஆதரிக்கும் யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை–5.
2—4—77

தமிழுறவாளர்

# முதற் பதிப்பின் முன்னுரை

இருபது ஆண்டுகளுக்கு முன், திருச்சிராப்பள்ளியில் நண்பர் ஒருவருக்கு நடந்த திருமணத்துக்குப் போய்விட்டுச் சென்னை மாநகருக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். ரயில் எழும்பூர் ரயில் நிலையத்தை யடைந்ததும் பயண அலுப்புத் தாங்காமல் அவசரமாக வண்டியை விட்டு இறங்கலானேன். நான் அமர்ந்து வந்த பெட்டிக்கு முன்னுள்ள பெண்கள் பெட்டியிலிருந்து ஏராளமான பெண்கள் இறங்கினர். இக் கூட்டத்தில் தென்பட்ட ஒரு முதிய மாதும் இளமங்கை யொருத்தியும் என் கவனத்தைக் கவர்ந்தனர். தாயும் மகளும் போலிருந்த இருவருமே விதவைகளாயிருந்தனர். பதினெட்டு வயதுகூடச் சரியாக நிரம்பாத அந்த இளம்பெண் துவைத்துக் காவியேறிய வெள்ளைப் புடைவை கட்டிக் கொண்டிருந்தாள். அவள் நீளமான கூந்தலைக் கோதி முடித்திருந்ததும் நெற்றியில் ஒன்றுமே வைக்காமல் இருந்ததும், கழுத்தில் தாலியில்லாதிருந்ததும் அவள் பாலிய விதவை என்பதைப் பறைசாற்றியது. கன்னிப் பருவத்திலேயே கைம்மை நோன்பு நோற்கும் ஓர் அபூர்வப் பெண்ணைப் பார்த்து என் மனம் கழிவிரக்கங் கொண்டது. தாயும் மகளும் கண்ணுக் கெட்டாத் தூரம் போயும் அவர்களுடைய பரிதாபத் தோற்றங்கள் என் கண்களை விட்டு அகலவில்லை. என் கற்பனையுள்ளம் அவர்களுடைய நிலையைப்பற்றி—முக்கியமாக அந்த இளம் விதவைப் பெண்ணைப்பற்றி — என்னென்னவோ எண்ணலாயிற்று. நாடோறும் நூற்றுக்கணக்கான பேர்களைப் பார்க்கிறோம்; அவர்களில் ஒரு சிலரை நம்மால் மறக்க முடிவதில்லை. அவர்களுடைய உருவமும் நினைவும் நம் நெஞ்சில் உறைந்து விடுகின்றன. அதுபோலத்தான், இவ்விரு வைதவ்வியத்தின் பிரதிபிம்பங்கள் என் நினைவில் நிலைத்து விட்டன. என் மனக் கண்ணில் சோகமே உருவான அந்த இளம் விதவையின் உருவம் அடிக்கடி தோன்றி ஏதேதோ கதை சொல்லி வரலாயிற்று.

இச் சிந்தனையின் முதிர்ச்சி நாளாவட்டத்தில் என் உள்ளத்தில் ஒரு சிறந்த நாவலாக என்னை யறியாமலே உருவாகிக் கொண்டிருந்தது. என் மதிப்புக்குரிய விருதுநகர் நண்பர் உயர்திரு வி. வி. இராமசாமி அவர்கள் தாம் தொடங்கி நடத்திக் கொண்டிருந்த "தமிழ்த் தென்றல்" மாத இதழுக்குத் தொடர் கதையாக வெளியிட ஒரு நாவல் எழுதித் தர வேண்டுமென்று 1952-ஆம் ஆண்டில் கேட்டார். அவர் வேண்டுகோளுக்கிணங்க நாவலொன்று எழுத முயற்சி எடுத்துக்கொண்ட போதுதான் இப்படி ஒரு கதை என் உள்ளத்தில் உருவாயிருப்பது தெரிந்தது. இந்நாவலுக்குச் சகோதர எழுத்தாளர்களிடையிலும் வாசகர்களிடையிலும் நல்ல வரவேற்பு இருந்தது. ஒரு பிரபல எழுத்தாளர், நான் இந்நாவலுக்குக் கொடுத்திருந்த பெயரையும், கதைப் போக்கிலுள்ள சில அம்சங்களையும் தமதாக்கிக் கொண்டதி லிருந்தே தொடர்ந்து படித்து வந்தவர்களின் உள்ளங்களை இது எவ்வளவு கவர்ந்திருக்கிறது என்று தெரிந்தது.

நம் தேசத்துக்கு ஆட்சி சுதந்திரம் கிடைத்த பின்னர் நிலவி வந்த அரசியல் நிலையையும் சமுதாய நிலையையும் அடிப்படையாக வைத்தே நான் இந்நாவலைப் புனைந் திருக்கிறேன். கதையின் கருப் பொருளும் அமைப்பும் அதில் நிலவும் சமுதாயச் சூழ்நிலையும், கதா பாத்திரங்கள் வெளி யிடும் அபிப்பிராயங்களும் சுயராஜ்யம் கிடைத்த ஆண்டுக் கும், முதல் பொதுத் தேர்தல் நடந்து முடிந்த மூன்று நான்கு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தின் பிரதிபலிப்பு என்று கொள்ள வேண்டும். ஆனால், இது சுயாட்சிக்குப் பின் ஆளுங்கட்சியில் இருந்தவர்களில் ஒரு சிலரிடம் காணப் பட்ட மாறுதலையும் அதன் எதிரொலியாக எழுந்த விளைவு களையும் ஏகதேசமாகப் படம் பிடித்துக் கற்பனையில் காட்டுவதே தவிர, இதில் வரும் ஒரு சில சம்பவங்களையும் நபர்களையும் நிசமென்று அப்படியே யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்நாவலில் வரும் சம்பவங்களும் பாத்திரங்களும் முழுக்க முழுக்க என் கற்பனையில் உதய மானவைகளே. கதையைச் சுவையாகக் கொண்டு செல்

வதற்காக நாட்டு நடப்பையும் அரசியல் பிரதிபலிப்பையும் தொட்டுக் காட்டியிருந்தாலும், இதில் ஒரு நிகழ்ச்சிகூட உண்மையில் நடந்ததில்லே. இந்நாவலில் நடமாடும் கதா பாத்திரங்கள் உயிராக உள்ளவர்களேயோ, காலஞ் சென்றவர்களேயோ யாரையும் குறிப்பிடுவதில்லே என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த அடிப்படை உண்மையை வைத்துக்கொண்டுதான் வாசக நேயர்களும் எழுத்தாளச் சகோதரர்களும் இந்நாவலேப் படித்துச் சுவைக்க வேண்டும். இலக்கிய விமர்சகர்களும் சீர் தூக்கிப் பார்த்துத் தங்கள் கருத்தை நடுநிலேயாக வெளியிட வேண்டும். கதை நிகழுங் களம், காலம், சூழ்நிலே ஆகியவைகளே அறிந்து கொள்ளாமல், கதாசிரியன் எந்தக் கருத்தில் அல்லது எந்தக் கண்ணோட்டத்தில் தன் படைப்பை உருவாக்கியிருக்கிருன் என்பதைப் புரிந்து கொள்ளாமல் அல்லது எண்ணிப் பார்க்காமலே விமர்சகர்கள் சிலர் கதையை மட்டும் மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டுத் தங்கள் கருத்தைத் தாறுமாருக வெளியிட்டுத் தடுமாறுகின்றனர். கதையின் கருப்பொருளேயும் கதாசிரியன் கதையை எழுதிய நிலேயையும் நோக்கத்தையும் புரிந்துகொள்ள வேண்டுமாளுல், நூலாசிரியன் எழுதியுள்ள முன்னுரையை முக்கியமாக வாசித்து அறியவேண்டும். அப்போதுதான் வாசகர்கள் கதையை நன்ருகச் சுவைக்க முடியும். விமர்சகர்கள் ஆசிரியனின் படைப்பைக் குறித்துச் சரியான மதிப்புரை கூறமுடியும். வாசகர்களும் எழுத்தாளர்களும் இலக்கிய விமர்சகர்களும் இந்நாவலேப் படிப்பதற்குமுன், நான் எழுதியுள்ள முன்னுரையைப் படிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்நாவலில் நடமாடும் கதாபாத்திரங்களேப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்நாவலில் முக்கிய பாத்திரங்களாக மூவர் வருகின்றனர். அவர்கள் மங்கையர்க்கரசி, சதானந்தம் பிள்ளே, திலகவதி ஆகியோராவார். இவர்களில் கதைத் தலேவன் சதானந்தம் பிள்ளே என்பது யாருக்கும் ஐயமிருக்க முடியாது. ஆளுல், கதைத் தலேவி

மங்கையர்க்கரசியா? திலகவதியா? எனச் சிலர் உள்ளத்தில் வினா எழும்பும். இதுபற்றி ஒரு முடிவுக்கு வர இயலாமலும் போகலாம். ஏனெனில் இவ்விரு பெண்களுமே இந்நாவலில் முக்கியமான பாத்திரங்களாவர். ஆயினும் இக் கதையைப் படித்து, சிறிது ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு மங்கையர்க்கரசி தான் இந் நாவலுக்கே உயிராக இருப்பவள்; தொடக்கத்தி லிருந்து இறுதிவரை நடத்திச் செல்பவள் இவள்தான் என்பதை நன்கு அறிவர். நம் நினைவை விட்டு நீங்கமுடியாத ஜீவ சித்திரம் மங்கை ஒருத்திதான். இவள் போன்ற சிறந்த நற்குணவதியை நம் சமுதாயத்தில் அபூர்வமாகத்தான் பார்க்க முடியும்.

மங்கையர்க்கரசி இன்னமும் நம் கிராமப் புறங்களில் மத்தியதரக் குடும்பங்களில் பழைய காலப் போக்கில் வாழ்ந்து வரும் பெண்களின் பிரதிநிதியாக இருப்பவள். இவளைப் போன்ற இளம் மகளிரைத் தென் கோடிப் பகுதிக் கிராமங்களில் இப்போதுகூடப் பார்க்கலாம். தொடக்கத்தில் ஒரு சில நிமிடங்களில் வந்து மறைந்து போகும் அவள் அன்னையும் அப்படித்தான்.

சதானந்தம் பிள்ளை போன்ற கதாபாத்திரம் பார்க்கச் சாதாரணமாகத்தான் தோன்றும். ஆனால் சூழ்நிலைக்கும் சந்தர்ப்ப உணர்ச்சிக்கும் ஆளாகிவிடக் கூடிய சோதனை மிக்க நிலையிலும் தடுமாற்றத்துக்கு முழுதும் இரையாகாமல் சமாளித்து நின்று தன் தகுதியையும் ஒழுக்கத்தையும் தற்காத்துக் கொள்ளும் அவருடைய தனித் தன்மையை எல்லோரிடமும் காண முடியாது. லட்சோப லட்சம் மக்களில் ஒருவர் இருவர்பால் மட்டுமே காண முடியும்.

திலகவதி போன்ற மங்கையைப் பெரும்பாலும் எல்லா நல்ல குடும்பங்களிலுமே காண முடியும். நற்குடியில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் திலகவதியைப் போல் கைப்பிடித்த கணவன்பால் மாறு அன்பும் நம்பிக்கையும்தான் கொண் டிருப்பாள். நோய்வாய்ப் பட்டு இறக்கும் நிலையிலும் அக முடையானைப் பிரிந்துபோக, திலகவதியைப் போலவே

வருந்துவாள்; ஆற்றுமை கொள்ளுவாள். நாம் இதைச் சகஜ மாகப் பெரும்பாலான குடும்பங்களில் பார்க்கலாம்.

மாசிலாமணி முதலியார் ஒரு விசித்திரமான பாத்திரம். நடுநடுவே தோன்றிக் கதையைச் சுவாரஸ்யமாக நடத்திச் செல்லுபவரும் இவர்தான்; இதை முடித்து வைப்பவரும் இவரே.

இந்நாவலை விரிவாக்க வேண்டுமானுல் சிவகுமாரன், விசுவநாதன், கோகிலா, கணேசன் ஆகிய பாத்திரங்கள் உதவுவார்கள். சந்தர்ப்பம் வந்தால் அவர்களைப் பயன் படுத்திக் கொள்வோம். வேலைக்காரி முத்தம்மா, வக்கீல் குமாஸ்தா இரண்டொரு கணங்களில் தோன்றி மறையும் மிகச் சிறிய பாத்திரங்கள். ஆதலால் இவர்களைப் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. பொதுவாகப் பாத்திரங் களின் குணப் பண்பும் செயல்களும் சரியாகத் திட்டப்பட் டிருக்கின்றனவா என்று பார்த்தால் மட்டும் போதும்.

இதற்குமேல் இந்நாவலில் வரும் கதாபாத்திரங்களைப் பற்றி அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. இனி வாசகர்களே அவர்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களோடு அளவ ளாவி மகிழும்படியாக விட்டு விடுகிறேன்.

“தமிழ்த் தென்றல்”வில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த இந்நாவல் எப்போதோ புத்தக உருவில் வந்திருக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக என்னை அலைக்கழித்து வந்த வாழ்க்கைச் சோதனைகள் என் இந்த இலக்கியப் படைப்பையும் பற்றிக்கொண்டு மூலையில் கிடத்தி வைத்திருந்தது என்றுல் மிகையாகாது.

சென்ற ஆண்டு வெளியிட்ட “தரங்கிணி” நாவலின் முதற் பதிப்பு 15 மாதங்களுக்குள் விற்பனையாகிவிட உதவி புரிந்த வாசகர்கள், இந்தத் “தும்பைப் பூ” நாவலையும் வரவேற்றுத் தமிழகம் முழுவதும் உலவவிடுவார்கள் என்பது திண்ணம்.

என் இலக்கிய முயற்சிக்குப் பேராதரவு காட்டிவரும் அனைவருக்கும் என் பணிவார்ந்த நன்றி உரியதாக.

“ஜீவோதயம்” } சென்னை-24 } நாரண-துரைக்கண்ணன்
6—10—’65

# தும்பைப் பூ

# 1

உலகமெங்கணும் ஒளி பரப்பி உயிர்களையெல்லாம் வாழ்விக்கவேண்டி, செங்கதிரோன் கீழ்வானிலிருந்து அவசர அவசரமாகப் பவனி வந்து கொண்டிருந்தான். ''கீங், கைங்'' எனக் கடற் பறவைகள் கீச்சிடுவது உதயகீதம் பாடி, சூரியனை வரவேற்பது போலிருந்தது. நீலவானில் திட்டுத் திட்டாகத் தென்பட்ட வெண்மேகங்களிலும் கருங்கடலிலிருந்து கணத்துக்கொருதரம் கிளம்பிக் கரை புரண்டு வரும் அலைகளிலும் செஞ்ஞாயிற்றின் ஒளி பிரதிபலித்தது. கடற்பரப்பில் மிதந்தவாறு கட்டுமரங்கள் கரை நோக்கி விரைந்துவந்து கொண்டிருக்கும் அழகு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. முன்னாள் மாலையில் மீன் பிடிக்கச் சென்ற செம்படவர்கள் எதிர்பார்த்ததைவிட ஏராளமாக மீன்கள் வலைகளில் பிடிபட்டதாலோ என்னவோ, கட்டுமரங்களைத் துடுப்புகளால் துரிதமாகத் தள்ளிக்கொண்டு தெம்மாங்கு பாடியவாறு தெம்பாக வந்துகொண்டிருந்தனர். கட்டு மரங்

களுக்கு இடையிடையே பெரிய படகுகளும் மிதந்து வந்து கொண்டிருந்தன. பெரிய மீன்களைப் பிடிக்கும் ஆற்றல் வாய்ந்த பெரிய வலைஞர் பலர் அவற்றில் காணப்பட்டனர். இவ்விதம் படகுகளிலும் கட்டுமரங்களிலும் வரும் பரதவர்களை எதிர்பார்த்து, பரதவப் பெண்கள் பலர் கடற் கரையில் மீன் கூடைகளை இடுப்பில் வைத்தும் கையில் பிடித்தும் நின்றிருந்தனர். அவர்களுடன், சிறுரும் வயது முதிர்ந்தோரும் காணப்பட்டனர். அவர்களிடையே இருந்து கிளம்பிய பேச்சு ஆரவாரம் அலைகளின் ஓசையைக்கூட அடக்கிவிட்டது. இன்னும் சிறிது நேரத்திற்குள் தங்களுக்கு எப்படியும் இரை கிடைக்கக்கூடும் என்ற ஆசையுடன், கருடன்களும், பருந்துகளும் காக்கைகளும் அவ்விடத்தைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

கடற்கரையோரத்தில் செம்படவர்களேயன்றி வேறு சிலரும் நடமாடிக் கொண்டிருந்தனர். பெரிய மனிதர்கள் சிலர் கைகளில் ஊன்றுகோலை வைத்துக் கொண்டு அலை புரளும் கரையோரத்திலும், பெரிய பாதையை அடுத்துள்ள நடைபாதையிலும் சூரியனொளியில் மூழ்கியவாறு உலவிக் கொண்டிருந்தனர். எதிர்ப்புறத்திலுள்ள மேரி ராணி கல்லூரி யில் வாசிக்கும் மாணவிகள் சிலரும் கடற்கரையில் உல்லாச மாக உலவிக் கொண்டிருந்தனர். இளைஞர்கள் சிலர் கதிரொளி தங்கள் தேகங்களில் பட, மணற்பரப்பில் உடற் பயிற்சி செய்துகொண்டும் ஓட்டப்பந்தயத்துக்குப் பழக்கம் செய்துகொண்டும் இருந்தனர். நடுப்பாதையில் மோட்டார் கார்கள் இப்படியும் அப்படியுமாக ஓடிக்கொண்டிருந்தன.

ஜட்கா வண்டியொன்று தெற்குநோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. சில நிமிடங்களுக்கு ஒரு தரம் சாட்டையைச் சொடுக்கியும் 'ஏய்' ஊய்,' எனக் குரல் கொடுத்துக்கொண்டும், ஜட்கா வண்டி சாயபு சாதுர்யமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தான். 'டக், டக்' என்று அடியெடுத்து வைத்து லாகவமாக ஓடிக்கொண்டிருந்த குதிரையின் குளம்பு ஓசை கேட்பதற்கு இனிமையாக இருந்

தது. குதிரைகூட மற்ற ஜட்கா வண்டிக் குதிரைகளைப் போல வற்றி வாடியில்லாமல் கொழுகொழுவென இருந்தது. அதன் கருமேனியிலும், பிடரி மயிரிலும் சூரிய ஒளிபட்டுப் பார்ப்பதற்கு ஒருவிதக் கவர்ச்சியைத் தந்தது.

இந்த ஜட்கா வண்டியில் அமர்ந்து போய்க்கொண்டிருந்த மங்கையர்க்கரசிக்குக் கடற்கரைக் காட்சிகளெல்லாம் விந்தையாக இருந்தன. அவளுடைய கயற்கண்கள் வியப்பினால் விரிந்து காணப்பட்டன. அவள் கண்முன் காணப்படும் ஒவ்வொரு காட்சியையும் கட்டிடத்தையும், பொருளையும் ஆவலாகவும் அதிசயந்தோன்றவும் பார்த்துச் செல்வதிலிருந்து அவள் இப்போதுதான் முதன் முறையாகச் சென்னை நகரத்திற்கு வருகிறாள் என்று தெரிந்தது.

'மாலையில்தான், கடற்கரையில் மக்கள் திரள் திரளாகக் கூடி இருப்பார்கள்; உல்லாசமாகப் பொழுதுபோக்குவார்கள்' என்று அவள் தன் ஊரில் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் இப்போது இவ்வளவு அதிகாலையில் சென்னைக் கடற்கரை மேற் குறித்தவாறு கலகலப்பாக இருந்தது, அவளுக்கு அதிசயத்தையும் களிப்பையும் ஒருங்கே ஏற்படுத்தியது. மக்கள் நீராடுவதாலும் துணி துவைப்பதாலும் நித்திய கடன்களைச் செய்வதாலும் காவிரியாறு காலையில் கலகலப்பாக இருக்கும் காட்சி அச்சமயம் அவள் மனக் கண் முன் வந்தது. அவள் அடிக்கடி தன்னுடன் வரும் தாய் பக்கம் திரும்பி ஏதேதோ கேட்டுக்கொண்டே சென்றாள். சென்னைக்குப் பல முறை வந்து பழகியவளும், உலகானுபவம் நிறைந்தவளுமான சிவகாமி அம்மாள் சமயோசிதமாக அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். தானாகவும் மகளுக்குத் தெரிவிக்க வேண்டுமெனக் கருதியவற்றைக் கூறிக்கொண்டே போனாள்.

* * *

தான் பிறந்ததிலிருந்து இதுவரை பிரிந்தறியாத சொந்த ஊரையும் சுற்றத்தாரையும் விட்டு வரும் அவல நிலையை

நிறைந்து சோகமே உருவாக ரயிலில் பிரயாணஞ் செய்து வந்த மங்கையர்க்கரசி, எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கியதுமே நகர வாடை தாங்காமல் நடுக்கமுற்றாள். எங்கு பார்த்தாலும் மக்கள் கடல்போல் திரண்டு அலைமோதிக் கொண்டு இருப்பதைக் கண்டு அவள் மலைப்படைந்தாள். ரயிலிலிருந்து இறங்கியவர்களில் பலரை அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்து வரவேற்று அழைத்துச் செல்வதைப் பார்த்தபோது, தங்களையும் அழைத்துப் போக யாராயினும் வந்திருப்பார்களா என்று அவள் மனம் எண்ணியது. கண்கள் ஆவலோடு சுற்றுமுற்றும் பார்த்தன. ஆனால், தாங்கள் முன்னறிவிப்பின்றியே ஊரைவிட்டுத் திடீரெனப் புறப்பட்டு வந்தது அவள் ஞாபகத்திற்கு வந்ததும் ஏமாற்றத்தைச் சமாளித்துக் கொண்டு தாயுடன் வந்தாள். இந் நிலையில் தங்களைச் சூழ்ந்துகொண்டு, "பெட்டி படுக்கை சாமான்கள் இருக்கிறதா? அம்மா! எங்கே இருக்கிறது சொல்லுங்கோ? நாங்க எடுத்து வாரோம்" என்று நச்சரிக்கும் போர்ட்டர்களைக் கண்டு அவளுக்கு எரிச்சல்தான் வந்தது. "இவர்கள் ஏன் இப்படி பேய்கள்போல் பறக்கிறார்கள்; தொல்லைப்படுத்துகிறார்கள்; பிரயாணிகளைப் போகவிடாமல்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

இதைச் செவியுற்ற சிவகாமியம்மாள், "அவர்கள் வேறென்ன செய்வார்கள்? குழந்தை, வயிற்றுப் பிழைப்பு இருக்கிறதே!" என்று மகளுக்குச் சமாதானம் சொல்லி விட்டு, போர்ட்டர்களைப் பார்த்து, "போங்க ஐயா, எங்களிடம் சாமான்கள் ஒன்றும் கிடையாது; வழி விடுங்கள்" என்று கூறிக்கொண்டே, தான் கையில் பிடித்திருந்த துணி மூட்டையை எடுத்துக் கக்கத்தில் வைத்துக்கொண்டு ரயில் நிலையத்துக்கு வெளியே போகலானாள்.

"இந்த ஸ்டேஷன் ரொம்ப பெரிசாயிருக்கிறதே, அம்மா! மாயவரம் ஜங்க்ஷன்கூட இவ்வளவு பெரிசா இல்லையே!" என்று மங்கையர்க்கரசி அண்ணாந்து பார்த்துக்கொண்டே கேட்டவாறு தாயுடன் நடந்தாள்.

சிவகாமியம்மாள் புன்னகை செய்தவாறு, "சே! அதெல்லாம் இதற்கு முன்னாலே நிற்குமா? இது பெரிய ஸ்டேஷனில்லையா? தெற்கே இருக்கிற ஸ்டேஷன்களுக்கெல்லாம் இதுதான் தாய் ஸ்டேஷன் என்று சொல்லுகிறார்கள். எந்த ஊருக்கும் போகிற ரயில் வண்டிகளும் இங்கிருந்துதான் புறப்படுகின்றன; வந்து சேருகின்றன. இதற்கு மேலே ரயில் போகாது. நாம் வழியிலே பார்த்தோமே! நாம் வந்த வண்டிக்குப் பக்கத்திலே ஓடி வந்ததே! மின்சார வண்டி என்று நான் சொல்லலில்லை! அதுதான் இதற்கப்புறமும் பீச் ஸ்டேஷன் வரைக்கும் போகும். ஆனால் அதற்கு வேறே பாதை. அது தாம்பரத்திலிருந்து கடற்கரை வரைக்கும் போகிறது" என்று விவரித்தாள்.

மங்கையர்க்கரசி நாலா பக்கங்களையும் கூர்ந்து கவனித்துக் கொண்டே நிதானமாக நடந்தவாறு, "கட்டிடம் கூடப் பார்க்க நன்றாக இருக்கிறது" என்று கூறியவள், "சே! இது என்ன? காலில் ஏதோ......?" என்று சொல்லிக் கொண்டே குனிந்து பார்த்தாள். யாரோ காரித் துப்பிய எச்சிலை அவள் மிதித்து விட்டிருந்தாள். "அறிவில்லாதவர்கள் வழியில் அசுத்தம் பண்ணி வைத்திருக்கிறார்களே" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கூறியவாறு, காலை ஒரு பக்கமாகப் போய்த் துடைக்கலானாள்.

"இதெல்லாம் இங்கு சகஜம், மங்கை! அதோ பார்! வாழைப்பழத்தோல், காய்ந்த ரொட்டித் துண்டு எல்லாம் கண்ட இடங்களில் எறியப் பட்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் எச்சிலும் துப்பலுந்தான். ஊர்தான் பட்டணம். நாகரிக நகரம் என்று பேர்...—ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆடை அலங்காரத்தில் குறையிருக்காது. முகத்துக்குப் பவுடர், மேலே வாசனை வீச சென்டு......மற்றதெல்லாம் அப்படியப்படித்தான். நீதான் இங்கு இருக்கப் போகிறாயே! இன்னும் எத்தனை யெத்தனை விதமான வேடிக்கைகளைப் பார்க்கப் போகிறாய், பாரேன்" என்று

சொன்ன சிவகாமியம்மாள், "சரி, சரி, நேரமாய் விட்டது; வா போகலாம்" என்று கூறி வெளியே அழைத்துப் போனாள்.

போர்ட்டர்கள் உள்ளே படை யெடுத்தது போல வெளியேயும் வண்டிக்காரர்கள் இவர்களை முற்றுகை யிட்டதைக் கண்டு மங்கையர்க்கரசி திகைத்துப் போனாள். ஆனால் உலக அனுபவம் வாய்ந்த சிவகாமியம்மாள் 'வெளியூர்ப் பெண்கள்தானே! வெகு சுலபமாக ஏமாற்றி விடலாம்'' என்று வாய்ச் சவடால் அடித்த வண்டிக்காரர்களை யெல்லாம் விரட்டிவிட்டு யோக்கியனை ஒருவனுடைய வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டாள்.

போகும் வழியெல்லாம் மங்கையர்க்கரசி குழந்தை போலக் கட்டிடங்களையும் மற்றும் காட்சிகளையும் மனிதர்களையும் வெறித்துப் பார்த்துக் கொண்டு போகலானாள்.

வண்டி சிந்தாதிரிப்பேட்டை வாராவதிப் பக்கமாகத் திரும்புகையில், சிவகாமியம்மாள், "மங்கை, அதோ பார், இரண்டு கடியாரக் கோபுரங்கள் தெரியல்லே? சிவப்புக் கோபுரம் பெரிய ரயில்கள் போகிற ஸ்டேஷன். இந்த ஸ்டேஷனைப் போல—ஏன்? இதைவிட மிகப் பெரிசு அது...... வெள்ளைக் கோபுரம், கார்ப்பொரேஷன் கட்டிடத்தினுடையது......இதையெல்லாம் நீ பின்னாலே பார்க்கலாம்......'' என்று சொன்னாள்.

மகளுக்கு முக்கியமாகத் தெரிவிக்க வேண்டுமென்று நினைத்தவற்றை யெல்லாம் சிவகாமியம்மாள் சொல்லிக் கொண்டே போனாள். மங்கையர்க்கரசியும் சிலவற்றைப் பற்றித் தாயைக் கேட்டு அறிந்து கொள்ளலானாள்.

கோமளேஸ்வரன் பேட்டை வாராவதியை வண்டி கடந்ததும், மவுண்ட் ரோடிலுள்ள சினிமாக் கொட்டகைகளையும், பெரிய பெரிய கம்பெனிகளையும், வியாபார ஸ்தலங்களையும் பார்த்து மங்கையர்க்கரசி முன்னைவிட வியப்படைந்தாள். சிவகாமியம்மாள் தனக்குத் தெரிந்த

கட்டிடங்களைப் பற்றியும் ஓட்டல்கள், சினிமாக் கொட்டகைகளைப் பற்றியும் மட்டும் மகளுக்கு விவரித்தாள்.

இவர்கள் சாந்தோம் ஹைரோட்டிலுள்ள ஒரு வீட்டுக்குப் போக வேண்டுமென்று தெரிவித்ததால், ஜட்கா வண்டிக்காரன் ஊரைச் சுற்றிக்கொண்டு போகாமல், நேராக வாலாஜா ரோட் வழியாக வண்டியை ஓட்டிக் கொண்டு போய் மெட்ராஸ் கிரிக்கெட் மைதானம், பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்ட் கட்டிடம், செனட் ஹவுஸ் முதலியவைகளைக் கடந்து தெற்குத் திசையாகத் திரும்பிக் கடற்கரைப் பாதையில் ஓட்டலானான்.

வண்டி சென்னை பல்கலைக்கழகக்கட்டிடத்தை நெருங்கும் போதே, பரந்து விரிந்திருக்கும் கருங்கடலைக் கண்டுவிட்ட மங்கையர்க்கரசி, "இதென்னம்மா, இது!" என்று பேராச்சரியத்துடன் கேட்கலானாள்.

"இதுதான் சமுத்திரம்! நான் முன்னே சொல்லலையா?" என்று பதிலளித்தாள் சிவகாமியம்மாள்.

"நம்ம காவேரி ஆற்றைவிடப் பெரிதாக இருக்கிறதே! அகண்ட காவேரியில் வெள்ளம் வந்தால் இருப்பதைப் போல......"

"அடிப் பயித்தியக்காரப் பெண்ணே! இந்தச் சமுத்திரம் எங்கே? காவேரி எங்கே? காவேரியைப்போல நூறு காவேரி ஒன்று சேர்ந்தாலும் இவ்வளவு பெரியதாயிருக்காதே! நீ என்னென்ன......" என்று சிவகாமியம்மாள் அதற்குமேல் கடலைப் பற்றி விவரிக்க முடியாமல் நிறுத்தினாள்.

'உம்' என்று பெருமூச்சு விட்டவாறு மௌனமாக, வான முகட்டைத் தொட்டுக்கொண்டு கண்ணுக் கெட்டும் தூரம் வரை பரவியிருக்கும் நீலக்கடலின் அழகையும், காலைக் காட்சியையும் பார்த்துக் கொண்டே போனாள்.

* * *

ஜட்கா வண்டி பிரஸிடென்ஸி காலேஜ், சர்வ கலாசாலை பரிட்சை மண்டபம், ஐஸ் ஹவுஸ் கட்டிடம், மேரிராணி மகளிர் கல்லூரி, இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபீஸ் கட்டிடங்களனைத்தையும் முறையே கடந்து, மக்கள் வசிக்கும் பகுதியில் பிரவேசிக்கலாயிற்று.

செம்படவர்கள் குடிசைகள் சில இடப்பக்கம் தென்பட்டதுமே மங்கையர்க்கரசி, "ஆமாம், அம்மா! நாம் போகவேண்டிய இடம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்?..." என்று கேட்டாள்.

"அதுவா? இன்னும் கொஞ்ச தூரம்தான் இருக்கிறது..." என்று கூறியவாறே, "இதோ குடிசைகள் தெரிகிறதே! இதற்குத்தான் நடுக்குப்பம் என்பார்கள். எதிரில் சுடுகாடு இருக்கிறது இல்லையா? ஆமாம் இந்த இடத்துக்குப் பக்கம் தான் இருக்கிறது உன் அத்தான் வீடு; சமீபத்தில்தான் வந்துவிட்டோம்......" என்று யோசனையோடு சொன்னாள் அன்னை.

பின், சிவகாமியம்மாள் நாலா பக்கங்களையும் சுற்றிப் பார்த்துக் கொண்டே, "நான் இங்கு வந்தே எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டது. அதனால் இடமெல்லாம் மறந்து கூடப் போச்சு. அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தால் தான் எதுவும்" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு வந்தவள் வண்டிப் பக்கமாகக் குறுக்கிட்ட ஒரு மனிதரைக் கூப்பிட்டு, "இங்கே சதானந்தம் பிள்ளை வீடு இருக்கிறதே! அது எங்கே இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? ஐயா......" என்று விசாரித்தாள்.

"யாரையம்மா கேக்கறீங்க? வக்கீல் ஐயாவையா? காந்தி குல்லா கூடப்போட்டிருப்பாரே!...... என்று கேட்டான் வழிப்போக்கன்.

"ஆமாம், ஆமாம்" என்று ஆவலோடு சொன்னாள் சிவகாமியம்மாள்.

“இன்னம் பத்து கஜ தூரம் போகவேணுமுங்க. வீடு பங்களா மாதிரியிருக்கும்; ‘கடலகம்’ என்று கல்கூட அடித்திருக்கும்” எனச் சொல்லிவிட்டு, வண்டிக்காரனை நோக்கி, “கான்வென்ட் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே இருக்கிறது சாயபு! இவர்கள் போகிற வீடு. சதானந்தம் பிள்ளை பிரபல வக்கீலாச்சே! காங்கிரஸ் கூட்டங்களிலே கூடக்கலந்துகொள்வாரே! உனக்குத் தெரியாதா சாயபு!......” என்று சொன்னாள்.

“நம்பள்கி அதெல்லாம் தெரியாது, ஐயா! நாம்பள் பட்டணம் பக்கத்திலே இருக்கிறான்......” என்று சொல்லிக் கொண்டே வண்டியை நிறுத்தாமல் ஓட்டினான்.

வழிப்போக்கன் அவனுக்கு வீடு இருக்கும் இடத்தின் அடையாளத்தை விவரித்துவிட்டுப் போனான்.

“நான் காட்டுகிறேன், சாயபு! எனக்கு இப்போது இடம் தெரிந்து விட்டது” என்று சொன்னாள் சிவகாமியம்மாள்.

இதுவரை ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த மங்கையர்க்கரசி தாயை நிமிர்ந்து நோக்கி, “அம்மா! இடம் நெருங்க நெருங்க எனக்கு என்னவோ போல் இருக்கிறது, அம்மா!...” என்று குரலில் நடுக்கம் தொனிக்கக் கூறினாள்.

“போடி, பைத்தியமே! நீ எதற்காக இப்படி பயந்து சாகிறாய்? அக்கா வீட்டுக்குப் போகிறதற்கு இவ்வளவு அச்சமேன்? பெரியம்மாவைப் போலவே திலகவதியும் நல்லவள். நீ வேண்டுமானால் பாரேன்! கூடப் பிறந்த சகோதரிகூட அவ்வளவு அன்பாக இருக்கமாட்டாள். ரொம்பப் பிரியமாக அவள் உன்னிடம் இருப்பாள். அவள் அகமுடையானும் மிக நல்லவர். அப்படியில்லாவிட்டால், நான் உன்னை அவனிடம் அழைத்து வந்து விடுவேனா?......” என்று சிவகாமியம்மாள் ஆறுதல் மொழி கூறினாள்.

“நீங்க என்னதான் தைரியம் சொன்னாலும், எனக்கென்னமோ நெஞ்சு திக்திக்கென்றுதான் அடித்துக் கொள்

கிறது, அம்மா!... .. நான் இப்போதே சொல்கிறேன், நான் சில நாள் இங்கிருந்து பார்ப்பேன். எனக்குப் பிடிக்காவிட்டால், உங்களுடனேயே ஊருக்குத் திரும்பி விடுவேன். தெரிகிறதா! நீங்க என்னை விட்டுவிட்டு உடனே போய்விடக் கூடாது. ஒரு வாரமாயினும் இங்கு இருக்க வேண்டும். நான் பழகுகிற வரை......'' என்று விதிர் விதிர்ப்பு நீங்காமலே சொன்னாள்.

"நீ எப்படித்தான் இந்த உலகத்தில் வாழ்வையோ? பெண்ணே! என்னை உன் கிட்டவே இருக்கச் சொல்கிறாயே! நான் எவ்வளவு காலம் உன்னோடு இருக்க முடியும்? எனக்கோ காடு வாவா என்கிறது; வீடு போபோ என்கிறது......'' என்று கண்களில் நீர் துளிக்கச் சொன்னாள்.

மங்கையர்க்கரசி தாயின் வாயைக் கையால் பொத்தி, "நீங்க அப்படியெல்லாம் பேசப்படாது, அம்மா! நீங்க போய் விட்டால் எனக்கு என்னம்மா இருக்கிறது? உங்களை விட்டால் எனக்கு வேறு துணை யார் இருக்கிறார்கள்? அண்ணனை மலையாக நம்பியிருந்தேன். அவரோ என்னைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார். நீங்களும் கைவிட்டு விட்டால்......'' என்று உருக்கமாகக் கூறி வருகையில், சிவகாமியம்மாள் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கி, "நன்றாகச் சொல்கிறாயே, மங்கையர்க்கரசி! நானா உன்னைக் கைவிட்டுவிடுவேன்? அது எப்படி முடியும்? அம்மா! ஒரு நாளும் இல்லை. நான் உன்னைப் பட்டணத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டுப் போவதாலேயே மறந்து விடுவேன் என்று நீ எண்ணுகிறாயா? நான் என்னை மறக்கும் நிலை வந்தால்தான் உன்னையும் மறக்க முடியும். நான் உன்னை விட்டுப் போனால் என் உடல் தான் அங்கிருக்குமே யொழிய, உயிர் உன்னண்டைதான் சுற்றிக் கொண்டிருக்கும். மனம் உன்னைப்பற்றியே எண்ணித் துடித்துக் கொண்டிருக்கும். நான் அடிக்கடி வந்து உன்னைப் பார்த்து விட்டுப் போவேன். என்ன!......?'' என்று ஆறுதல் மொழி கூறினாள்.

மங்கையர்க்கரசி மேலே ஒன்றும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள், தலை குனிந்து யோசனையில் இருக்கும் மகளின் முகத்தையே சிறிது நேரம் கவனித்துக் கொண்டிருந்த சிவகாமியம்மாள், "வீணாக ஏதேதோ எண்ணி மனதை அலட்டிக் கொள்ளாதே. மங்கை! உனக்கு ஒரு குறைவும் வராது. நல்ல குணம் வாய்ந்த உனக்குக் கடவுள் துணையிருப்பார்..." என்று தேறுதல் சொன்னாள்.

மங்கையர்க்கரசி நிமிர்ந்து அன்னையை நோக்கினாள்' அவள் கண்களில் நீர் ததும்பியது.

"கண் கலங்காதே, கண்ணு! உன் அண்ணன் சரியாயிருந்தால் நீ இப்படி அவதிப்பட வேண்டியிராது... நீ இங்கு கொஞ்ச நாள் இரு. உனக்குப் பிடிக்காவிட்டால் எனக்குத் தெரிவி, உடனே நான் வந்து உன்னை அழைத்துப் போகிறேன்" என்று சமாதானஞ் சொன்ன சிவகாமியம்மாள், "உன் அண்ணனிடம் நீ மன வருத்தம் கொண்டிருப்பதால், கொஞ்ச நாள் தூர இருந்தால் நல்லதென்று நினைத்துத் தான், திலகவதி கடிதமெழுதியதுமே, உன்னைக் கொண்டு வந்துவிட ஒத்துக்கொண்டேன். இல்லையானால்..." என்று வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினாள். பிறகு அவள் ஏதோ நினைத்துக் கொண்டு, "இன்னொன்று சொல்கின்றேன். எனக்கென்னமோ நீ உள்ளூரிலே தனிக் குடித்தனம் நடத்த முற்படுவதில் கொஞ்சமும் இஷ்டமில்லை. அண்ணனுக்கு வீம்பாக இருக்க வேண்டுமென்று நீ எண்ணுகிறாய். ஆனால், அதனால் நம் குடும்பத்துக்கு எவ்வளவு கௌரவக் குறைவு என்று சிறுசாகிய உனக்குத் தெரியவில்லை. இதைவிட கண் மறைவாக இன்னொருவர் வீட்டில் நீ இருந்து காலந்தள்ளுவது நல்லது என்று எனக்குத் தோன்றியது. ஆனால் திலகவதி வீடு அன்னியர் வீடல்லவே! என் சொந்த அக்கா மகள் வீட்டில் நீ இருப்பதில் யாதொரு சௌகரியக் குறைவும் உனக்கு இருக்காது. அத்துடன் அக்கா வீட்டில் இருப்பது பற்றி யாரும் ஒரு குறையும் சொல்ல முடியாது..." என்று கூறினாள்.

"என்ன தான் இருந்தாலும் என்னைப் போன்ற ஒரு வயதுப் பெண் வேறொருத்தர் வீட்டில்—அதுவும் அத்தான் முறையுள்ளவர் வீட்டில் இருப்பதைப் பற்றி யாராயினும் அக்கப் போர் செய்தால் என்ன செய்வது? என்றே அஞ்சுகிறேன்..." என்று மங்கையர்க்கரசி வருத்தந் தோன்றக் கூறினாள்.

சிவகாமியம்மாள், "யார் என்ன சொல்லுவது? அத்தான் வீடாயிருந்தால் என்ன? எத்தனை பெண்கள் அக்கா புருஷன் வீட்டில்—மாமன் மகன் வீட்டில் இருக்கிறார்கள்? நீ பார்த்ததில்லையா? நீயாயினும் கலியாணமானவள்; இருபது வயதுக்கு மேற்பட்டவள். 'பெரிய மனுஷி' யான பெண்கள் பெற்றோர் இல்லாததால் அத்தான் வீட்டிலும் அம்மான் வீட்டிலும் இருந்து வருகிறார்கள். இதெல்லாம் இயற்கையே குறை சொல்கிறவர்கள் எதற்கும்தான் சொல்வார்கள். மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்று பயந்து கொண்டு காலங்கழிப்பதென்றால் மகளிராகிய நாம் வாழவே முடியாது. நல்லொழுக்கத்தினின்றும் வழுவாமலிருக்கிறோமா? என்று நம் மனச் சாட்சிக்கு அஞ்சி நடந்தோமானால் அதுவே போதும். மங்கையர்க்கரசி! இந்தக் கொள்கையை நீ எப்போதும் மனதில் வைத்துக் கொள்..." என்று பெரிய தத்துவ ஞானிபோல் உபதேசஞ் செய்யலானாள்.

"இந்த வூடுதானே? பெரியம்மா சொன்னே?" என்று வண்டிக்கார சாயபு கேட்ட கேள்வி இருவரையும் தன்னிலைக்குக் கொண்டு வந்தது. "நாம் பேசிக் கொண்டிருந்த விஷயம் வண்டிக்காரன் காதில் விழுந்து விட்டதோ! வண்டியில் இருக்கிறோம் என்றுகூட ஞாபகமில்லாமல் ஏதேதோ பேசிவிட்டோமே" என்று இருவருமே எண்ணினார்கள். மங்கையர்க்கரசி வெட்கத்தால் தலை குனிந்து கொண்டாள். சிவகாமியமமாள் மட்டும் வண்டிக்காரன் சாயபுவாதலால் நாம் பேசிக்கொண்டிருந்தது காதில் விழுந்திருந்தாலும் சரியாகப் புரிந்து கொண்டிருக்கமாட்டான் என்று தனக்குத்

தானே தேறுதல் செய்து கொண்டாள். ஆனாலும் அவன் முகத்தைக் கடைக் கண்ணால் ஆராயலானாள்.

"அடே! தள்ளி வந்துவிட்டாயே, அப்பா! அந்த முன் வீடு; எங்களைக் கேட்டிருக்கக் கூடாது?" என்றாள் சிவகாமி யம்மாள்.

"நம்பள்கி என்னா தெரியும்? நிம்பள் இல்லே உஷாராந்து சொல்லணும், நிம்பள் பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருந் தான். நாம்பள் ஜட்காவை ஓட்டிக்கிட்டே இருந்தான். நம்பள் மேலே தப்பு தண்டா இருந்தா ஒப்பிக்கறான். ஆயா சொல்லட்டும் ஞாயம்..." என்று சாயபு பாட்டுக்குப் பேசிக் கொண்டே குதிரையைப் பின்னுக்குப் போகச் செய்தான்.

"சரி, சரி, சாயபு! நிறுத்து வண்டியை; இந்தப் பங்களா வுக்குள்ளே ஓட்டிக்கொண்டு போய் 'நிறுத்து" என்று சிவகாமியம்மாள் கட்டளை யிட்டாள்.

சாயபு அவ்விதமே குதிரையை ஓட்டிக் கொண்டு போய் வண்டியை அம்மாளிகையின் முன் நிறுத்தினான்.

சிவகாமியம்மாள் உடையை ஒழுங்குபடுத்திக் கொண் டிருந்த மங்கையர்க்கரசியை நோக்கி, "இறங்கம்மா, மங்கை" என்று சொன்னாள். அதன்படியே இறங்கினாள். பின் தாயிடமிருந்து துணி மூட்டையை வாங்கிக் கொண்டு வண் டியை விட்டு நகர்ந்து நின்றாள்.

வண்டி பங்களாவினுள் நுழையும்போதே தோட்டவேலை செய்து கொண்டிருந்த தோட்டக்காரன் 'இவ்வளவு காலை யில் யார் வருகிறார்கள்? கட்சிக்காரர்கள் வருகிறார்களா?' என்று வேலை செய்வதை நிறுத்திவிட்டுக் கூர்ந்து பார்க்க லானான்; பெண்களாயிருப்பதுகண்டு, "வக்கீல் ஐயா வீட்டு மனுஷாள் போலிருக்கிறது" என்று எண்ணிக்கொண்டு வேடிக்கை பார்க்கலானான்.

வெளியே விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் வண்டி யைப் பார்த்துவிட்டு, "அம்மா. வண்டி வந்து நிக்குது.

யாரோ வர்ருப் போல்இருக்குது'' என்று கூறிக்கொண்டே உள்ளே ஓடினர்.

“திலகவதியின் பிள்ளைகள், நாம் வருகிறதை அவர்கள் தாயிடம் போய்ச் சொல்லுகிருர்கள்'' என்று கூறிக் கொண்டே சிவகாமியம்மாள் வண்டிக் கம்பியைப் பிடித்துக் கொண்டு படிமேல் காலை வைத்து மெல்லக் கீழே இறங்கினுள்.

மங்கையர்க்கரசி வீட்டு வாயிலைத் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்கள் தற்செயலாக மேலே பார்த்த போது, மேன் மாடியிலிருந்து யாரோ ஒருவர் தன்னையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டு நாணத்தால் சடக் கெனத் தலை கவிழ்ந்து கொண்டாள். ஆனுல் அடுத்த கணம் அவள் உள்ளம், ‘அது யார்? ஒரு வேளை அம்மா சொன்ன அத்தானு யிருக்குமோ?' என்று எண்ணியவாறு அவரைக் கடைக்கணிக்க ஆவல் கொண்டது.

சிவகாமியம்மாள் வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்து அனுப்பி விட்டு, “மங்கையர்க்கரசி! அப்படிச் சிலை போல் நிற்கிருயே? வா; உள்ளே போகலாம்'' என்று கூறியவாறு அவள் கரத்தைப் பற்றிக் கூப்பிட்டாள்.

இதற்குள், ‘அத்தானுய்த்தான் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் வேறு யார் அவ்வளவு சுதந்திரமாக மேன் மாடியில் இருக்க முடியும்?'' என்று தனக்குள் முடிவுக்கு வந்த மங்கையர்க்கரசி, ‘அவரைச் சரியாகப்பார்க்க வில்லையே? அவர் எப்படியிருக்கிருர் என்று பார்க்கலாம்' என்ற எண்ணத்தோடு நிமிர்ந்து பார்க்க முயன்ருள். ஆனுல் அடுத்த கணம் நாணமும் அச்சமும் அவளைப்பிடித்து அழுத்தி விட்டது. நாம் அவரைப் பார்ப்பதைக் கண்டு விட்டால் நம்மைப் பற்றித் தப்பாக நினைத்துக் கொண்டால் என்ன செய்வது? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

தாயுடன் சென்று கொண்டே இருந்த அவள், "அம்மா! மேலே நின்றிருக்கிறரே! யாரம்மா அது! அத்தாஞ?" என்று கேட்டாள். சந்தேகமின்றி அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவளுடைய வெட்க உணர்ச்சியையும் மீறி அவ்விதம் கேட்கச் செய்தது.

"அட, பார்த்ததுமே தெரிந்து கொண்டாயே, மங்கை!" என்று புன்சிரிப்புடன் கூறிய சிவகாமியம்மாள், "அவர்தான் உன் அத்தான். அவர் வீட்டுக்கு வரப் பயந்தாயே! அவர் எப்படியிருக்கிறார், பார்! பெரிய மனுஷர் மாதிரியில்லையா?" என்று கேட்டாள்.

அன்னையுடன் பேசுவதுபோல் வாயசைத்துப் பாவனை செய்தவாறு மங்கையர்க்கரசி மாடி மீதிருக்கும் சதானந்தம் பிள்ளையைப் பார்க்க மெல்லத் தலை நிமிர்ந்தாள்.

இச்சமயத்தில், " வாங்க சித்தி! வா, மங்கையர்க்கரசி!" என்று வரவேற்புக் கூறிக் கொண்டே முப்பது வயதுக்கு மேற்பட்ட மங்கை யொருத்தி அவர்களை எதிர் கொண்டு அழைக்க வந்தாள். "நீங்க வருவது பற்றி ஒரு கடுதாசி போடக் கூடாதா? ஸ்டேஷனுக்கு ஆள் அனுப்பி இருப் போமே" என்று அவள் அங்கலாய்த்துக் கொண்டாள். சிவகாமியம்மாள் அவள் கைகளைப் பற்றியவாறே, "இல்லை, திலகம், பயணம் திடீரெனக் கூடிற்று. புறப்பட்டு விட்டோம். அதுக்கென்னஇப்போ?" என்று சமாதானஞ் சொல்லிவிட்டு, "குழந்தைகள் எல்லாம் சௌங்கியந்தானே! உனக்கு இப்ப உடம்புக்கு ஒன்றுமில்லையே...?" என்று க்ஷேமம் விசாரிக்கலாஞள்.

"எல்லாம் சௌக்கியந்தான் சித்தி" என்று சுருக்கமாகப் பதிலளித்து விட்டு, மங்கையர்க்கரசியை ஒரு விதமாகப் பார்த்த வண்ணம், "என்ன, மங்கையர்க்கரசி வாய் திறக்காம லிருக்கிருள்? பெரியவளாய் விட்டாளே! அதஞலா?" என்று புன் சிரிப்புடன் கேட்டாள்.

"முதன் முதலாக அத்தான் வீட்டுக்கு வருகிருள் இல்லையா? அதனுல்தான் வெட்கம்..." என்று மகளைப் பார்த்துக் கொண்டே திலகவதிக்குப் பதிலளித்தாள் சிவகாமியம்மாள்.

மங்கையர்க்கரசி தலையைக் குப்புறக் கவிழ்த்துக் கொண்டாள்.

"மங்கை முன்னைக்கு இப்போ இளைச்சுப்போயிருக் காளே?" என்று திலகவதி அவளை ஏற இறங்கப் பார்த்த வாறே கேட்டாள்.

"கொஞ்சம் இளைப்புத்தான்" என்று சிவகாமியம்மாள் இழுப்புடன் சொல்லி நிறுத்திஞள்.

திலகவதி, வந்திருப்பவர்களை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருக்கும் சிறு பிள்ளைகளை நோக்கி, "என்ன, பார்க்கிறீர்கள்? உங்க பாட்டி, சின்னம்மா! ஊரிலிருந்து வந்திருக்கிருர்கள்" என்று சிரித்துக் கொண்டே அறிமுகப்படுத்திஞள்.

"கடைக்குட்டி, சிவகுமாரனை மீறி விட்டானே!" என்று வியப்புணர்ச்சியுடன் வேடிக்கையாகச் சொன்ஞள் சிவகாமியம்மாள்.

மங்கையர்க்கரசி பிள்ளைகளை ஆசையோடு நோக்கிஞள்.

"சரி, சரி, வாங்க; முதலிலே குளித்துவிட்டு சிற்றுண்டி சாப்பிட்ட அப்புறம் எல்லாம் பேசலாம்' என்று திலகவதி கூறி அவர்களைப் பின்கட்டுக்கு அழைத்துப் போஞள்.

# 2

மேன்மாடியில் முன் வராந்தாவில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்தார் சதானந்தம் பிள்ளை. தங்கள் பங்களாவுக்குள் ஏதோ வண்டி வரும் சப்தங் கேட்டு விட்டு, யார் வருகிறது என அறிய அவர் எழுந்து முன்வந்து பார்த்தார். அவர் பார்வையில் முதலில் பட்டது வண்டியிலிருந்து அப்போதுதான் இறங்கி நின்ற மங்கையர்க்கரசி தான். முன்பின் தெரியாத யாரோ ஒரு இளம் பெண்ணைக் கண்டதும் அவர் வியப்புற்று மீண்டும் பார்க்கலானார். அதே சமயத்தில் மங்கையர்கரசியும் தற்செயலாக மேலே நோக்க இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டன. மங்கையர்க்கரசி நாணத்தால் உடனே தலையைத் தாழ்த்திக்கொண்டாள். அவரும் ஒரு பெண்ணை—அறிமுகமில்லாத ஒரு மங்கையை நோக்குவது சரியல்ல என்ற எண்ணத்தோடு தம் பார்வையைத் திருப்பிக் கொண்டார். ஆனால், அவர் கண் வாயிலாக நெஞ்சத்தில் பதிவாகிய அவள் உருவம் சோக சித்திரமாக அவருடைய மனக்கண் முன் பிரதிபலித்தது. ஒரு கணத்தில் அவருடைய நெஞ்சத்தை நெகிழ்ந்து உருகச் செய்துவிட்ட அவ்வுருவத்தை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டுமென்று அவருடைய மனதில் ஆவல் எழுந்தது. தாம் உட்கார்ந்திருந்த இடத்துக்குத் திரும்பிய அவர் மீண்டும் நடந்து மெல்லத் தலையை நீட்டிப் பார்க்கலானார். அச்சமயம் தம் மனைவியான திலகவதி அவர்களை வரவேற்று உபசரித்தவாறு உள்ளே அழைத்துச் செல்வதைக் கண்டு, 'அட! குமரியும் கிழவியுமாகவல்லவா வந்திருக்கிறார்கள். யார் இவர்கள்? எங்கிருந்து வந்திருக்கிறார்கள்? இப்படி யாரும் வருவார்கள் என்று அவள் சொல்லவில்லையே!' என்று அவர் பலவிதமாக எண்ணினார்.

அவர் மங்கையர்க்கரசியை இரண்டாவது முறை பார்த்ததானது நிழலுருவத்தின் (போட்டோ) மீது ஓவியனொருவன் வண்ணந் தீட்டி நன்றாக விளங்கச் செய்தது

போலாய் விட்டது. மங்கையர்க்கரசியின் உருவம் அவ்வளவு அழுத்தமாக அவர் உள்ளத் திரையில் பதிந்து விட்டது. "இளமை கொழிக்கும் எழில் தோற்றம்! ஆனால் சோபை யிழந்த மதிமுகம். வெள்ளைக் கலையுடுத்தி வாணி போல் விளங்கும் அவ்வனிதையின் வதனத்தில் வாட்டம் ஏன்?" அந்தச் சில விநாடிகளில் அவளைக் குறித்து அவருடைய மனம் என்னென்னவோ கேள்வியெல்லாம் அவரைக் கேட்டு நச்சரித்து விட்டது. தான் பார்த்த பெண்—தன் உள்ளத்தைக் கவர்ந்தபெண்—அமங்கலி—விதவை—என்று அறிய அவருக்கு வெகு நேரமாகவில்லை. 'ஐயோ! இவ்வளவு இள வயதில் இந்த அலங்கோல வைதவ்யம்! பாழாய்ப் போன நம் நாட்டுக்கு இது ஒரு பெருமை போலும்' என்று அவர் மனம் அங்கலாய்த்தது.

'இந்தப் பெண் யார்? உடன் வந்திருக்கும் கிழவி யார்! திலகவதிக்கு என்ன வேண்டும்? எங்கிருந்து வந்திருக்கிறார்கள்? என்ன காரியமாக வந்திருக்கிறார்கள்?' என்று கேள்விகளைச் சரமாரியாகப் போட்ட அவர் உள்ளம் அடுத்த கணம், 'இதென்ன பைத்தியக்காரக் கேள்வி? சுற்றத்தார் சொந்தக்காரர்களா யிருந்தால் சாதாரணமாக வருவார்கள் தான். காரியமில்லா விட்டால் உறவினரைப் பார்க்க வரக் கூடாதோ?' என்று பதில் கேள்வி போடலாயிற்று.

இவ்விதம் மன அரங்கத்தில் நடக்கும் போரைக் கவனித்துக் கொண்டிருந்த சதானந்தம் பிள்ளையை, "ஊரி லிருந்து யாரோ வந்திருக்கிறாங்க. நீங்கள் பார்த்தீங்களா அப்பா?" என்று கணேசன் வந்து கேட்ட கேள்வி திடுக் கிட்டு விழிப்புறச் செய்தது.

"யாரு ராஜா!"

"யாரோ பாட்டியாம்; சின்னம்மாவாம். அம்மா சொன்னாங்க."

"பாட்டியா?" என்று யோசனையோடு கேட்ட சதானந்தம் பிள்ளை, "பாட்டியுடன் வந்திருப்பது யாரென்று சொன்னார்கள்? சின்னம்மா என்றா?..." என்று கேட்டார்.

''ஆமாம்' என்றான் சிறுவன்.

சதானந்தம் பிள்ளை மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். தந்தை ஏதோ சிந்தித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த கணேசன் அவ்விடத்தை விட்டு வெளியேற முயன்றான். இச்சமயத்தில் கோகிலா அங்கு வந்து, ''அப்பா; அம்மா கூப்பிடறாங்க, பலகாரம் சாப்பிடறதுக்கு'' என்று கூப்பிட்டாள்.

''என்னம்மா!'' என்று துணுக்குற்றுக் கேட்ட சதானந்தம்பிள்ளை, ''ஓ! சிற்றுண்டி சாப்பிடக் கூப்பிடுகிறார்களா? இதோ வந்து விட்டேன், கோகிலா!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

கூடத்தில் சிவகாமியம்மாளுடனும், மங்கையர்க்கரசியுடனும் ஏதோ பேசிக் கொண்டிருந்த திலகவதி, கணவன் வருகையைக் கண்டதும், ''வாங்க, யாரு வந்திருக்கிறதுன்னு பார்த்தீங்களா?...'' என்று புன்னகையுடன் கேட்டாள்.

''யாரு? தெரியவில்லையே! நம்ம ஊரிலிருந்து வந்திருக்கிறார்களா?'' என்று அவர்களை ஒருவிதமாகப் பார்த்தவாறு கூறினார். இதுதான் சமயமென்று அவருடைய கண்கள், மங்கையர்க்கரசியை நன்றாகப் பார்க்கலாயின. ''அவர்களுக்குப் பலகாரம் கொடுத்தையா? முதலில் அதைக் கவனி. மற்றதெல்லாம் அப்புறம் பேசலாம்'' என்று உபசாரமாகக் கூறினார்.

மாடிப் படியிலிருந்து யாரோ இறங்கி வரும் காலடி யோசையைக் கேட்டதும் திரும்பிப் பார்த்த மங்கையர்க்கரசி அக்காவின் கணவன் வருவதையறிந்து நாணிக் கோணித் தாயின் பின்னே ஒதுங்கி நின்றாள். அவள் கண்கள் மட்டும் அவர் பக்கம் சுழன்று கொண்டிருந்தன. இந்நிலையில், மனைவியின் பேச்சைச் சரியான வாய்ப்பாகக் கொண்டு சதானந்தம் பிள்ளையின் பார்வை தன்மீது விழுவதைக் கண்டதும், வெட்கத்தால் முகம் சிவக்கத் தலை கவிழ்த்துக் கொண்டாள்.

இதையெல்லாம் கவனியாத திலகவதி கணவனை வியப்பாக நோக்கி, "சித்தியைக் கூடவா தெரியல்லை உங்களுக்கு? வயதாக ஆக, மறதி அதிகமாய் விட்டதே!" என்றாள்.

"யாரு, சின்ன அத்தையா இது? அடையாளந் தெரியவில்லையே! முன்னைவிட...." என்று பேச்சை மழுப்பி நினைவில்லாமையை மறக்க முயன்றார்.

"நான் எப்பவும் இருக்கிற மாதிரிதான் இருக்கிறேன், மாப்பிள்ளை! நீங்கதான் மிகவும் தளர்ந்துபோய் இருக்கிறீர்கள். தலையிலே நரைகூடத் தலைகாட்டத் தொடங்கியிருக்கிறதே!..."

"தாத்தாவாய் விட்டார் என்கிறீர்களா? சித்தி! கோகிலாவுக்கு இன்னும் இரண்டொரு வருஷத்திலே கல்யாணமாகி அவள் வயிற்றிலே பிள்ளை பிறந்தால், இவர் தாத்தா தானே!..."

மங்கையர்க்கரசி தவிர மற்றவர்களனைவரும், இவளுடைய நகைச் சுவையில் ஈடுபட்டனர். அவள் மட்டும் இதழ்களில் மலர்ந்த புன்னகையை உதட்டினால் மறைத்துக் கொண்டாள்.

"பார்த்து நெடுநாளாச்சு இல்லையா? அதனால்தான் திடீரென இனம் தெரியவில்லை, அத்தை!..." என்று சதானந்தம் பிள்ளை சமாதானம் சொல்ல முயன்றவாறு, "ஊரிலே எல்லோரும் சௌக்கியந்தானே! மைத்துனப் பிள்ளை எப்படியிருக்கிறார்?..." என்று குடும்ப நலம் விசாரித்தார்.

"எல்லோரும் சௌக்கியந்தான்" என்று சிவகாமியம்மாள், ஒரே வார்த்தையில் சுருக்கமாகப் பதிலளித்தாள்.

திலகவதி மங்கையர்க்கரசியின் அருகு போய் நின்று, "இவள் நம்ம சித்தி பெண்ணு. அஞ்சு வருஷத்துக்கு முன்னே மாயவரத்திலே ஒரு கலியாணத்துக்குப் போனோமே! ஞாபகமிருக்கா? மங்கையின் கலியாணத்துக்குத்தான்" என்றாள்.

"அப்படியா?" என்று அசட்டுச் சிரிப்புடன் கேட்டார். அவர் மனம், "ஐயோ, அதை ஏன் இவள் இப்போது ஞாபகப் படுத்துகிருள்" என்று அங்கலாய்த்தது.

சிவகாமியம்மாள், "உங்களுக்குக் கல்யாணம் நடக்கும் போது மங்கைக்கு மூணு வயதிருக்கும்..." என்ருள்.

"அப்படியா? கலியாணத்தின்போதுகூட நான் சரியாகப் பார்க்கவில்லை..." என்ருர் சதானந்தம்.

"மங்கை பெரியவளாகி விட்டாளோ இல்லையோ? அதுதான் அத்தானைப் பார்த்து வெட்கப்படுகிருள்...சிறுசா யிருக்கும்போதே உங்களைப் பார்த்தால் ஓடியொளிவாள். இப்போது சொல்லணுமா?" என்று கூறிய திலகவதி, மங்கை யர்க்கரசியின் தோள்களை அன்புடன் பற்றி, "அத்தானைக் கண்டால் ஏன் இப்படி கூச்சப்படுகிருய்? உன்னை என்ன அவர் விழுங்கியா விடுவார்?...சும்மா இப்படி வா மங்கை!" என்று சொன்னுள்.

சிவகாமியம்மாள், "அவளும் பெரியவளாகிக் கலி யாணங் கட்டிக்கொண்டு வாழ்ந்து தீர்த்து விட்டாள் இல்லையா?" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொல்லிப் பின் "அவள் இந்த நிலைக்கு வந்தபின், இப்போது தானே உங்களையெல்லாம் பார்க்கிருள்? அதுதான் இவ்வளவு சங்கோஜப் படுகிருள்?" என்று ஏதோ சொல்ல வேண்டும் எனச் சொன்னுள்.

'இந்தப் பெண்களுக்கே புத்தி கிடையாது என்று பெரியவர்கள் தெரியாமலா சொன்னுர்கள். எந்தச் சமயத் தில் எதைச் சொல்லணும்? எதைப் பேசணும்? என்று தெரியவில்லையே?...' என்று சதானந்தம் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

தாயின் அசட்டுப் பேச்சு மங்கையர்க்கரசியை ஒரு கணத்தில் துயரத்தில் மூழ்கடித்து விட்டது. அவள் குமுறி வரும் துக்கத்தை மறைக்க வெகு பாடுபட்டாள். மற்றவர்கள்

அவளுடைய அப்போதைய நிலையை உணரவில்லை. மானத தத்துவத்தைத் தமது பரந்த அனுபவத்தால் ஒருவாறு உணர்ந்திருக்கும் சதானந்தம் பிள்ளை அவளுடைய துயர நிலையை ஒரு நொடியில் உணர்ந்து கொண்டார். ஆகவே, அவர் அவளை மேலும் சங்கடமான நிலையில் வைக்காமல் தவிர்க்க வேண்டி, "சரி, திலகம்! அவர்களுக்கு ஆவன வற்றைக் கவனி. நான் காபி சாப்பிட்டுவிட்டுச் சற்று வெளியே போக வேண்டும்" என்று கூறியவாறே மெல்ல அவ்விடத்தை விட்டுப் போகலானார்.

"சித்தி, இருங்கள். நான் போய் மாப்பிள்ளையை அனுப்பிவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கணவன் பின்னே செல்ல அடியெடுத்து வைத்த திலகவதி, "கோகிலா, இங்கே வா! பாட்டியையும் சித்தியையும் கூட்டிக்கொண்டு போய் பலகாரம் கொடு, இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிச் சென்றாள்.

எதிர் அறையிலிருந்து மங்கையர்க்கரசியை பார்த்துக் கொண்டிருந்த கோகிலா உடனே வெளியே வந்து, "வாங்க சித்தி, வாங்க பாட்டி" என்று புன்முறுவலுடன் கூறியவாறு, மங்கையர்க்கரசியின் கரத்தை அன்புடன் பற்றினாள்.

"என்ன மங்கையர்க்கரசி, குழந்தை கூப்பிடுகிறாள். எங்கோ கவனமாய் நின்றிருக்கிறாயே! வா போகலாம்" என்று சிவகாமியம்மாளும் அழைக்கலானாள்.

துயரத்தில் உள்ளத்தைத் தோயவிட்டுத் தன்னை மறந்திருந்த மங்கையர்க்கரசி ஸ்பரிசத்தாலும் பேச்சாலும் உணர்வு பெற்றாள். இமைகளில் பனித்திருந்த கண்ணீரை முந்தானையால் மெல்லத் துடைத்துக் கொண்டே கோகிலாவுடன் போகலானாள்.

# 3

செந்தோம் மாதா கோவில்மணி நான்கடித்தது. அப்போதும் வெய்யிலின் கொடுமை தணியவில்லை. செந்தோம் ஹைரோட் பாரிசத்தில் வசிப்பவர்களுக்கு மட்டும் கடற் காற்று வரப்பிரசாதம் போல் வீசிக் கொண்டிருந்தது. ஜன நெருக்கம் அதிகமில்லாத அந்தப் பகுதியில் அந்நேரத்தில் நிலவிய அமைதி மனதுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதா யிருந்தது. மஞ்சள் வெய்யில் பட்டுப் பளபளத்துக் கொண்டிருந்த நீலக் கடலின் அழகில் திளைக்கவோ அல்லது அக்கடல் நீரில் வெள்ளித் துண்டங்கள் போல மின்னித் துள்ளிக் குதிக்கும் மீன்களைக் கொத்தித் தின்னவோ அப்பிரதேசத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த கடற்பறவைகள் இசைத்த இசை கான அமுதமாயிருந்தது.

உடம்பு அசதி காரணமாக உறங்கிக் கொண்டிருந்த திலகவதியை மாதா கோவில் மணி அடித்த ஓசை தட்டி எழுப்பிவிட்டது. கட்டிலைவிட்டு இறங்கியவள், "மங்கை, மங்கை" எனக் கூப்பிட்டுக் கொண்டே எழுந்து வரலானாள். ஆனால், அவளுக்குப் பதில் கிடைக்கவில்லை.

"மங்கை எங்கே போனாள்? ஒரு வேளை உறங்குகிறாளா?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டே நடந்தாள்.

குழாயடியில் பற்றுச் சாமான்களைத் துலக்கிக் கொண்டிருந்த பணிப்பெண் எசமானி தானாகப் பேசிக் கொண்டு வருவதைக் கேட்டு, "அவங்க சமையக் கட்டில் இருக்காங்க, அம்மா" என்று கூறினாள்.

"ஓ! அப்படியா? காபி போடுகிறாய் போலிருக்கு" என்று மெல்லச் சொல்லிய திலகவதி குழாயண்டைபோய் முகத்தைக் கழுவிக்கொண்டு சமையலறைக்குப் போனாள்.

மங்கையர்க்கரசி அடுப்புக்கு முன் பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். திலகவதி வருவதை அவள்

உணரவேயில்லை. காலடியோசைகூட அவளை விழிப்புறச் செய்யவில்லை. இந்நிலை திலகவதிக்கு ஒரே வியப்பை விளைவித்தது. ஆகவே அவள், "மங்கை, மங்கை" என்று மெல்லக் கூப்பிடலானாள். மூன்று நான்கு முறை அழைத்த பின் தான் மங்கையர்க்கரசி தன்னுணர்வு பெற்றாள். உடனே அவள் துணுக்குற்று பரபரப்புடன் முந்தானையால் கலங்கியிருந்த தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளுடைய இச்செயல் திலகவதிக்கு மேலும் வியப்பையும் திகைப்பையும் அளித்தது.

"ஏன், மங்கை? அழுது கொண்டிருந்தாயா? என்ன?" என்று கேட்டாள் திலகவதி.

"வாங்க, அக்கா" என்று கூறிக் கொண்டே எழுந்து நின்ற மங்கையர்க்கரசி, "என்ன கேட்டீர்கள்?" என்றாள்.

"அழுது கொண்டிருந்தாற்போலிருக்கிறதே?"

"இல்லையே, அக்கா!" என்று கூறிக்கொண்டே வெளியே எரிந்து வந்துகொண்டிருந்த விறகைத் தள்ளுவது போலத் திரும்பிக் குனிந்து உட்கார்ந்தவாறு முகத்தை மறைத்துக் கொள்ளலானாள்.

"முகங்காட்டுகிறதே! ஏன் மறைக்கப் பார்க்கிறாய், மங்கை?"

"அதெல்லாம், ஒன்றுமில்லை, அக்கா! அடுப்பை ஊதிய போது தீப்பொறி பறந்து வந்து கண்ணில் பட்டுவிட்டது. அதனால்தான்..."

திலகவதி அருகு சென்று இறங்கிக் குனிந்திருந்த அவளுடைய முகத்தைப் பிடித்து நிமிர்த்தி, "மங்கை, ரொம்ப சாமர்த்தியமாகப் பேசுகிறாயே! பட்டணத்துக்கு வந்து பழகிக் கொண்டாயா? என்ன?" என்று புன்முறுவலோடு கூறினாள்.

மங்கையர்க்கரசியால் அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

"எழுந்திரு; மங்கை! காபிக்கு இதற்குள் என்ன அவசரம்?" என்று கூறியவாறே திலகவதி மங்கையர்க்கரசியின் தோள்களைப் பற்றி எழும்பினாள்.

"குழந்தைகள் வரும் நேரமாய்விட்டதே, அக்கா? பஜ்ஜி போடலாமென்று..."

"இப்பத்தானே நாலடித்தது. அவர்கள் வர இன்னும் ரொம்ப நேரமிருக்கிறது, மங்கை. தண்ணீர்க் குடத்தை அடுப்பின் மேலே வைத்துவிட்டுவா, இப்படி!"

திலகவதி வற்புறுத்திச் சொல்லிய பின், மங்கையர்கரசியால் மீற முடியவில்லை. அவள் பின்னே பேசாமல் நடந்தாள்.

கூடத்துக்கு வந்ததும் திலகவதி ஆழ்ந்த யோசனையோடு மங்கையர்க்கரசியின் முகத்தைப் பார்த்தவாறு, "உட்கார், மங்கை" என்று கூறிக் கொண்டே அமர்ந்தாள்.

எதிரில் உட்காரப் போன மங்கையர்க்கரசி, திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், "இரு, அக்கா! ஓவல் போட்டுக் கொடுக்க மறந்துவிட்டேன். ஒரு நொடியில் கொண்டு வந்து விடுகிறேன்......" என்றாள்.

"பரவாயில்லை, அப்புறம் குடிக்கிறேன், நீ உட்கார்" என்று கூறி அவள் கையைப் பற்றி அமர்த்தினாள் திலகவதி.

வேறு வழியின்றி மங்கையர்க்கரசி உட்கார்ந்தாள். ஆனால் திலகவதியை ஏறிட்டுப் பார்க்க அவள் வெட்கப் பட்டாள்.

சில விநாடிகள் அவர்களிடையே மௌனம் நிலவியது. மங்கையர்க்கரசியின் முகத்தை ஊடுருவிப் பார்த்த திலகவதி, "மங்கை, என்னிடம் ஒளிக்காமல் சொல்லு. ஏன் நீ அழுது கொண்டிருந்தாய்......?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அக்கா!"

"இல்லை; நீ ஏதோ மனதில் நினைத்துக் கொண்டு குமுறுகிறாய்?......"

மங்கையர்க்கரசி தலை குனிந்துகொண்டாள்.

"மங்கை, உண்மையைச் சொல். உனக்கு இங்கு குறை ஏதேனும் இருக்கிறதா? அல்லது இங்கே இருக்க உனக்குப் பிடிக்கவில்லையா? அப்படி ஏதேனும் இருந்தால் நீ தாராளமாக என்னிடம் சொல்லலாம். நான் வித்தியாசமாக எண்ணிக் கொள்வேனோ? கோபித்துக் கொள்வேனோ? என்று பயப்படவேண்டியதில்லை..."

"என்ன அக்கா, ஏதேதோ சொல்கிறீர்களே?..."

"பின் என்ன? நீ எதுவும் சொல்லாமல் இருந்தால் நான் வேறு எப்படி எண்ணிக் கொள்வது?......"

"இங்கு எனக்கு ஒரு குறையும் இல்லை, அக்கா! அப்படி எனக்கு இங்கே இருக்கப் பிடித்தமில்லாமலிருந்தால் அம்மா ஊருக்குப் போனபோதே நானும்கூடப் போயிருப்பேனே!..."

"அதுதானே நானும் கேட்கிறேன்...இப்பச் சொல்லு மங்கை! உன் துயரத்துக்குக் காரணமென்ன, சொல்லு; என்னால் அதைப் போக்க முடியுமா என்று பார்க்கிறேன். நான் உன் சகோதரியல்லவா? என்னிடம் எதுவும் சொல்லலாம். சங்கோஜப்படுவதற்கே நியாயமில்லை..."

"என் பேச்சை நம்புங்கள், அக்கா! இருந்தாற்போலிருந்து கண் கலங்கியது. காரணம் ஒன்றுமேயில்லை..."

மங்கையர்க்கரசி இவ்வளவு தூரம் சொல்லிய பிறகு மேலும் வற்புறுத்திக் கேட்க, திலகவதி விரும்பவில்லை. ஆகவே, "ஒரு வேளை ஊர் நினைவு வந்து வருந்தினாயோ என்று கருதினேன்..." என்று கூறிப் பேச்சை முடிக்க முயன்றாள்.

"ஊரில் யார் இருக்கிறார்கள், அம்மாவைத் தவிர? அம்மா இப்பத்தானே போனார்கள்? இதற்குள் அவர்களை நினைப்பதற்கு என்ன...?"

திலகவதி இடைமறித்து, "என்ன அப்படிச் சொல்கிறாய்? மங்கை, உன் உடன் பிறந்த அண்ணன் இல்லையா? அருமை அண்ணியில்லையா? மற்றும் உற்றார் உறவினர்..."

மங்கையர்க்கரசி, "அக்கா! உங்களை மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்...யார் பேச்சை எடுத்தாலும் தயவு செய்து அண்ணன் பேச்சை மட்டும் எடுக்காதீர்கள்! அந்தச் சண்டாளனால் தான்..."

சாந்தமே உருவமாக விளங்கிய மங்கையர்க்கரசி இவ் விதம் ஆத்திரமாகப் பேசுவதைக் கேட்டுத் திலகவதி பேராச் சரியத்தில் ஆழ்ந்தாள். "மங்கை, மடத்தனமாகப் பேசி உன் மனதைப் புண்படுத்திவிட்டேன். மன்னித்து விடு—சித்தி விஷயத்தைச் சொன்னார்கள்; இந்தக் காலத்தில் உடன் பிறந்தவர்களைக் கூட நம்புவதற்கில்லை......போகட்டும்; உன்னைப் பிடித்த சனி விட்டது என்று எண்ணிக் கொள், இனிமேல் நீ யாதொன்றுக்கும் கவலைப்படாதே. உன் ஆயுசு முழுதும் இங்கேயே இருந்து கழித்துவிடலாம். நான் முன் னேயும் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் சொல்லு கிறேன். நினைவில் வைத்துக் கொள். என் மூச்சு இருக்கும் வரைக்கும் உனக்கு யாதொரு குறைவும் இருக்காது. ஏன்! அதற்கு அப்புறம்கூட உனக்குக் குறைவு இருக்காது என்று உறுதியாகச் சொல்வேன். உன் அத்தானும் மிக நல்லவர். பிள்ளைகளும் உதார குணமுடையவர்கள். இப்போதே அவர் கள் அனைவரும் உன்மீது மிகவும் பிரியமாயிருக்கிறார்கள். இனி மேலும் உன்மீது அன்பு அதிகமாகுமே யொழிய, குறை வதற்கு இடமில்லை......ஆகவே, இது உன் வீடு, இங்கிருப்பது எல்லாம் உன்னுடைய சொத்து; ஆதலால், உன இஷ்டப்படி சுதந்திரமாக எதுவும் செய்யலாம். எப்படியும் உசிதம் போல் நடந்து கொள்ளலாம். உனக்கு ஏதாயினும் வேண்டுமென் றால் தாராளமாக என்னைக் கேள்; அல்லது அத்தானிடம் சொல்லு. இல்லை; பெரிய பிள்ளை சிவகுமாரனைக் கேட்க லாம். கூச்சப்படவேண்டாம். உனக்கு மனக்குறை யுண்டா

கும்படியாக......" என்று பரிவுணர்ச்சியுடன் பேசிக் கொண்டே போனாள்.

இச்சமயத்தில் கணேசன் புத்தகப் பை தோளில் தொங்கத் துள்ளியோடி வந்து திலகவதியின். நீண்ட பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான். அவன்-பின்னாலேயே கோகிலா புத்தக அடுக்கைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

கணேசன் புத்தகப் பையைக் கழற்றி ஒரு மூலையில் தூக்கி எறிந்து விட்டு, "சித்தி! காபி" என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தான்.

"பார்த்தாயா, மங்கை......! கணேசன் யாரைக் காபி கேட்கிறான்? என்னைக் கேட்டானா, பார்த்தாயா? எல்லாப் பிள்ளைகளுமே... .."

மங்கையர்க்கரசி வெட்கத்துடன் தலை குனிந்து பின் கணேசனைப் பார்த்து, "காபி போடலையே!......" என்று கூறிச் சிரித்தாள்.

"ஊஉம், பொய் சொல்றே, சித்தி!" என்று கூறிக் கொண்டே அவள்மீது தாவி அவளைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு, "காபி கொடுத்தாத்தான் உன்னை விடுவேன், பலகாரம் கூடக் கொடுக்கணும். பசிக்குது சித்தி" என்று கொஞ்சலோடு சொன்னான்.

இதற்குள் கோகிலாவும் புத்தகங்களை வைத்து விட்டு வந்து, தாயின் பக்கத்தில் நின்றவாறே, மங்கையர்க்கரசியைக் கனிவோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இல்லை, கண்ணு, நிசமாகத்தான் சொல்கிறேன். காபி இன்னம் போடவில்லை" என்று கணேசன் கன்னங்களைச் செல்லமாகப்பற்றிக் கொண்டு சொல்லிய மங்கையர்க்கரசி, திலகவதி பக்கந் திரும்பி, "அம்மாதான்......அவர்களைப் போய்ப் பிடித்துக்கொள்: விடாதே!" என்று புன் சிரிப்போடு சொன்னாள்.

கணேசன் தலையை யாட்டி, "அம்காவண்டை போனு பிரப்பம்பழம் கெடைக்கும். அதெல்லாம் முடியாது. நீ தான் கொடுக்கணும், சித்தி. உன்னே விட மாட்டேன்......" என்று சொன்னுன்.

இதைக் கேட்டு எல்லோரும் கொல்லெனச் சிரித்தனர். "பார்த்துக்கோ, மங்கை" என்ற திலகவதி, "சரி, சரி! கணேசா! சித்தியை விடு. உனக்கு ஓவல் போட்டுக் கொடுக்கச் சொல்கிறேன். தின்ன ஏதாயினும் வேண்டு மென்ருல் பீரோவைத் திறந்து பழங்கள், கேக், பிஸ்கட் எல்லாம் இருக்கு. உனக்கு எது வேண்டுமோ, எடுத்துக் கொள். சித்திக்கு இங்கே வேலே இருக்கு. தொந்திரவு செய்யாதே, போ..." என்று சொன்னுள்.

"சும்மா உட்கார்ந்திருக்கிறதுதான் வேலேயா?..." என்று முனகிக் கொண்டே மங்கையர்க்கரசியை விட்டு எழுந்தான்

"கோகிலா, தம்பிக்குப் பட்சணம் எடுத்துக்கொடுத்து ஓவல் கலக்கிக் கோடு' என்று கூறி அனுப்பினுள் திலகவதி.

மங்கையர்க்கரசி கணேசனும் கோகிலாவும் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின் அவள் திலகவதி பக்கம் திரும்பி, "ஏன் அக்கா! காபி போட வேண்டாமா! குழந்தைகளே ஓவல் குடிக்கச் சொல்லி அனுப்பிவிட்டீர்களே! அடிக்கடி கேக்கும் ஓவலும் சாப்பிட்டால் உடம்புக்கு ஆகுமா? ஓவலும் பிஸ்கட்டும் வயிற்றைக் கட்டக் கூடியது என அத்தான் அடிக்கடி சொல்கிருரே!......" என்று சொன்னுள்.

"அடிக்கடி எங்கே சாப்பிடச் சொல்கிறேம். இன்று ஒரு நாள் தின்னச் சொல்வதால் ஒன்றும் கெட்டுப் போகாது. ஒரு வேளை யாயினும் அதுவும் உனக்கு மனசு நன்ருயில்லாத இந்தச் சமயத்தில் நீ ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டு மென்றுதான் இவ்விதம் சொன்னேன்."

"இந்தப் பாழுங் கட்டைக்கு ஓய்வு வேறே வேண்டுமா?"

"ஒரு வயசுப் பொண்ணு வாயிலிருந்து வருகிற பேச்சா யில்லையே இது! கிழங் கெட்டுகள் பேசுகிற விரக்திப் பேச்சு போலல்லவா இருக்கிறது?......"

"ஏதாயினும் வேலை செய்துகொண்டே இருந்தால்தான் மனசு ஒரு கட்டுக்குள் அடங்கியிருக்கிறது அக்கா! இல்லா விட்டால்......"

மங்கையர்க்கரசி இடைமறித்துப் பேசிய இப்பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே திலகவதி பேசத் தொடங்கி னாள். "எனக்கென்னமோ உன் போக்கே பிடிக்கவில்லை. வந்ததிலிருந்து பார்க்கிறேன்; நன்ருக உண்டு உடுத்து, கட்டிக் கழிக்க வேண்டிய இந்த வயதிலே ஒரு வேளை சாப்பிடு வது, நார்மடிச்சீலை, வெள்ளைப் புடவை, அல்லது தோம்புப் புடவை உடுத்துவது, பாயைக் கூடப் போட்டுக் கொள்ளாது தரையில் படுப்பது போன்ற பைத்தியக்கார செயல்கள்.

மங்கையர்க்கரசி ஆச்சரியந் தாங்காமல், "என்ன அக்கா, இப்படிப் பேசுகிறீர்கள்? பட்டணத்திலே வந்து வாழத் தொடங்கிய பின், நம் ஆசார மெல்லாம் உங்களுக்குக் கொனஷ்டையாகத் தென்படுகிறதா?..."

"வெளியுலக விவகாரமே தெரியாமல் கிராமாந்தரங் களில் கிணற்றுத் தவளைகள் போல் வாழ்ந்தோமே! அந்தக் காலத்திலே, இந்த ஆசாரமெல்லாம் சரியாயிருந்திருக்கலாம். இப்போது உலகம் போகிற வேகமான போக்கிலே காதை மூக்கை மூனியாக்கிக்கொண்டு சரியாக உண்ணுது உடுத்தாது வாழ்வது அநாகரிகம் என்றுதான் எனக்குத் தோன்று கிறது......"

"ஐயோ, அக்கா!"

"நான் தீர்மானித்து விட்டேன், மங்கை! நீ இனி மேல் நான் சொல்கிறபடிதான் நடக்கவேண்டும். அத்தானிடம்

சொல்லி யனுப்பி யிருக்கிறேன், உனக்கு. நல்ல 'பார்ட்ட'ஞக ஒரு பொன் சங்கிலி வாங்கி வரச் சொல்லி, அதை நீ கழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். பட்டுப் புடவை தரிக்காவிட்டாலும் கொறனுட்டுப் புடவை யாயினும் இனி உடுத்த வேண்டும்..."

"அக்கா! அக்கா! உங்களுக்குப் புண்ணியமுண்டு. மறுபடியும் நகை நட்டுப் போட்டுக் கொள்ளும்படி என்னை வற்புறுத்தாதீர்கள். கொஞ்ச நஞ்சம் எனக்கு இருந்த ஆசையையும் ஆண்டவன் அண்ணன் மூலமாக அடியோடு போக்கி விட்டான், அக்கா! இனி..."

மங்கையர்க்கரசி திலகவதியின் கைகளைப் பற்றிக் கொண்டு கெஞ்சினுள்.

திலகவதி வியப்பும் வருத்தமும் தொனிக்க, "அப்படியாளுல் அண்ணன் ஆடையாபரணங்களைக் கூடவா எடுத்துக் கொண்டார்? நிலபுலத்தைத்தான் உனக்குச் சொல்லாமல் அடமானம் வைத்துவிட்டதாக மட்டுமல்லவா சித்தி சொன்னுர்கள்?"......என்று கேட்டாள்.

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கிளறுகிறீர்கள்? அக்கா! எனக்குத் தெரியாமல் நிலத்தை அடமானம் வைத்துப் பணம் வாங்கிக் கொண்டதைக் கூட நான் பெரிதாகப் பாராட்டவில்லை. குடும்பக் கஷ்டத்துக்கு ஏதோ செய்துவிட்டார் என்றிருந்தேன். நான் அவரிடம் கொடுத்து வைத்திருந்த செயின், தோடு, வளையல், பரியப் புடவை எல்லாவற்றையும் என்னிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் விற்றுச் சுட்டுக் கரியாக்கிவிட்ட கொள்ளையை நினைத்தால்தான் மனம் குமுறுகிறது. மைத்துனன்மார் ஏதாயினும் வல்லடி வழக்குக்கு வரப் போகிறுர்கள் என்று அண்ணனிடம் அடைக்கலம் புகுந்தால்......" என்று ஆற்ருமையோடு பேசிக் கொண்டே போனுள்.

இச்சமயத்தில் சதானந்தம் பிள்ளை, "யோக்கியனுக்கு இந்த உலகத்தில் இடமேயிராது போலிருக்கிறதே! இக்காலத்

தில் நடந்துவரும் அக்கிரமத்தைப் பார்த்தால், உத்தமர்கள், தியாகிகள் என்று நம்பியிருந்தவர்களெல்லாம் செய்து வருகிற காரியத்தைக் கவனித்தால், இனி இந்த உலகத்தில் யாரை நம்புவதென்றே தோன்றவில்லையே! இனி, காங்கிரஸ் காரன் என்று சொல்லிக் கொண்டு வெளியே தலைகாட்ட முடியாது போலிருக்கிறதே!......நம்ப பயல் சிவகுமாரன் சொல்வதை என்னமோ என்று எண்ணியிருந்தேன். கடைசியாகப் பார்த்தால்......'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார். அவரைப் பின் தொடர்ந்து ஒரு கனவான் வந்து கொண்டிருந்தார்.

சதானந்தம் பிள்ளையின் குரலைக் கேட்டதுமே மங்கையர்க்கரசி துடித்துப் பதைத்து எழுந்து விட்டாள். அவர் உள்ளே வருவதற்குள் அவள் உள்ளறைக்குள் ஓடி விட்டாள். திலகவதி தன் கணவனுடன் யாரோ வருவதைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

# 4

சதானந்தம் பிள்ளை மேல் உத்தரீயத்தை எடுத்து ஸ்டாண்டில் மாட்டியவாறே, "திலகம்! காபி கொண்டு வரச் சொல்லு, எங்கள் இரண்டு பேருக்கும். சிற்றுண்டி ஏதேனும் செய்திருக்கிறதா? இருந்தால்......'' என்று தம் மனைவியை நோக்கிக் கேட்டார்.

திலகவதி, "இல்லை; இன்றைக்கு அஸ்வாரஸ்யமாய் இருந்துவிட்டோம்......இதோ ஒரு நொடியில் செய்து கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனாள்.

கனவான், "ஒன்றும் வேண்டாம், அண்ணா! வீட்டை விட்டுப் புறப்படும்போதுதான் சாப்பிட்டு விட்டு வந்தேன்.

காபி வேண்டுமானால் கொடுக்கச் சொல்லுங்கள்...'' என்று கூறினார்.

சதானந்தம் பிள்ளை சட்டையைக் கழற்றிக் கொண்டே, "நீங்கள் உட்காருங்கள், முதலியார்வாள்! உங்களுக்குத் தெரியாதா? வீட்டுக்கு வந்துவிட்டோமானால், நம் விருப்பம், தேவை, அதிகாரம் எல்லாம் ஒன்றும் எடுபடாது என்று. வீட்டு ராணிகள் வைத்ததுதான் சட்டம். அதை மீறினே மானால் சாப்பாடு கூடக் கிடைக்காது. வெளியிலேதான் நம்முடைய அமர்த்தல் ஆட்சி எல்லாம் நடக்கும். இங்கே நமது தேவைகளைச் சொல்ல வேண்டும், அவர்கள் கொடுப் பதை மறுபேச்சுச் சொல்லாமல் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்...'' என்று புன்சிரிப்புடன் சொன்னார்.

மாசிலாமணி முதலியார் கல கலவெனச் சிரித்தவாறு "அது என்னமோ வாஸ்தவம்தான், அண்ணா'' என்றார்.

உள்ளே அடியெடுத்து வைத்த திலகவதி தன் கணவன் பேச்சைக் கேட்டு நின்று, "நாங்கள் என்ன அவ்வளவு பொல்லாதவர்களா......?'' என்று மெல்லச் சொன்னாள்.

இதற்குள் மங்கையர்க்கரசி ஒரு தட்டில் ஓமப்பொடி பிஸ்கெட், மலைவாழைப்பழம், சாற்றுக்கொடி ஆகியவைகளை வைத்துக் கொண்டு வந்து திலகவதியிடம் கொடுத்தாள், இவளுடைய சமயோசிதப் புத்தியைக் கண்டு திலகவதி வியப்புற்றாள். அடுத்து இரண்டு டம்ளர்களில் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, "இதோ ஒரு நிமிஷத்தில் காபி கொண்டு வருகிறேன், அக்கா!'' என்று கூறிவிட்டுப் போனாள் மங்கையர்க்கரசி.

திலகவதி இவற்றைக் கொண்டு வந்து வட்ட மேஜை மீது வைத்தாள்.

"கையைக் கழுவிக் கொள்ள 'பேஸின்' கொண்டு வரச் சொல்லு, திலகம்'' என்று கூறிய சதானந்தம் பிள்ளை,

"நீங்க சாப்பிடுங்கள் முதலியார்வாள்! நான் இதோ ஒரு நொடியில் முகத்தை அலம்பிக் கொண்டு வந்து விடு கிறேன்" என்று கூறிக் கொண்டு உள்ளே போகலானுர்.

"அவசர மொன்றுமில்லை, அண்ணு! நீங்களும் வாருங்கள்" என்று சொன்ஞர் மாசிலாமணி முதலியார்.

சதானந்தம் பிள்ளை மாலைக் கடன்களை முறையாக முடித்துக்கொண்டு வந்து உட்காருவதற்குள் மங்கையர்க் கரசி கோகிலாவிடம் காபியைக் கொடுத்து அனுப்பினுள்.

இருவரும் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டே பேசலாயினர்.

"என்ன அண்ணு, நீங்க சொல்வது உண்மைதானு? கோவிந்தசாமி கோனுரா இவ்விதம் கட்சி கட்டுகிருர்? தான் முதல் அமைச்சராக வரவா சட்டசபை அங்கத்தினர் களுக்கு ஆசை வார்த்தை பல கூறுகிருர்? ஆச்சரியமாயிருக் கிறதே......"

"அப்படியானுல் நான் பொய்யா சொல்கிறேன் என் கிறீர்கள்? கோனுர்தான் இவ்வளவும் செய்கிருர் இந்த குலமால்களுக் கெல்லாம் அந்த ஐயன் தூண்டுகோல்" என்று பதிலளிக்கத் தொடங்கிய சதானந்தம் பிள்ளை "நான் ஒன்று பார்த்து விட்டேன் முதலியார்வாள்! என் அனுபவத் திலே. எப்பேர்ப்பட்ட மனுஷனையும் சந்தர்ப்பம் வந்தால் தான் சரியாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஒவ்வொருத் தனும் ஒவ்வொரு விஷயத்திலே பலவீனமாய்த்தான் இருக் கிருன். 'எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்கிறதோ! யார் கண்டார்கள்?' என்று தெரியாமலா சொன்ஞர்கள் நம்ம பெரியோர்கள்..." என்று ஆழ்ந்த சிந்தனையோடு கூறிஞர்.

மாசிலாமணி முதலியார்: "தங்களுடைய அனுபவத் திலே கண்டதை, கேட்டதை, தாங்களே அனுபவித்ததைத் தானே, ஆப்த வாக்கியங்களாக, பழமொழிகளாக, நீதி நூல் களாக, தரும சாஸ்திரங்களாகச் சொல்லி வைத்தார்கள்

நம்ம முதாதையர்! வாழ்க்கையில் இல்லாததை ஒன்றும் சொல்லவில்லையே? மேலே நீறு பூத்திருக்கிறது என்று எண்ணிக் கையை வைத்து விடாதே, தம்பி! உள்ளே நெருப்பு கனன்று கொண்டிருக்கிறது என்று அவர்கள் எச்சரித்து விட்டுப் போயிருக்கிறார்கள். உலக விஷயங்கள், பொருள்கள், ஒவ்வொன்றையும் ஊடுருவிப் பார்க்க வேண்டும்; பயன் படுத்த வேண்டும் என்று அவர்கள் உபதேசித்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை வைத்துப் பார்த்தால், மனிதர்கள்கூட நீறு பூத்த நெருப்புப் போன்றவர்கள்தாம்......''

சதானந்தம் பிள்ளை: ''அதில் சந்தேகம் என்ன!''

மாசிலாமணி முதலியார், ''ஆனால் பஞ்சசீலத்தில் தங்களைப் புடம் போட்டு மாற்றில்லாத பசும் பொன் போன்று பக்குவமாக்கிக் கொண்ட புனிதர்கள் இப் பூவுலகில் இல்லாமல் இல்லை, நல்லொழுக்கம் என்னும் நீரால் நெருப்புப் போன்ற தீக்குணங்களையும் செயல்களையும் அவித்துக்கொண்டு முழு நீராக விளங்கும் செம்மல்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.''

சதானந்தம் பிள்ளை: ''லட்சத்தில் ஒருவர்—இல்லை; கோடியில் ஒருவர்—இருப்பார்களா என்று எனக்கு ஐயமா யிருக்கிறது.''

மா : ''இன்றைய நிலையை மனதில் கொண்டு அவ்விதம் எண்ணுகிறீர்கள், அண்ணா! நல்லவர்கள் நாலு பேராயினும் இருப்பதால்தான், நாடு—இல்லை;—உலகம் நிலைத்திருக்கிறது. இல்லையானால்...''

ச: ''உலகம் என்றால் நல்லதும் கெட்டதும் விரவித்தா னிருக்கும்என்று எனக்குத் தெரியாமலில்லை. நல்லவற்றைவிட தீயவைகளே அதிகம் என்பதையும் நான் நன்கு அறிவேன். ஆனால் இன்று உலகம் போகும் போக்கைப் பார்த்தால்—அதிலும் நம் நாடு இருக்கும் நிலைமையைப் பார்த்தால், நூற்றுக்குஒருவர் இல்லை; ஆயிரத்துக்கு ஒருவர் நல்லவரென்று சொல்லக்கூடிய விதமாக இருப்பார்களோ என்று சந்தேகிக்

கிறேன். மற்றத் தேசங்களைவிட நம் நாடு ஞானத்திலே, பரமோனத்திலே பேர்போனது என்றும் பாரத புண்ணிய பூமியென்றும் பாராட்டிச் சொல்லிக் கொள்கிறோம். அப் பேர்ப்பட்ட நாட்டில்தான்...''

மா: ''எனக்குக்கூட அதை நினைத்தால்தான் வருத்தமா யிருக்கிறது, அண்ணு! மிலேச்ச நாகரிகம் மிகுந்த மேனுடு களிலே—கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று லோகாயதக் கொள்கையை மேற்கொண்டு கூத்தடிக்கும் மற்றத் தேசங்களிலே மக்கள் எப்படி நடந்தாலும் ஒழுக்கம் எப்படி இருந்தாலும் அதைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. ஒழுக்கத்துக்கு உயர்வு கொடுத்தது நம் நாட்டிலே, நல் லொழுக்கமும் மானமும் உயிரைவிட மேலானவை என்று கருதிக் கடைப்பிடித்துவந்த நம் நாட்டிலே, அன்பே கடவுள், அறிவே கடவுள் என்ற அறைந்த நாட்டிலே—அறிவு அருகி விட்டது, ஒழுக்கம் ஒழிந்துவிட்டது, அன்பு வம்பாகி விட்டது என்றல், காலத்தின் அலங்கோலம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்...''

ச: ''எல்லாம் அந்த மேனுட்டு மிருக நாகரிக உறவின் விளைவுதான். வேறென்ன?...''

மா: ''அந்த ஐரோப்பியர்களின் அநாசாரத்தை—ஏகாதி பத்திய எதேச்சாதிகாரத்தை ..அறவே ஒழித்துக் கட்டவே தானே காந்தி அடிகள் கிளம்பினர்? அயோக்கியத்தனத் துக்கும் அட்டூழியங்களுக்குமே இருப்பிடமான அரசியலிலே அவர் அஹிம்ஸா தத்துவத்தையும் சத்தியத்தையும் புகுத்திப் புனிதப் படுத்தினர்; ஆயுத பலத்தைக் கொண்ட ஆங்கி லேயர்களை ஆத்ம பலத்தால், அஹிம்ஸை என்னும் ஆயுதத் தால் விரட்டியடித்தார்; பிற நாடுகளைப் போல, இரத்தப் புரட்சியின்றி அறப் புரட்சியாலேயே மிக எளிதாகச் சுதந் திரம் வாங்கித் தந்தார். இதுவரை மற்ற மகான்கள் சாதித் காத—மகாஞானிகளால் செய்ய முடியாத—மதத்தான காரி யங்களை மகாத்மா காந்தி சாதித்ததைப் பார்த்தபோது,

இவரால் பொய்யிலும்,புரட்டிலும்,கொடுமையிலும் உழன்று வரும் உலகமே விமோசனமடையும்; சண்டையும் சச்சரவும் தீர்ந்து சமாதானமும் சாந்தியும் நிலவும்; பழையபடி மிருகமாக ;மாறிவரும் மனிதர்கள் மனிதர்களாகவே மாறு வார்கள்; மனித குலமே நன்மையும் நல்வாழ்வும் பெறும் என்று நம்பினேம். அதற்குள்......''

''அந்தத் துர்ப்பாக்கிய சம்பவத்தை இப்போது நினைவு படுத்தாதீர்கள்'' என்று இடைமறித்துப் பேசத் தொடங்கிய சதானந்தம் பிள்ளை, ''மனித சமுதாயத்தை வாழ்விக்க வந்த மகான் திடீரென மறைந்து விட்டதனுல்தான், இவ்வளவு அக்கிரமங்கள் நம் நாட்டில் நடக்கின்றனவோ என்றுகூட நான் எண்ணுகிறேன். ஒரு வேளை அவர் இருந்தும் இப்படி காங்கிரஸிலே அடங்காப் பிடாரிகளும் அக்கிரமக்காரர்களும் அதிகரித்துவிட்டதைக் கண்டிப்பாராஞல் கட்டாயம் உண்ணுவிரதமிருந்து உயிரையே மாய்த்துக்கொண்டிருப் பார். அந்த மட்டும் இந்த அவல நிலையைக் காணுமல் போய்விட்டாரே......!'' என்ருர்.

மாசிலாமணி முதலியார் மௌனமாக அவர் சொல் வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். சதானந்தம் இப்படி யெல்லாம் ஆகுமென்று தெரிந்துதான் போலும் அவர் அரசியல் சுதந்திரம் கிடைத்ததும், காங்கிரஸ் ஸ்தாபனத் தைக் கலைத்துவிடச் சொன்னுர். மற்றத் தலைவர்கள், அவ ருடைய யோசனையைக் கேட்டு நடக்காமல் போனதால்தான் இந்த அலங்கோல நிலை ஏற்பட்டிருக்கிறது. அயோக்கியர் களெல்லாம் பதவிகளுக்காக அடைக்கல மடைவதால்தான் காங்கிரஸ் என்ருல் கால் காசுக்கும் நம்புவாரில்லாமல் போய் விட்டது. காங்கிரஸ் என்ற பெயரையும் சொல்லிக் கொண்டு கள்ள வாணிபஞ் செய்கிருர்கள் கயவர்கள். சிறிது காலத் துக்கு முன் வரை, காங்கிரஸ் தொண்டன் என்ருல், கடவு ளுக்குச் சமமாக நினைத்தார்கள்; 'ஒழுக்கத்துக்கு உறைவிட மானவர்கள்; தன்னலமில்லாத தயாபரர்கள்; பிறருக்குச் சேவை புரிவதையே பேருகக் கொண்ட புண்ணியவான்கள்'

என்று மக்கள் மகிழ்ந்தார்கள். கிராமங்களுக்குப் போனல். அடடா! காங்கிரஸ்காரர்களுக்கு எவ்வளவு மரியாதை? என்ன......?''

"அத்தான் சொல்வது அவ்வளவும் நிசம், அக்கா! எங்க ஊர்ப் பக்கம் காங்கிரஸ்காரர்கள் வந்துவிட்டால் பார்க்க வேண்டுமே! அவர்கள் கூட்டங்களில் பேசி விட்டுப் போகும் வரை ராஜோபசாரம்தான். அவர்கள், கள் குடிக்காதீர்கள் என்று சொல்லி எத்தனையோ பேர் குடிப்பழக்கத்தை விட்டு விட்டார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டு ராட்டை சுற்ருத பெண்கள்கிடையாது. இப்போதோ! அந்தவெட்கக்கேட்டைச் சொல்லவே முடியாது. காங்கிரஸ் அரசாங்கம் வந்து கள்ளுக் கடையை மூடிவிட்டது என்று சொல்கிருர்கள். ஆனல் ஊர்களில் ஒரு கடைக்கு ஒன்பது கடையாய்விட்டது. பெண் ஆண் எல்லாம் கள்ளச்சாராயம் காய்ச்சுகிருர்கள். பதனீர் இறக்குவதாகச் சொல்லிக் கள் இறக்கிப் பகிரங்கமாக விற்கிருர்கள். இந்த வேலையைச் செய்பவர்கள் யாருமில்லை. இன்று புதிதாகக் காங்கிரஸில் சேர்ந்திருப்பவர்களே! இப் போது காங்கிரஸ்காரர் என்று சொல்லிக் கிராமத்துப் பக்கம் யாரும் போகமுடியாது. மக்களுக்கு அவ்வளவு வெறுப்பு அவர்கள் மீது......'' என்று அடுத்த அறைப்பக்கம் இருந்த மங்கையர்க்கரசி திலகவதியிடம் சொன்னள்.

மாசிலாமணி முதலியாருடன் ஆழ்ந்து பேசிக் கொண் ருந்த சதானந்தம் பிள்ளையின் செவிகளில் மங்கையர்க்கரசி யின் இனிய குரல் நுழையவே, அவர் தாம் பேசுவதை நிறுத்திவிட்டு அவளுடைய பேச்சை உன்னிப்பாகக் கேட்கலானர்.

சதானந்தம் பிள்ளை திடீரென மௌனமாய் விட்டது மாசிலாமணி முதலியாருக்கு வியப்பூட்டியது. அவர் காரணமறியாமல், "என்ன அண்ணு! இருந்தாற் போலிருந்து யோசனையில் ஆழ்ந்து விட்டீர்கள்......?'' என்று கேட்டார்.

மங்கையர்க்கரசியின் பேச்சில் மனதை முற்றும் பறி

கொடுத்திருந்த சதானந்தம் பிள்ளை, உறக்கத்தில் இருந்து திடுக்கிட்டு விழித்துப் பார்ப்பவர் போல், "ஒன்றுமில்லை அண்ணு! ஏதோ சொல்ல நினைத்தேன். இதற்குள்......" என்று இழுப்புடன் சொல்லி நிறுத்தினுர்.

உள்ளே திலகவதி, "அட, அத்தானை மிஞ்சிவிடுவாய் போலிருக்கே மங்கை, நீ? ஏது, ஒன்றும் தெரியாதவள் போல் உம்மென்று இருக்கிருய். வாயைத் திறந்தால் தானே தெரிகிறது, நீ நன்ருக எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்கிருய் என்று .."

"போங்க, அக்கா, பரிகாசம் பண்ணுகிறீர்கள். அதற்குத் தான் நான்.. ..."

"அதற்குத்தான் நீ வாயைத் திறக்கிறதில்லை என் கிருயா?.. ... அது போகட்டும்; மங்கை! நீ எது வரை படித்திருக்கிருய்?......"

"நான் படித்த படிப்பைச் சொல்லு அக்கா! எட்டாவது படித்து விட்டு ஒன்பதாவது வகுப்புக்குப் போனேன். அதற்குள்......" என்று கூறி மங்கை நாணம் முகத்தில் தெரியத் தலை குனிந்து கொண்டாள்.

"கிராமங்களில் அது ஒரு தொல்லை. வயது வந்து விட்டால் வெளியே படிக்கப் போகக் கூடாதென்று பெண்களுக்கு கட்டுப்பாடு. காய்கறித் தோட்டத்துக்குப் போகலாம்; மாந்தோப்புக்குப் போகலாம்; தண்ணீர் முகந்துவர, ஆறு குளங்களுக்கு ஐங்காத தூரம் கூடப் போக லாம். ஆனுல், பள்ளிக்கூடம் மட்டும் படிக்கப் போகக் கூடாது பருவமான பெண்கள். நன்ருயிருக்கிறதில்லையா நியாயம்?......"

மங்கை மௌனமாயிருந்தாள்.

திலகவதி, "இது உனக்கு நியாயமாகத் தோன்றுகிறதா? மங்கை! பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போனுல்தானு பெண்கள் கெட்டு விடுவார்கள்? தோப்பு துறைக்குப்

போனால் கெட்டுவிட மாட்டார்களா? அங்கெல்லாம் அவர்களை ஆண் பிள்ளைகள் பார்க்கமாட்டார்கள் போலும்!''

"பெரியவர்கள் ஏதோ காரணத்தை உத்தேசித்துத் தான் இவ்விதம் கட்டுப்பாடு செய்திருப்பார்கள்...''

"பெரியவர்களுமாச்சு; சின்னவர்களுமாச்சு. முட்டாள் தனமாகக் கட்டுப்பாடுகள் செய்தவர்கள் யாராயிருந்தால் என்ன? இந்தக் கட்டுப்பெட்டிகளெல்லாம் இந்தக் காலத்தில் இருக்க லாயக்கில்லாதவர்கள்......'' என்று திலகவதி உணர்ச்சியோடு பேசினாள்.

இவைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சதானந்தம் பிள்ளை புன்சிரிப்பு செய்தவாறே எழுந்து கையைக் கழுவிக்கொண்டு, "அந்தப்புரத்துப் பெண்கள் பேசத் தொடங்கிவிட்டால், நமக்குப் பேச விஷயம் ஏது?...'' என்று கூறினார்.

உள்ளே பெண்கள் பேசுவதை இதுவரையும் கவனியாத மாசிலாமணி முதலியார், "என்ன அண்ணை, சொல்கிறீர்கள்? என்னமோ சிரிக்கிறீர்களே! நான் ஏதேனும் அசட்டுத்தன மாகப் பேசி விட்டேனா......?'' என்று கேட்டார்.

"அசட்டுத் தனமாகப் பேசுவதற்கு நீங்கள் மகாசபை அங்கத்தினர் இல்லையே!'' என்று சதானந்தம் பிள்ளை கூறி மேலும் சிரித்தார்.

விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலே மாசிலாமணி முதலியாரும் அவருடன் சேர்ந்து நகைக்க லானார்.

# 5

பின்னர், சதானந்தம் பிள்ளையும் மாசிலாமணி முதலியாரும் நாற்காலியில் வந்து உட்கார்ந்தனர். அப்போதும் பிள்ளையவர்களின் செவிகளில் மங்கையர்க்கரசியின் மொழிகள் இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தன; ஆதலால், அக்குரல் இனிமையிலேயே மனத்தை லயிக்க விட்டு மௌனமாயிருந்தார்.

மாசிலாமணி முதலியார் பிள்ளையவர்களின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். எப்போதும் ஏதேனும் 'தொண தொண' வென்று பேசிக் கொண்டிருக்கும் இயற்கையுடைய அவருக்கு இம்மௌன நிலையை நீண்ட நேரம் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆகவே அவர் பிள்ளையவர்களை நோக்கி, மெல்லப் பேச்சுக் கொடுக்கத் தொடங்கி, "என்ன அண்ணே, இருந்தாற் போலிருந்து தக்ஷிணாமூர்த்தி கோலம் கொண்டு விட்டீர்கள். பக்தனொருவன் நான் காத்துக் கிடக்கிறேன், தங்களின் கருணை கடாட்சத்துக்கு. திருவாய் மலர்ந்து அருளுங்கள். சொல்லாமல் சொல்லும் தங்கள் மௌன நிலையை அடியேனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை" என்றார் நகைத்தவாறே.

முதலியாருடைய நையாண்டிப் பேச்சு பிள்ளையவர்களை விழிப்புற வைத்தது. "ஏதோ யோசனை யுண்டாயிற்று. அதிலேயே ஆழ்ந்து விட்டேன், முதலியார்வாள்! வேறொன்று மில்லை" என மங்கையர்க்கரசியின் பேச்சு நினைவிலிருந்து விடுபட முயன்றவாறே கூறினார்.

"என்ன யோசனையோ?" என்று முதலியார் கேட்கப் போகும் சமயத்தில், பிள்ளையவர்கள், "அத்துடன் இன்றெல்லாம், கோனார் விவகாரத்தைப் பற்றியே எங்கும் யாருடனும் பேச வேண்டியதாய் விட்டது. எங்கோ எவனோ ஏதோ செய்துவிட்டுப் போக, அதற்கெல்லாம் நாம் கண்டவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

'ஊரான் உழுது விட்டுப் போக, பண்ணைக்காரன் தண்டவரி செலுத்த வேண்டியிருக்கிறது' என்று பழமொழி சொல்லுவார்களே! அதுபோல மற்றவன் செய்யுந்தப்புத் தண்டாவுக் கெல்லாம் நாம் சமாதானஞ் சொல்லி மன்னிப் புக் கேட்க வேண்டியதாய் இருக்கிறது. இதையெல்லாம். பார்த்தால்......'' என்று பேசி வருகையிலேயே, முதலியார் இடைமறித்து, "கேட்பவர்கள் கண்டவர்களைக் கேட்பார் களா? கேட்பதற்கு உரிமையுடையவர்களிடத்தில் தான் கேட் பார்கள். ஆகவே இங்கு நடக்கும் காங்கிரஸ் விவகாரகளுக் குச் சமாதானமோ அல்லது பதிலோ சொல்லும் கடமை உங்களுக்கு இருக்கிறது......'' என்று கூறினார்.

"அதென்ன, அப்படிச் சொல்லுகிறீர்கள்? முதலியார் வாள்! நானென்ன... ..''

பிள்ளையவர்களை மேலே பேசவிடாமல், முதலியார் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கி, "நீங்களில்லாமல், நேற்று பட்டம் பதவிகளுக்காக வந்தவனெல்லாமா—பதில் சொல் வான்? தமிழ் நாட்டில் காங்கிரஸ் என்றால், நீங்கள், சிதம்பரம், சிவம், பாரதி, கல்யாணசுந்தரம், வரதராசன், இராமசாமி, ஸ்ரீநிவாசன், சத்தியமூர்த்தி, இராஜகோபால் ஆகிய பத்து பேர்தானே! காங்கிரஸை தேச மகாசபை என்று கூறும்படியான பெருமையையேற்படச் செய்தவர்கள் நீங்கள் அல்லவா! சுதந்திர தாகத்தையும் தேச பக்தியையும் தமிழ் மக்களுக்குக் காங்கிரஸ் வாயிலாக உண்டாக்கியவர்கள் நீங்கள் அல்லவா! காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றி ருக்கும் இன்று வேண்டுமானால், பல்லாயிரம் பேர் காங்கிரஸ் காரர் என்று சொல்லிக் கொண்டு முன் வரலாம். 'இம் மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம்' என்றிருந்த அன்னிய அரசாங்க அடக்கு முறைக் கொடுமையினால், நாட்டு மக்கள் அல்லல் பட்டுக் கொண்டிருந்த காலத்தில், சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் நீங்கள் அல்லவா! இன்று சட்டசபை யங்கத்தினர்களாய்,

மந்திரிகளாய் இருப்பவர்கள் எல்லோருமா சுதந்திர வீரர் களாயிருந்தனர்? அவர்களை மக்கள் கேட்பதற்கு?''

பிள்ளையவர்கள் கலகலவென்று நகைத்து, "பேஷ் முதலி யார்வாள்! நன்ருகப் பேசுகிறீர்களே! வரப் போகும் பொதுத் தேர்தலில் உங்களைப் பிரசாரஞ் செய்ய வைத்தால் நீங்கள் ஆதரிக்கும் அபேட்சகர் கட்டாயம் வெற்றி பெறு வார்.........'' என்று கூறினர்.

முதலியார் அவர் பேசுவதைக் காதில் வாங்கிக் கொள் ளாமலே, "அக்காலத்தில் உங்கள் போன்ற தலைவர்கள் பேச்சைக் கேட்டுத்தானே தமிழ் மக்கள் காங்கிரஸை ஆதரித் தார்கள்? உங்களைப் போன்ற தலைவர்கள் நடத்திய போராட்ட இயக்கங்களில் பெருவாரியாகக் கலந்து கொண்டார்கள்? போலீஸ் குண்டாந் தடிகளால் அடிபட்டு இரத்தஞ் சிந்தினர்கள்? துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக் காகி உயிர் இழந்தார்கள்? சிறைவாசம் ஏற்ருர்கள்? இவ்வள வும் எதற்காக? தங்களுக்குக் காங்கிரஸ் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கும்? சுகவாழ்வு ஏற்படச் செய்யும் என்றுதானே! இவ்விதம் அவர்கள் எதையெதை எதிர்பார்த்துக் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தார்களோ, அவற்றிற்கெல்லாம் நேர்மாருக இன்று காரியங்கள் நடைபெற்ருல், நாட்டு மக்களுக்குக் கோபமுண்டாகத்தானே செய்யும்? அரசியல் சுதந்திரம் கிடைத்தும் வாழ்க்கையில் சுதந்திரம் கிடைக்க வில்லை யென்ருல், சுகவாழ்க்கை கிட்டவில்லை யென்ருல், இந்த அவல நிலையை எப்படி ஏற்பார்கள்? அடிமைகளாய் இருந்த காலத்தில் அனுபவித்த வாழ்க்கை யின்பங்களைக்கூட இன்று அனுபவிக்க முடியாமல், துன்பத்தின்மேல் துன்பமாக, வறுமையும் பஞ்சமும் வாட்ட அவதியுறும் நிலையை எப்படி சகிப்பார்கள்? எங்கும் கள்ள வணிகர்களும், பேராசைப் பேயர்களும் கொள்ளையடிப்பதற்கா, தங்களின் சுகவாழ்க்கை யைச் சூறையாடுவதற்கா, இவர்கள் அந்தக் காலத்தில் உங்கள் பேச்சைக் கேட்டு உங்களைப் பின்பற்றி வந்து துன்பங் களையும் கஷ்டங்களையும் வலிய ஏற்ருர்கள்? சுயநலக்காரர்

களின்—சத்தர்ப்பவாதிகளின் பதவிப் போட்டிக்காக—அவர்களுடைய சுகபோகங்களுக்காக—நாட்டு மக்களின் வாழ்க்கை பணயமாக வைக்கப்பட வேண்டுமா? என்ன! ஆகவே தங்களுடைய இன்றைய துன்பங்களுக்குக் காரண கர்த்தர்களாக இருக்கும் சுயநலப் பிண்டங்களை—கயவர்களை—ஏன் காங்கிரஸில் சேர்த்தீர்கள்? சட்டசபையில் அமர்த்தினீர்கள்? மந்திரிகளாக்கினீர்கள்? என்று, பொதுமக்கள் உங்களைக் கேட்கத்தான் செய்வர்?...''

சதானந்தம் பிள்ளை, "கேட்கட்டும்! கேட்காமல் போகட்டும், இன்று நடக்கும் பகற் கொள்ளைகளுக்கும் லஞ்ச லாவண்யங்களுக்கும் என்னைப் போன்ற பழைய காங்கிரஸ்காரர்கள் பரிகாரந் தேடித்தானக வேண்டும்; பதில் சொல்லத்தான் வேண்டும்...''

மாசிலாமணி முதலியார், "அண்ணே, நான் உங்கள் மீது குற்றஞ்சாட்டுவதாக எண்ணக் கூடாது. கோனர் விஷயமாக நீங்கள் சொன்னதைக் கேட்டதிலிருந்து, என் உள்ளம் கொதிப்படைந்திருக்கிறது. உங்களைப் போன்றவர்கள் விட்டுக்கொடுத்து, கண்டவர்களையெல்லாம் சட்டசபைக்கு அனுப்பியதனல் ஏற்பட்ட விளைவுதான் இது சட்டசபை, மந்திரிசபைகளின் கூத்து இப்படியென்றால், நகரசபை, ஜில்லா சபைகளின் நடவடிக்கை இன்னும் மோசமாய் வருகிறது! நம்ம நகரசபையில் இன்று தலைவர் தேர்தல் நடக்கிறதல்லவா! அதைப்பற்றி ஒரு மாதத்துக்கு மேலாக அமளிப்படுகிறது. இத் தலைவர் தேர்தலில் நான்கு பேர் நிற்கிறார்களாமே! ஆனல் பெரியகோடீஸ்வரர் குமாரரான அளகேசன் தான் தலைவராக வருவார் என்று எல்லோரும் உறுதியாகச் சொல்லுகிறார்கள் காங்கிரஸ் பெயரால் அங்கம் வகிப்பவர்களின் யோக்கியதையைத் தெரிந்துதான் கூறுகிறார்களோ! ஏனென்றால் அளகேசன் நகர சபையிலுள்ள முக்கால்வாசிப் பேர்களைத் தனது பணத்தால் விலைப்படுத்தித் தன் பக்கம் வைத்திருக்கிறாராம். இந்நேரம் தேர்தல் நடந்து விட்டிருக்கும்! ஆமாம் அண்ணே! இந்த ஸ்தல ஸ்தாபனங்களில் கூடக்

காங்கிரஸ் பெயரால் ஏன் அங்கத்தினர்களை அனுப்ப வேண்டும்? குப்பைத்தொட்டி வேலை, ரோடு போடுகிற வேலைகளைக் கவனிப்பதற்கு யாராயினும் போய்த் தொலையட்டுமே!......'' என்று சலிப்புடன் சொன்னார்.

சதானந்தம் பிள்ளை ஏதோ சொல்லப் போகும் சமயத்தில் சிவகுமாரன் அவசர அவசரமாக அங்கு வந்து "அப்பா! அப்பா! சமாசாரங் கேட்டீர்களா? அளகேசன் தான் தலைவராக வந்துவிட்டார். காங்கிரஸ் அபேட்சகருக்குப் பத்தே ஓட்டுகள்தான் கிடைத்தன'' என்று சொன்னான்.

சதானந்தம் பிள்ளையின் முகத்தில் துயர இருள் சூழ்ந்தது.

மாசிலாமணி முதலியார் துள்ளிக் குதித்து, "நான் அப்போதே சொன்னேனே! பார்த்தீர்களா? அண்ணா! இந்த அயோக்கியப் பயல்கள் துரோகஞ் செய்துவிட்டிருப்பார்கள்...'' என்றார்.

சிவகுமாரன், "காங்கிரஸ் மெம்பர்களில் பலபேர் அளகேசனுக்குத்தான் ஓட்டுப் போட்டார்களாம். சில பேர் சபைக்கு வரவில்லையாம். சிலர் நடுநிலை வகித்தனராம்...'' என்று தேர்தல் முடிவு பற்றி விளக்கிக் கூறலானான்.

சதானந்தம் பிள்ளை மெல்லப் பேசத் தொடங்கி, "இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மூன்று நான்கு ஆண்டுகளாகவே, இப்படித்தான் நடந்து வருகிறது. காங்கிரஸ் அபேட்சகர்களை அக்கட்சி யங்கத்தினர்களே, காலை வாரி விடுகின்றனர்... உம்; இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ!'' என்று கூறியவர், "ஆமாம், சிவகுமாரா! நீ நகரசபைக்குப் போயிருந்தாயா? என்ன?'' என்று கேட்டார்.

"ஆமாம்; அப்பா! கல்லூரியிலிருந்து அப்படியே வேடிக்கை பார்க்கப் போனேன்'' என்றான் சிவகுமாரன் உற்சாகமாக.

சதானந்தம் பிள்ளை, "உனக்கு இதெல்லாம் என்ன வேடிக்கை? சிவா! படிப்புண்டு; வீடுண்டு என்று போவதை விட்டு" என்று அன்பாகக் கடிந்து கொண்டார்.

சிவகுமாரன் அதற்கு ஏதோ சமாதானம் சொல்ல முயன்றான்.

இச்சமயத்தில் உள்ளறையிலிருந்து "சிவா, சித்தி கூப்பிடுகிறாள், பார்! புத்தகங்களை வைத்து விட்டு முகம் கால் கழுவிக் கொண்டு, காபி சாப்பிடப் போ" என்று திலகவதி கூப்பிட்டாள்.

"சரி. சரி' போ! இனிமேல் இந்தமாதிரி அக்கப்போருக்கு எல்லாம் போகாதே! உன் படிப்பு முடிகிற வரை......" என்று சதானந்தம் பிள்ளை சொல்லிக் கொண்டிருக்கையில் சிவகுமாரன் தலையைக் குனிந்து கொண்டே உள்ளே போகலானான்.

அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மங்கையர்க்கரசி, உணவு அருந்தும் மேஜை முன் சிவகுமாரன் வந்து உட்கார்ந்ததும், சிற்றுண்டியை அவனுக்குப் பரிவாகப் பரிமாறிக் கொண்டே, "வா சிவா! இன்று என்ன இவ்வளவு நேரம்?...இதுவரை ஒன்றும் சாப்பிடாமல் இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?" என்று விஷயம் தெரியாதவள் போல் கேட்டாள்.

சிவகுமாரன் சிற்றுண்டியை வாயில் எடுத்துப் போட்டுக் கொண்டே ஏதோ யோசனையில் இருந்ததால் மங்கைக்குப் பதில் எதுவும் சொல்லவில்லை.

"என்ன? சிவா, எதுவும் சொல்லாமல் இருக்கிறாய்? என் மேல் ஏதாயினும் கோபமா?" என்று கலைந்துமுன் விழுந்திருந்த அவனுடைய கிராப்பை நீவி விட்டுக் கொண்டே கேட்டாள் மங்கை.

"காபி கொண்டு வா, சித்தி" என்றான் சிவகுமாரன் வேறெதுவும் சொல்லாமல்.

மங்கை காபியைக் கொண்டு வந்து வைத்து விட்டு, "அப்பா ஏதோ கேட்டாரே! அதனால் வருத்தமாயிருக்கிறாயா? சிவா! என்னண்டை சொல்லேன்" என்று அவனைக் கனிவோடு பார்த்தவாறே கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை, சித்தி..." என்று சிவகுமாரன் சொல்லு முன்பே, மங்கையர்க்கரசி, "அப்பா ஒன்று சொல்லுகிறார் என்றால், நல்லத்துக்குத் தான் சொல்வார். அவர் கட்டுத் திட்டம் செய்கிறாரே என்று வருத்தப்படுவது கூடாது! நானும் தான் உன்னைக் கேட்கிறேன், படிக்கிற பிள்ளைக்கு இதற்குள் ஊர் விவகாரம் எதற்கு?" என்று விநயமாக வினவினாள்.

இதுவரை அறைக் கதவண்டை நின்று மங்கைதன் பிள்ளைக்குப் பரிவாக உபசாரம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த திலகவதி, "அப்படிக் கேளு, மங்கை! அப்படிக் கேளு! பிள்ளையாண்டான் இதற்குள்ளாகவே அப்பாவைப் போல அரசியல் தலைவராகிவிடப் பார்க்கிறாரு..." என்று சிரித்தவாறே கூறினாள்.

"சும்மா இரு, அம்மா! நீ ஒன்னு..." என்று கூறிக் கொண்டே அவன் எழுந்து போனான்.

போகும் சிவகுமாரனைத் தாயன்புடன் பார்த்துக் கொண்டே, "புலிக்குப் பிறந்தது பூனையாய் விடுமா, அக்கா! சிவன் நம்ம அத்தானைவிடப் பெரிய மனுஷனாக ஆகத்தான் போகிறான்! நீ வேண்டுமானால் பாரேன்!......ஆனால், அத்தான் சொல்லுவது போல, படிப்பு முடிகிறவரை, பொது விவகாரங்களில் கவனம் செலுத்தாமல் இருப்பது நல்லது. அதைத்தான் சிவனுக்கு நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்......" என்று கூறினாள்.

திலகவதி சிரித்துக் கொண்டே, "சரி, சரி நீயும் சொல்ல ஆரம்பித்து விட்டாயோ, இல்லையோ! இனிமேல் சிவன் உருப்பட்டாற் போலத்தான்...... தேச சேவை, மக்கள் தொண்டு என்று சொல்லி அவர் இப்படிக்கிடந்து தொல்லைப்

படுவது போதாதென்று, பிள்ளையும் பொது சேவை செய்யப் பிஞ்சிலேயே புறப்பட்டு விட்டது......'' என்று சொன்னாள்.

இதே சமயத்தில், வெளி வராந்தாவில் மாசிலாமணி முதலியார், ''இது நிசந்தானா அண்ணா! நம்ம சிவகுமாரன், சோஷலிஸ்டு கட்சி, கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளுகிறான்; திராவிடக்கழகத்தில் சேர்ந்து காங்கிரஸைத் தாக்கிப் பேசுகிறான் என்றெல்லாம் கூடச் சொல்கிறார்களே! நீங்கள் காங்கிரஸ்காரராயிருந்து— அதுவும்; நீண்ட காலக் காங்கிரஸ்காரராயிருந்து உங்கள் பிள்ளை எதிர்க் கட்சிகளில் சேர்ந்திருந்தால்......'' என்று சொல்லுவது திலகவதி காதில் விழுந்தது. மங்கையும் சிவகுமாரன் பெயர் அடிபடவே, திலகவதியுடன் சேர்ந்து ஒற்றுக் கேட்கலானாள்.

சதானந்தம் பிள்ளை ''சேர்ந்திருந்தால் என்ன? அப்பன் முட்டாள் தனம் பண்ணினால் மகனும் முட்டாள் போக்கிலேயே போக வேண்டுமென்று எங்கே சொல்லியிருக்கிறது? நான் காங்கிரஸ்காரன் என்று பெயர் வைத்துக் கொண்டு வாங்குகிற கெட்ட பெயர் போதாதோ!... நகரசபைத் தேர்தல் முடிவைக் கேட்ட பிறகு இனியும் காங்கிரஸ்காரனா யிருப்பதா என்றே என்னைக் கேட்டுக் கொள்ள வேண்டியவனாகிறேன். நாளை கோனார் பண்ணும் கூத்தினால் மந்திரி சபையின் வண்டவாளம் சந்தி சிரிக்கும்போது, காங்கிரஸ்காரர் களாயிருப்பவர்கள் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக வேண்டியதைத் தவிர, வேறு வழியில்லை. எந்த மூஞ்சை வைத்துக் கொண்டு பொதுமக்கள் முகங்களில் விழிப்பது......? காங்கிரசுக்கு ஒரு முழுக்கு போட்டுவிடுவது என்றே......''

''அப்படியெல்லாம் அவசரப்பட்டு ஒன்றும் செய்து விடாதீர்கள், அண்ணா!'' என்று அவருடைய ஆத்திர உணர்ச்சிக்கு அணை போட்டார் மாசிலாமணி முதலியார். ''யாரோ சில அயோக்கியர்கள் தவறு பண்ணுகிறார்கள் என்பதற்காக நல்லவர்களாகிய உங்களைப் போன்றோர் வெளியேறி விடுவதென்றால் அப்புறம் என்ன இருக்கிறது? பொறுத்து

இருப்போம். புல்லர்கள் கூட்டம் பூண்டோடு ஒழியப் போகும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது உங்களுக்குத் தெரியாத விஷயமா நான் சொல்லப் போகிறேன்?...'' என்று விடைபெற்றுக் கொள்ளலானர்.

ஆழ்ந்த சிந்தனையிலிருந்த சதானந்தம் பிள்ளை துணுக்குற்று எழுந்து, ''போய் வருகிறீர்களா? வணக்கம்; போய் வாருங்கள்'' என்று கூறி வழியனுப்பினர்.

''ஐயோ, அத்தான் மனம் எப்படி நொந்து போயிருக்கிறது'' என்று இரக்கத்தோடு கூறிக்கொண்டே உள்ளே போகலானுள் மங்கை.

திலகவதி கணவன் இருக்கும் இடஞ் சென்றாள்.

# 6

''திலகம், திலகம்! எங்கே வீட்டில் யாரையும் காணோம்...?''

சதானந்தம் பிள்ளை தன் மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டே வந்தவர், சந்தடியே இல்லாதது கண்டு சுற்று முற்றும் பார்க்கலானர். அவருடைய கரங்கள் பழக்க விசேஷத்தால் தாமாகவே அவர் போட்டிருந்த மேல் உத்தரீயத்தை எடுத்து 'ஸ்டாண்டில்' மாட்டின.

இதற்குள் பின்கட்டிலிருந்த திலகவதி கணவனுடைய குரலை எப்படியோ கேட்டுவிட்டு, ''மங்கை! மங்கை! எங்கே இருக்கிறுய்? அத்தான் வந்திருக்கிறுர் போலிருக்கிறது பார்!'' என்று குரல் கொடுத்தாள்.

தன் மனைவி புறக்கடையிலிருந்து கொண்டே மங்கையர்க்கரசியை ஏவியதன் காரணத்தை உடனே புரிந்துகொண்ட சதானந்தம் பிள்ளை, ''ஓ! கேஸ்ூவல் லீவா?'' என்று புன் சிரிப்புடன் தமக்குள் கூறிக்கொண்டார். அவர் சட்டையைக்

கழற்றுகையில் மூக்குக் கண்ணாடி கழன்று தவறி விழப் பார்த்தது.

"ஆ!" என்று பதறியோடி வந்து மங்கையர்க்கரசி மூக்குக் கண்ணாடி தரையில் விழுந்து உடைந்து போகாத வாறு தடுக்க முயன்றாள். ஆனால் அதற்குள் சதானந்தம் பிள்ளை அதைப் பிடித்துக் கொண்டார்.

"நல்லகாலம், மங்கை! கொஞ்சம் ஏமாந்திருந்தால் நாற்பது ஐம்பது ரூபாய் பழுத்துப்போயிருக்கும்" என்று அவர் கண்ணாடியைச் சரியாக மூக்கின்மீது மாட்டிக் கொண்டே மங்கையர்க்கரசியைப் பார்த்துச் சொன்னார்.

அத்தான் தன்னை ஏறிட்டு நோக்கிப் பேசுவதைக் கண்டதும் அவள் நாணத்தால் தலை கவிழ்ந்தாள். ஆனால், அவள் வாய் மட்டும் 'ஆமாம்' என்றது.

அடுக்களையில் வேலை செய்து கொண்டிருந்த மங்கை யர்க்கரசி, வெளியில் திடீரென உண்டான மிதியடியோசை கேட்டு அத்தான்தான் வருகிறார் என்று அறிந்து கொண் டாள்.

ஆனால், நாலு மணி கூட ஆகாதிருக்கையில் அவர் கோர்ட்டிலிருந்து வரமுடியாது என்று அவள் ஐயுற்றாள். அவள் இவ்விதம் எண்ணிக் கொண்டிருக்கையிலேயே, கால்கள் முன்புறத்தை நோக்கி விரைந்தன. திலகவதி, "அத்தான் வந்திருக்கிறார் போலிருக்கிறது, பார்!" என்று சொல்வதற்கு முன்பே அவள் கூடத்துக்கு வந்துவிட்டாள். ஆனாலும், அவர் முன் எப்படிப் போவது, என்ன கேட்பது, பேசுவது என்ற அச்சத்துடனும் நாணத்துடனும் அவள் கதவோரத்தில் வந்து மலைத்து நிற்கலானாள்.

மாலை மஞ்சள் வெய்யில் ஒளி பட்டுப் பளபளத்த சதானந்தம் பிள்ளையின் ரோல்டு கோல்டு பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி மங்கையர்க்கரசியின் கண்களைப் பறித்தது. சிறிது வயதானாலும், கட்டுத் தளராத அவருடைய

தளதளத்த தேகமும் களை சொட்டும் முகமும், கம்பீரத் தோற்றமும் அவளுடைய இளம் உள்ளத்தை ஒருங்கே கவர்ந்தன.

அவள் ஊரிலிருந்து வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டாலும், இதுவரை அவ்வளவு அணுக்கமாய் இருந்து அவரைப் பார்த்ததில்லை; பார்க்கச் சந்தர்ப்பம் வாய்த்த தில்லை. அவள் ஊரிலிருந்து வந்து வண்டியை விட்டு இறங்கிய சமயத்தில் மேன்மாடியிலிருந்து தன்னை நோக்கிக் கொண்டிருந்த அவரைத் தற்செயலாகப் பார்த்தாளே! அது தான் ஓரளவு சரியாகப் பார்த்தது என்று சொல்லவேண்டும். அடுத்து அவள் திலகவதியால் நேருக்கு நேர் அறிமுகஞ் செய்து வைக்கப்படுகையில், கடைக் கணித்து அவருடைய பெருந்தன்மையான தோற்றத்தில் மனம் லயித்தாள். அதற்கு அப்புறம் அவள் ஒரே வீட்டிலிருந்து ஊடாடி அடிக்கடி சந்திக்க வேண்டிய சந்தர்ப்பமும் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பும் ஏற்பட்டாலும்கூட, நாணமும் பயிர்ப்பும் மிகவுடைய அவள் அவரை ஏறிட்டுப் பார்க்கக் கூசியிருந் தாள்.

மறைவிலிருந்து—மற்றவர்கள் அவளைக் கவனிக்கக் கூடாத இடத்திலிருந்து—அவள் அவரை நோக்கி மகிழ்வாள். அது வெண்திரைக்குப் பின் தெரியும் உருவம்போல் தெளி வாகத் தெரியாமலிருந்தாலும், தூரத்திலிருந்தாயினும் அவரைக் காண்பதில் அவளுக்கு ஒரு தனி ஆனந்தம் உண்டா யிற்று. அவர் பேசும் பேச்சுக்களைச் செவி மடுத்துக் கேட்ப தில் அவள் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்து வருவாள்.

இன்றுதான் மங்கையர்க்கரசிக்கு சதானந்தம் பிள்ளையை ஏகாந்தமாக, நேருக்கு நேர் பார்க்கவும், பேசவும், கூடிய சந்தர்ப்பம் வாய்த்தது. இந்த அருமையான வாய்ப்பு அவளுக்கு ஒரு பக்கம் களிப்பைத் தந்தாலும், மற்றொருபுறம் நாணத்தையும் அச்சத்தையும் அளித்தது. மூக்குக் கண்ணாடி விழப்போவதைக் கண்டதனால் ஏற்பட்ட பதற்றம் மறைவாக

இருந்த அவளுடைய கூச்சத்தைப் போக்கடித்து விட்டு அவளை அத்தான் முன்னே வரச் செய்தது.

இப்போதுதான் மங்கை திலகவதி கொடுத்த குரலுக்கு, "இதோ போகிறேன், அக்கா! அத்தான்வந்திருக்கிறார்" என்று பதிலுக்குக் குரல் கொடுக்கலானாள். பின் அவள் சதானந்தம் பிள்ளையைப் பார்த்து, "அக்கா வீட்டு விலக்கமாயிருக்காங்க" என்று கூறியவள், "முதலில் காபி கொண்டு வரட்டுமா? அத்தான்! இல்லாவிட்டால், குளித்துவிட்டுப் பின்னால் பலகாரத்துடன் குடிக்கிறீர்களா?" என்று திடீரென நினைத்துக் கொண்டவளாய்க் கேட்டாள்.

சதானந்தம் பிள்ளை மங்கையர்க்கரசியின் தடுமாற்றத்தைக் கண்டு புன்னகை புரிந்தவாறு, "அதுதான் தெரிகிறதே பட்டத்தரசி அந்தப்புரத்திலிருந்து கொண்டு அதிகாரஞ் செய்யும்போதே! மூன்று நாளைக்கு இந்த முடிசூடா இளவரசியின் ஆட்சிக்கு அடங்கி நாங்கள் இருக்க வேண்டும். இல்லையா?" என்று தமாஷாகக் கேட்டவர் பின், "நான் முதலில் குளித்துவிட்டு வந்து அப்புறம் சிற்றுண்டியும் காபியும் அருந்துகிறேன்" என்று கூறினார்.

"அப்ப நான் போய் ஸ்நான அறையில் வெந்நீரைக் கொண்டு வைக்கிறேன், வாருங்கள்" என்று கூறிக்கொண்டே மங்கை உள்ளே போக முயன்றாள்.

அவளுடைய பயிர்ப்பையும் படபடப்பையும் கண்டு சதானந்தம் பிள்ளை தமக்குள் வியந்து பாராட்டிக்கொண்டே குளிக்கும் அறைக்குப் போனார். தாம் வருவதற்குள் எல்லாம் தயாராயிருப்பதைப் பார்த்து அவர் பிரமித்தார். அவர் குளித்துவிட்டு ஈர உடையை மாற்றுவதங்குள் வேறு ஆடைகள் வந்து காத்திருந்தன. வழக்கத்தைவிட இன்று சுறுசுறுப்பாகக் காரியங்க நடைபெறுவது அவருடைய கவனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

சதானந்தம் பிள்ளை உடைகளைத் தரித்துக்கொண்டு, கிராப்பைச் சீவிவிட்டுக்கொண்டு கூடத்துக்கு வந்தார்.

மங்கை சாப்பாட்டு மேஜைமீது இலையைப் போட்டுவிட்டுப் பலகாரத் தட்டுகளை வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அத்தான் வந்து அமர்ந்ததும் மங்கை நாணிக்கோணிய வாறு நடந்து வந்து பலகாரங்களை இலையில் பரிமாறலானாள். அவள் உடம்பு இன்னதென்று விவரிக்க முடியாத அச்சத்தால் காற்றில் அசையும் மாந்தளிர் போல் நடுங்கியது. தனியா யிருந்து அத்தானுக்குப் பணிவிடை செய்வது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

'கோகிலாவாவது, கணேசனாவது பள்ளிக்கூடத்தி லிருந்து வரக்கூடாது? சோதனை போல வேலைக்காரி கூட அல்லவா இன்று வரவில்லை?' என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள். கூட யாராயினும் இருந்தால் கூச்சமோ அச்சமோ இல்லாமல் அவருக்கு வேலை செய்ய லாமே என்று அவள் அங்கலாய்த்தாள்.

மங்கையின் நிலையை, சதானந்தம் பிள்ளை சடுதியில் புரிந்து கொண்டார். ஆகவே, அவர் அவளுக்குத் தைரியம் உண்டாக்கும் நோக்கத்தோடு, "மங்கை, இதென்ன கோதுமை அல்வாவா? கேசரியா?..." என்று கேட்டுக் கொண்டே ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டார்.

"உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? பார்த்தால் கோதுமை அல்வா கேசரி போலவா தென்படுகிறது? அக்கா செய்தால் எப்படி இருந்தாலும் நன்றாயிருக்கும்" என்று அவள் கேலியாகச் சொல்ல நினைத்தாள்; ஆனாலும் நாணங் காரணமாக, "கோதுமை அல்வாதான், அத்தான், ஏன் நன்றாயில்லையா?" என்று மெல்லக் கேட்டாள்.

"சே! நன்றாயில்லையா? ரொம்ப நன்றாயிருக்கிறதே! நீ செய்வதற்குக் கேட்க வேண்டுமா?" என்று அவளை உற்சாகப் படுத்தும் எண்ணத்துடன் அவர் சொன்னார்.

அவ்வார்த்தைகள் கூட மங்கைக்குப் பரிகாசமாகத்தான் பட்டது. 'பெண்டாட்டி செய்ததென்றால் அவருக்கு

நன்றாயிருந்திருக்கும்' என்று கருதி அவள் மனம் குறைப் பட்டது.

அடுத்து, சதானந்தம் பிள்ளை ஓமப்பொடியை உலுத்துத் தின்று கொண்டே, "எங்கே வேலைக்காரி வரவில்லையா, இன்னும்?" என்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே கேட்டார்.

"இல்லை; அத்தான். அவள் எங்கோ சொந்தக்காரர் வீட்டுக்குப் போக வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனாள்."

அவர் நேரில் பார்த்துக் கேட்டதற்குத் தலைகுனிந்து கொண்டே பதில் சொன்னாள். அவர் நோக்கும் போது இவள் தலை கவிழ்ந்து கொள்வதும், அவர் குனிந்து பலகாரம் சாப்பிடுகையில் இவள் அவரை ஆசையோடு பார்த்து மகிழ்வதும் ஓசையெழாதவாறு மெல்ல நகைப்பது மாயிருந்தாள். நேரம் ஆக, ஆக, அவளைப் பற்றியிருந்த நாணமும் அச்சமும் மெல்ல மெல்ல அகன்று கொண்டு வந்தன.

சதானந்தம் பிள்ளை, "அப்படியானால், இன்று வீட்டு வேலைகளையெல்லாம் நீயாகவேயா செய்தாய்? ஐயோ" என்று அநுதாபத்துடன் மொழிந்தவர், "ஏன்? கோகிலா வைப் பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்தி உனக்கு ஒத்தாசை யாக வைத்துக் கொள்வதுதானே! மங்கை?" என்று சொன்னார்.

"படிக்கப் போகிற குழந்தையை நிறுத்துவதா? நன்றாயிருக்கிறது, அத்தான்! இது என்ன பிரமாத வேலை? இதைவிட எவ்வளவோ பெரிய வேலைகளையெல்லாம் கிராமங் களில் செய்வோமே! நீங்கள் பார்த்ததில்லையா? பட்டணத் தில்தான் எடுத்ததற்கெல்லாம் வேலைக்காரர்கள் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள்......" என்று மங்கை சமாதானம் சொன்னாள்.

சதானந்தம் பிள்ளை இது கேட்டுச் சிரித்தார். "அப்படியானால் பட்டணத்திலிருப்பவர்கள் சோம்பேறிகள் என்று சொல்லுகிறாய், இல்லையா? அது என்னவோ உண்மைதான். உன் அக்கா கூடப் பட்டணத்தில் வாழ்க்கைப்பட்டுச் சோம்பேறியாய் விட்டதாலும், உடலுழைப்பு இல்லாததாலும் தான் நோய் நொடிக்கு நிலைக்களமாய் விட்டாள். இல்லாவிட்டால்..."

மங்கை குறுக்கிட்டுப் பேசத் தொடங்கி, "நீங்க ஒன்று, அத்தான். அக்கா சோம்பேறியாயிருந்தால் உங்கள் குடும்பம் இவ்வளவு உன்னத நிலைக்கு வந்திருக்க முடியுமா? உழைத்து உழைத்துத்தான் அக்கா உருக்குலைந்து போயிருக்கிறாள்......"

"தங்கை அக்காவுக்குப் பரிந்து பேச வேண்டியதுதானே! தனக்கு வாரிசாகத்தான்..."

இவ்வார்த்தைகளால் மங்கையர்க்கரசி மீண்டும் நாணமுற்று அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவலானாள்.

இதைக் கண்ட சதானந்தம் பிள்ளை, "எங்கே மங்கை, போகிறாய்?" என்று வினவினார்.

"இருங்கள் அத்தான், காபி கொண்டு வருகிறேன்," என்று கூறிக் கொண்டே போனாள் மங்கை.

தண்ணீர் டம்ளரைப் பார்த்துக் கொண்டே, "காபி கொண்டு வந்து வைத்திருக்கிறாய் என்றல்லவோ பார்த்தேன்" என்றார் சதானந்தம் பிள்ளை.

அவர் சொல்லி வாய் மூடுவதற்கு முன், மங்கை காபியைச் சூடாக்கிக் கொண்டு வந்து அவர்முன் வைத்தாள். "பலகாரம் சாப்பிடுவதற்குள் ஆறிப்போய் விடுமென்று முன்னேயே கொண்டு வரவில்லை" என்று அவள் அவர் கேட்டதற்கு இப்போது சமாதானஞ் சொன்னாள்.

மங்கையினுடைய ஒவ்வொரு சொல்லும் சதானந்தம் பிள்ளைக்குக் களிப்பை யூட்டியது. அவளுடைய சாதுரியத்தையும் சமயோசித புத்தியையும் அவர் வெகுவாக உணர்ந்து பாராட்டினர். அவள் வந்ததிலிருந்தே தம் குடும்ப நிலை சீர்பட்டு வருவதையும், எல்லா வகையிலும் அவள் தம் மனைவிக்கும் மக்களுக்கும் பேருதவியாயிருந்து வருவதையும் அவர் கண்டறிந்து வரலானர். தம் காரியங்களையும் அவள் எவ்வளவு கனிகரமாகச் செய்து வருகிறுள் என்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். இவ்வளவு நற்குணமும் குடும்பப் பாங்கும் உடைய பெண்ணுக்கு ஆண்டவன் நல்வாழ்வு அளிக்காமல் போய்விட்டானே என்று அவர் உள்ளம் எண்ணிப் பச்சாதாபப்பட்டது. முதன் முதலாகப் பார்க்கையிலேயே மங்கையின் வைதவ்ய கோலம் அவருடைய இரக்க நெஞ்சத்தை மிகவும் வருத்தியது.

இந்த அமங்கல கோலத்தை எப்படி மாற்றுவது என்று அவர் பலநாட்கள் சிந்தித்துக் கொண்டிருந்தார். பொதுவாக நகர நாகரீகம் வெகுவாகப் புகாத கிராமங்களில் உள்ள பெண்கள் கொண்டுள்ள கொள்கைகளைப் போலவே, மங்கையும் சமுதாயக் கட்டுப்பாட்டுக்கும் சம்பிரதாயங்களுக்கும் மிகவும் கட்டுப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் அழுத்தமான நம்பிக்கையும் கொண்டிருப்பதை அவர் நன்கு அறிந்து வந்தார். ஆதலால், அவளை, அவள் போக்கிலிருந்து திருப்புவது அவ்வளவு சுலபமல்ல என்று அவர் உணர்ந்தார். ஆனல் தம் மனைவி சமயம் நேரும்போதெல்லாம் அவளுக்கு இதமாக விஷயங்களைக் கூறி உடை முதலிய விஷயங்களில் மாறுதலை ஏற்படுத்த முயன்று வருவது அவருக்கு ஓரளவு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளித்து வந்தது.

தம் மனைவியின் உபதேசம் ஏதாயினும் மாறுதலை உண்டு பண்ணியிருக்கிறதா என்று அறியும் எண்ணத்தோடு அவர் அவளை இச்சமயம் ஏற இறங்கப் பார்க்கலானர். முன் வெள்ளைச் சேலையை உடுத்தியிருந்த அவள் இப்போது

பழுப்புப் புடவையைத் தரித்திருந்தாள். வேறு விசேஷ மாறுதல் எதையும் அவரால் கண்டு உணர முடியவில்லை.

ஆகவே அவர் காபியைக் குடித்துக் கொண்டே, "ஆமாம்; மங்கை! நீ ஏன் வாங்கி வந்திருக்கும் கொரனுட்டுச் சேலையை இன்னம் கட்டிக் கொள்ளாமலிருக்கிறாய்? அக்கா கொடுக்கவில்லையா? செயின்கூட...."

அவர் பேசி முடிக்கும் முன்னே மங்கை இடை மறித்து, "அக்கா கொடுத்தார்கள், அத்தான்! நான் தான் கட்டிக் கொள்ளவில்லை. எனக்கு எதற்கு அத்தான், பட்டுப் புடவை, தங்கச் செயின் எல்லாம்? நான் இப்படியே இருந்து காலத்தைக் கழித்துவிட்டுப் போகலாமென்று..."

சதானந்தம் பிள்ளை, "அசட்டுத்தனமாகப் பேசாதே, மங்கை! நீ என்ன தொண்டு கிழவியாய் விட்டாயோ? வீட்டில் ஒரு காலும் சுடுகாட்டில் ஒரு காலுமாயிருக்கும் கிழங்கள்கூட சிறுசுகள் மாதிரி சிங்காரித்துக் கொள்ள ஆசைப்படுகின்றன இந்தக் காலத்திலே! நீ என்னடா என்றால்......"

"அத்தான், நான் உங்கள் சொல்லை எதிர்த்துப் பேசுவதாக எண்ணக் கூடாது. நான் ஏழ்மையிலேயே பிறந்தவள்; ஏழ்மையிலேயே வளர்ந்தவள்; இடை நடுவிலே எதற்கு இந்த ஆடம்பரமெல்லாம். ஏதோ நான் இருக்கிறபடி இருந்து விட்டுப் போகிறேன்......"

"உன்னைப் போலப் பைத்தியக்காரியை இந்த உலகத்தில் பார்க்க முடியாது. எல்லோரும் பிறக்கும் போதே பணத்தோடும் சொத்து சுதந்திரத்தோடும் பிறக்கவில்லை. செல்வம் செல்வாக்கோடு ஜனனமாகிறவர்கள் கூடப் பின்னால் ஏழைகளாகி ஏங்கித் தவிப்பதை நாம் பார்க்கிறோம். வீண் டாம்பீகமும் கர்வமும் கூடாதேயொழிய வாழ்க்கையில் வேண்டிய வசதி சௌகரியங்களைச் செய்து கொள்வதில் தவறில்லை. ஆதலால் நீ..." என்று சொல்லிக் கொண்டே

கை கழுவ எழுந்தவர், அவள் கண் கலங்கி நிற்பதைக் கண்டு பதறிப்போய்விட்டார்.

"என்ன, மங்கை! ஏன் அழுகிறாய்? நான் உன் மனம் புண்பட ஏதாயினும் சொல்லி விட்டேனா? கூறத்தகாத வார்த்தைகளைக் கூறி விட்டேனா?......" என்று கேட்டுக் கொண்டே அவர் அவளை அணுகினார். அவர் கரங்கள் அவரை யறிலாமலே அவளை ஆதரவாகப் பற்றி இமைகளின் ஓரத்தில் வழிந்து வரும் கண்ணீரை அவர் போட்டிருந்த மேல் குட்டையால் துடைத்தன.

அவருடைய கர ஸ்பரிச சுகத்தில் ஈடுபட்டு மங்கை தன்னுணர்வின்றி இருந்தாள்.

"சித்தி, சித்தி! எங்கே இருக்கிறே?!" என்று கூவிக் கொண்டே இச்சமயம் கணேசன் புத்தகப்பையைக் கையில் பிடித்தவாறே அங்கு ஓடிவந்தான். அவர்கள் அப்போ திருந்த நிலை விவரமறியாத அச்சிறுவனையும் திகைத்து நிற்க வைத்தது. சில விநாடிகளுக்கெல்லாம் சொல்லி வைத்தாற் போல் புத்தகக் கட்டுடன் வந்த கோகிலா கால் பின் வாங்கி நின்றாள்.

மங்கை விதிர் விதிர்த்துப் போய் வேகமாய் விலகினாள். அதைவிட சதானந்தம் பிள்ளை, வெட வெடப்புடன் தள்ளி நின்றார்.

"சித்தியின் கண்ணில் ஏதோ தூசி விழுந்து விட்ட தாம்......" என்று அவர் நாக்குழறச் சமாதானங் கூற முயன்றார்.

கோகிலா தன்னை ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டு புத்தகக் கட்டுகளைத் தம்பியிடம் கொடுத்து எடுத்துப் போய் வைக்கச் சொல்லிவிட்டு, "எங்கே சித்தி, கண்ணைக் காண்பி! நான் தூசியை ஊதுகிறேன்" என்று கூறிக் கொண்டே அருகே வந்தாள்,

அதற்குள் மங்கை தன் சேலை முந்தானையால் கண்ணைத் துடைப்பது போல் கசக்கிக் கொண்டு இருந்தாள்.

கோகிலா தன் தளிர்க் கரங்களால், கண்களை முந்தானையால் துடைத்துக் கொண்டிருந்த மங்கையர்க்கரசியின் கைகளை விலக்கிவிட்டு, அவள் முகத்தைத் தாழ்த்திப் பிடித்து செவ்விதழைக் குவித்து ஊதலானாள். அப்போதும் விதிர் விதிர்ப்பு அடங்காத மங்கையின் முகம் கோகிலாவின் இச் செயலைக் கண்டு நாணத்தால் குப்பெனச் சிவந்தது. அவளுடைய சங்கடமான நிலையைக் கண்டு சதானந்தம் பிள்ளை மெல்ல அவ்விடத்தை விட்டு அகன்றார். அவருக்கும் படபடப்பு நீங்கவில்லை. உணர்ச்சியின் உந்துதலால், மங்கையிடம் வரம்பு மீறி நடந்து கொண்டது தம் தகுதிக்கும் வயதுக்கும் சரியல்ல என்று அவர் உள்ளம் இடித்துக் கூறியது. தாம் ஒழுங்கு மீறியதால் தானே, தம் பிள்ளைகளைக் கண்டும் பயப்படவேண்டியதாயிற்று என்று அவர் கருதி மனம் நொந்தார். 'மங்கை பால் தம் மனம் சலனங் கொண்டது ஏன்?' என்று அவர் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். சந்தர்ப்ப உணர்ச்சியோ என்று அவர் எண்ணிப் பார்த்தார். சிறிது நேர சிந்தனை; 'இது சந்தர்ப்ப உணர்ச்சியல்ல; சில காலமாகவே, உள்ளத்தை உலுப்பிவரும் கிளர்ச்சிதான். மங்கை வந்த சில நாளிலிருந்தே நம் நெஞ்சம் அவள் பால் நெகிழ்ச்சியுற்று வருகிறது' என்ற உண்மையை அவருக்கு அறிவுறுத்தியது. "இதற்குக் காரணமென்ன?' என்று யோசித்தார். 'மங்கையின் இளமையா? அல்லது அழகா? இல்லை; மிக இளம் பருவத்திலேயே விதவையாய் விட்டாளே என்று அவள் மீது ஏற்பட்ட இரக்கமா? அதுவுமில்லா விட்டால், மைத்துனி முறைப் பெண் என்ற உறவா?' அச்சமயம் அவரால் எல்வித முடிவுக்கும் வர முடியவில்லை. 'எது காரணமாயிருந்தாலும், மங்கையிடம் ஒழுங்கு மீறி உரையாடுவதோ, உறவு கொண்டாடுவதோ நம் பெருந்தன்மைக்குச் சிறிதும் பொருத்தமல்ல. நாம் இதுவரை பிற பெண்களை ஏறிட்டும் பார்க்காது ஆண்மையைக் காத்து வந்தது

போலவே இனியும் இருக்க வேண்டும்; நல்லொழுக்கத்தை நிலை நாட்ட வேண்டும்' என்று அவர் தமக்குள் உறுதி செய்து கொண்டார். நாம் பொது வாழ்வில் பல பெண்களுடன் பழகக் கூடிய சந்தர்ப்பம் நேர்ந்த காலத்தும் காங்கிரஸில் சுதந்திரப் போராட்டக் காலங்களில் தேச சேவிகளுடன் சேர்ந்து சேவை புரிந்து வந்த காலத்தும் நெஞ்சத்தாலும் நெறிதவறி நடந்ததில்லை. உடன் பிறந்த சகோதரிகளைப் போலவே பாவித்து சகஜமாகப் பழகி வந்திருக்கிறோம் என்ற நன்னிலை தானே, தேசத் தலைவர்களும் பொது மக்களும் நம்மிடம் தனிமதிப்புக் காட்டுவதற்குக் காரணமாயிருந்தது? அத்தகைய நேர்மையும் நல்லொழுக்கமும் நெருங்கிய உறவுடைய மங்கை விஷயத்தில் நழுவிப் போக விடுவதா? அதுவும் நாற்பது வயதுக்கு மேல் நெகிழ்வது நல்லதா? என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார். தம் மனதில் சபலம் தட்டுவதற்குக் காரணமாயிருக்கும் மங்கையைக் கூடுமான வரை பாார்க்காமலிருக்க வேண்டும்; தனியாகச் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படாதவாறு தவிர்க்கவேண்டும் என்று அவர் தீர்மானித்துக் கொண்டே தம் அறைக்குப் போய் சோபா வொன்றில் சாயந்தார்.

இங்கு மங்கையின் நிலையோ தரும சங்கடமாயிருந்தது. கோகிலா அவள் கண்களை அகல நீக்கி வாயினால் ஊதிவிட்டு, "இப்போ கண்ணை அறுக்கவில்லையே, சித்தி!" என்று கேட்டுக் கொண்டே, மீண்டும் திறந்து பார்த்தாள்

மங்கை, "இல்லை" என்று சொல்வதற்குள், கோகிலா, "கண்ணில் ஒன்றுமில்லையே, சித்தி!" என்று கூறியவாறே கூர்ந்து பார்த்தாள். இது மங்கையை மேலும் விதிர்ப்புற வைத்தது. "முந்தானையால் கசக்கியதால்தான் கண் சிவந்து போய்விட்டது" என்று அவள் கூறிய பிறகுதான் மங்கைக்கு மூச்சு வந்தது. "இரு. சித்தி! கண்ணுக்கு ஒத்தடம் கொடுக்கிறேன்" என்று சொல்லி, கோகிலா தன் தாவணியின் முனையைப் பந்து போலாக்கி வாயில் வைத்து ஆவி பிடித்து மங்கையின் கண்களில் ஒத்தலானாள்.

இதற்குள், திலகவதி, "மங்கை, மங்கை! எங்கே ஒன்றுமே சந்தடி காணோம்" என்று குரல் கொடுத்தாள். இது மங்கையை ஒரு கலக்கு கலக்கியது. அவள் ஏதோ சொல்வதற்குள், "என்ன செய்து கொண்டிருக்கிறாய், மங்கை..." என்று திலகவதி மீண்டும் குரல் கொடுத்து, "ஆமாம், மங்கை, வந்தது யார்? அத்தான்தானே! — காபி கொடுத்தாயா?... பசங்க..."எனச் சொல்லிக் கொண்டிருக்கையில், "காபியெல்லாம் கொடுத்தாச்சு. குழந்தைங்ககூட வந்தாச்சு, இதோ வந்துவிட்டேன்" என்று படபடப்புடன் கூறியவாறு கோகிலாவின் பிடியிலிருந்து போக முயன்றாள்.

"அத்தானுக்குச் செய்கிற உபசாரத்தில் என்னை அடியோடு மறந்துவிட்டாயே, மங்கை! ஒரு மிடறு காபி கொடுக்கக் கூடாதா, எனக்கு?..." திலகவதி தமாஷாகச் சொல்லியதுகூட மங்கைக்கு விபரீதமாகப்பட்டது.

அவள் பதறிப் போய், "இதோ கொண்டு வருகிறேன், அக்கா, காபி! உங்களுக்குத்தான்..." என்று பேச்சை அரை குறையாக நிறுத்திக் கொண்டே அடுக்களை நோக்கி வேகமாகப் போகலானாள்.

மங்கையின் பதட்டத்தைப் பார்த்து, கோகிலா, சில விநாடிகள் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றாள்.

திலகவதியின் குரலைக் கேட்டதுமே, கணேசன் புத்தகங்களை ஒரு மூலையில் வீசியெறிந்துவிட்டு, "அம்மா பின்னாலே இருக்காங்களா?..." என்று கேட்டவாறே தாயை நோக்கியோடினான்.

"எங்கே போகிறாய், கணேசா! காபி குடித்துவிட்டுப் போ. இதோ அல்வா..." என்று கூப்பிட்ட மங்கை, அவன் ஒரே பாய்ச்சலில் பின்புறமாக ஓடுவதையும் பார்த்து, "கோகிலா, தம்பியைக் கூப்பிடு. நீயும் வந்து பலகாரம் சாப்பிடு..." என்று கூறியவாறு அவர்களுக்குப் பட்சணங்களை எடுத்து வைக்கலானாள்.

கோகிலா குழாயடியில் போய் முகம், கை கால்களைச் சுத்தஞ் செய்யலானாள்.

கணேசன் ஆர்வத்தோடு அம்மா மடிமீது விழுந்து தழுவிக் கொள்ளப் போனான். "அடே, அடே! தூரவே நில்லு, கிட்டவராதே!" என்று கைகளை நீட்டித் தடுக்க முயன்றவாறு கூச்சல் போட்டாள் திலகவதி.

"ஏன், அம்மா! நான் கிட்ட வந்து தொட்டா திட்டா ஒட்டிக்கும்?..." என்று கேட்ட கணேசன், "நான் பள்ளிக் கூடத்திலே யாரையும் தொடலேம்மா! எந்தப் பசங்க ளோடும் விளையாடல்லே...அப்படியிருந்தா சட்டையைக் கழற்றிப் போட்டுக் குளிச்சிட்டு வந்திருப்பேனே..." என்றான்.

"அதுக்கில்லேடா, நீ என்னைத் தொட்டுக்கப்படாது!..."

"ஏம்மா! பறைச்சியாயிட்டியா? தொடாதவளா ஆயிட்டி டியா?"

"ஆமாம்..."

"போம்மா, நீ நினைச்சா இப்படி வந்து உட்கார்ந்துக் கிறது? என்னைத் தொடாதே என்கிறது? எல்லாம் என்னை ஏமாத்தத்தான். எனக்குத் தெரியும். நீ பறைச்சியு மில்லே; பாப்பாத்தியுமில்லே..."

"துஷ்டத்தனம் பண்ணாதே!"

"அதெல்லாம் இல்லே; உன்னைத் தொடத்தான் போறேன். திட்டு ஒட்டிக்குதா என்று பார்க்கிறேன்."

"நான் சொன்னா கேட்கமாட்டே?"...

"ஊஉம், நீ எழுந்து வந்து கை நிறைய சாக்லேட் கொடுத்தாத்தான் விடுவேன்..."

"சித்தியைப் போய்க் கேளு, கொடுப்பாள்..."

"சித்தி கொடுக்கமாட்டா! அதைத் தின்னு; இதைத் தின்னுன்னு எதையெதையோ கொடுப்பாளேயொழிய

சாக்கலேட் மாத்திரம் தரமாட்டா. கேட்டா, 'அதை அடிக்கடி தின்னப்படாது. வயிற்றிலே பூச்சி பிடிக்கும்' என்பாள்...பொல்லாதவள் அம்மா...''

''இரு; இரு. சித்தி வரட்டும்; சொல்கிறேன்...''

''சொல்லேன், பயமா?''...

''அப்படியானால் அவளைக் கூப்பிடட்டுமா? மங்கை!''...

அதேசமயம், தட்டில் பலகாரமும் டம்ளரில் காபியும் எடுத்துக்கொண்டு வந்த மங்கை. ''இதோ வந்துவிட்டேன், அக்கா!...'' என்று குரல் கொடுத்தவாறு அங்கு வந்து, ''முன்னாலேயே கொண்டு வந்திருப்பேன்...'' என்று சொல்லி வருகையில், ''கூப்பிடாதே அம்மா, சித்தியை'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, வந்துவிட்ட மங்கையைப் பார்த்துத் திகைத்து நின்றிருந்த கணேசன், இதுதான் சமயமென்று, ''ஆமாம்மா, சித்தி கண்ணிலே ஏதோ தூசு விழுந்துட்டுதாம். அப்பா துடைத்துக் கொண்டிருந்தார்......'' என்று குறுக்கிட்டுக் கூறினான்.

''என்ன?'' என்ற கேள்வி திலகவதியின் அடிவயிற்றிலிருந்து எழுந்தது. அந்தத் தொனியில் ஒலித்த ஆங்காரத்தையுணர்ந்து மங்கை விதிர்விதிர்த்து விட்டாள்.

''இல்லேம்மா, சித்தி கண்ணிலே விழுந்த தூசை அக்காதான் ஊதி எடுத்திச்சு...' என்று கணேசன் சொன்னான்.

''ஓ! அப்படியா!'' என்று கேட்டுச் சிறிது தணிந்த திலகவதி ''ஏன் மங்கை! நெருப்புப் பொறி பட்டுட்டுதா, என்ன?'' என்று வினவி, ''பார்த்து வேலை செய்யக்கூடாது?'' என்று கூறி முடித்தாள்.

மங்கை ஏதோ சொல்ல வாயெடுத்தாள். இதற்குள் திலகவதி, ''சரி, சரி! தட்டையும் தம்ளரையும் வைத்துவிட்டு அங்கே போய்க் கவனி. கணேசா, கூடப்போ...'' என்று கூறினாள்.

மங்கை மௌனமாகப் போனாலும் அவள் மனம் குழம்பிப் போயிருந்தது. பின்னால் தொங்கும் முந்தானையைப் பிடித்து விஷமம் செய்துகொண்டு வரும் கணேசனைக்கூட அவள் கவனியாமல் போகலானாள்.

"என்ன சித்தி!ஒரு மாதிரியாயிருக்கிறே?..." என்று விசுவநாதம் கேட்டுக் கொண்டே எதிரே வந்தான்.

இக்கேள்வி அவளைத் திடுக்கிட வைத்ததாயினும் அடுத்த கணம் தன்னைச் சுதாரித்துக்கொண்டு, "ஓ! நீயும் வந்து விட்டாயா? வாருங்கள், எல்லோரும் பலகாரம் சாப்பிடலாம்' என்று கூப்பிட்டுக் கொண்டு போனாள்.

"கடைசி பீரியட் டிரில் கிளாஸ். உடம்பு என்னவோ போலிருந்ததால் கேட்டுக்கொண்டு வந்துவிட்டேன், சித்தி...!" என்று வழக்கத்தைவிடச் சீக்கிரமாக வந்துவிட்டதற்கு சமாதானம் சொன்னான் விசுவநாதன்.

"உடம்புக்கென்ன, விசுவம்?" என்று பரிவோடு கேட்ட மங்கை அவன் கையைப் பிடித்துப் பார்த்தாள். நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். மார்பில் கை வைத்துக் கவனித்தாள்.

"சுரம் கிரம் ஒன்னுமில்லை, சித்தி! என்னவோ சோர்வாயிருந்தது! அதுதான்..."

"அப்படியானால், நீ காபி சாப்பிடாதே! ஹார்லிக்ஸ் கலக்கிக் கொடுக்கிறேன்"...என்று கூறிக்கொண்டே விரைந்து போனாள்.

"சித்தியண்டை ஒன்னும் சொல்லிடக்கூடாது. ஒரேயடியா பயந்து போயிடும்!...அம்மாவுக்கு இருக்கிற நெஞ்சுத் தைரியம் சித்திக்குக் கிடையாது..." என்று போகும் மங்கையையே கவனித்துக் கொண்டிருந்த கோகிலாவைப் பார்த்துச் சொன்னான் விஸ்வநாதன்.

"சித்தி சொல்வதற்கு எதிரா ஒன்னும் சொல்லாதே அண்ணா! அவங்க என்ன கொடுக்கிறாங்களோ அதைத் தடை

சொல்லாமல் வாங்கிச் சாப்பிட்டு விடணும். அப்போதான் அவங்க மனசு சாந்தப்படும்...'' என்று கூறிய கோகிலா, "ஊம். கணேசா! இப்படி வா, சித்தி வருவதற்குள் நாம் உட்கார்ந்து பட்சணம் சாப்பிடணும். இல்லையானு... தெரியுமோ, இல்லையோ!''.. என்றாள்.

கணேசன் மங்கை போன திசையைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்தான். விசுவநாதன் புன்னகை புரிந்த வாறே அமர்ந்தான். அவ்விருவர் முன்பும் பலகாரத் தட்டை யும் தண்ணீர் டம்ளரையும் எடுத்துவைத்துவிட்டு கோகிலா வும் உட்கார்ந்து பலகாரம் சாப்பிடலானாள்.

மங்கை, இதற்குள் ஹார்லிக்ஸ் டப்பியை எடுத்து ஒரு கிளாஸ் டம்ளரில் இரண்டு மூன்று கரண்டி போட்டுக் கலக்கிக் கொண்டே வந்து வைத்தாள்.

இச்சமயம், "கோகிலா, கோகிலா! சித்தியண்டை சொல்லி இரண்டு பேருக்குப் பலகாரமும் காபியும் வாங்கிக் கொண்டு வா'' என்று சதானந்தம் பிள்ளை சாப்பாட்டு அறை யின் வெளிப்பக்கம் நின்றுகொண்டே சொன்னார்.

குரல் கேட்டு நிமிர்ந்து எதிர்ப்பக்கம் பார்த்த மங்கையர்க் கரசி, அத்தானைக் கண்டதும் சடக்கெனத் தலையைக் குனிந்து கொண்டாள். அவருக்கும் மங்கையை பார்த்ததும் வெட்க முண்டாயிற்று.

"இதோ எடுத்துக்கொண்டு வருகிறேன், அத்தான்'' என்று மங்கை, கோகிலா சாப்பிடுவதை விட்டுவிட்டு எழுந் திருப்பதைக் கண்டு, "நீ உட்கார்ந்து சாப்பிடு, கோகிலா! நான் எடுத்துக்கொண்டு போகிறேன்'' என்று கையமர்த் தினாள்.

சதானந்தம் பிள்ளை முகத்தைத் திருப்பிக் கொண்டே, "அவசரமில்லை, கோகிலா சாப்பிட்டுவிட்டே கொண்டு வரலாம். தயாரிப்புக்காக முன்னே வந்து சொன்னேன்... பலகாரம் இருக்கிறதோ இல்லையோ...நாங்கள் பேசிக்

கொண்டிருக்கிறோம்'' என்று கூறிவிட்டுப் போகலானார். மனதை ஒருவிதமாகத் திடப்படுத்திக்கொண்டிருக்கும் சமயத்தில் 'சில நிமிடங்களில் மீண்டும் மங்கையைப் பார்க்கக் கூடிய நிலை ஏற்பட்டுவிட்டதே' என்று உள்ளத் துள்ளலை உணர்ந்து அவர் எண்ணினார். மங்கையைப் பார்த்துமே தம் மனவுறுதியும் கம்பீரமும் அதிகாரத்தோரணையும் பறி போய் விடுகிறதே என்று கருதி அவர் கருத்து அழிந்தார்.

சதானந்தம்பிள்ளை போய் உட்கார்ந்து, வந்திருந்த வெளியூர் நண்பர்களுடன் பேசத்தொடங்கிய சில கணங் களுக்கெல்லாம் மங்கை சிற்றுண்டிகளைக் கொண்டு வந்தாள். அத்தான் சொன்னாரே என்று அவசர அவசரமாக எடுத்து வந்தவள், வந்திருப்பவர்கள் முற்றும் புதிதாய் இருப்பதை யறிந்து தயங்கி நின்றாள். வேற்றூர் முன் எப்படிப்போவது என்று அவள் வெட்கப்பட்டாள். சில விநாடிகள் மனதுடன் போராடிக் கடைசியாக, "அத்தான், அத்தான்!'' என மெல்லக் கூப்பிட்டாள்.

மிக மெல்லிய குரலில் கூப்பிட்டாலும் மங்கையின் இனிமையான குரல் சதானந்தம் பிள்ளையின் கவனத்தை எப்படியோ ஈர்த்து விட்டது. உடனே அவர் எழுந்து வந்து மங்கை வைத்திருப்பதை வாங்கினார். வாங்கிய பதட்டத் தில் அவர் கைவிரல்கள் மங்கையின் கரங்களில் பட்டு விட்டன. இப்படித் தொட்டதால் ஏற்பட்ட இன்ப உணர்ச்சி சதானந்தம் பிள்ளையைத் தடுமாற வைத்தது. மங்கைக்கும் இது மீண்டும் கிளுகிளுப்பை யுண்டாக்கி விட்டது. ஆனாலும் அவள் சமாளித்துக் கொண்டு உடனே உள்ளே போகலானாள்.

சதானந்தம் பிள்ளை தடுமாற்றத்துடனேயே பலகாரத் தட்டுகளை எடுத்துப்போய் நண்பர்கள் முன் வைத்துச் சாப்பிடு மாறு உபசரித்தார்.

''வரும்போதுதான், காபி சாப்பிட்டு விட்டு வந்தோம். உட்லண்ட்ஸில்தான் தங்கியிருக்கிறோம்'' என்றார் நண்பர் களில் ஒருவர்.

"பரவாயில்லை, கொஞ்சம் சாப்பிடுங்கள்."

உள் பக்கமே பார்வையை ஓட்டிக் கொண்டிருந்த மற்றொரு நண்பர், சதானந்தம் பிள்ளையை நோக்கி "குழந்தை உங்க மகளுங்களா?" என்று மெல்லக் கேட்டார்.

இக்கேள்வி மங்கையின் மையலில் மனதை லயிக்கவிட்டுக் கொண்டிருந்த சதானந்தம் பிள்ளைக்குச் சவுக்கடி கொடுப்பது போலிருந்தது. அவர் எதிரிலிருந்த நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டார். முன் பக்கத்தில் லேசாக வெளுத்துவரும் தலை மயிர் அவர் மங்கைக்குத் தந்தை நிலையில் இருக்கத் தக்கவர்தான் என்று சாட்சி சொல்லியது. இந்நிலையில் சில விநாடிகள் ஸ்தம்பித்துப் போயிருந்த பிள்ளையவர்கள் சுதாரித்துக் கொண்டு, "இல்லை, என் மைத்துனி" என்று கூறினார்.

இக் கேள்வியும் பதிலும் மங்கையின் செவிகளிலும் விழலாயின. இவை அவளை என்னென்னவோ எண்ணச் செய்தன. இந்நிலையில் மீண்டும் அங்குப் போக விரும்பாமல் கோகிலாவிடம் காபி கொடுத்தனுப்பினாள்.

"இவள்தான் என் பெண்; ஒரே பெண் தான்" என்று காபி கொண்டு வந்து கொடுத்த கோகிலாவைக் காட்டிக் கூறினார் சதானந்தம் பிள்ளை.

# 7

காலைக் கதிரவன் வானத்தில் திட்டுத் திட்டுகளாய்ப் படர்ந்திருந்த வெண் மேகங்களை விலக்கிக் கொண்டு விரைவாக மேற்கு நோக்கிப் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தான். சூரிய வெப்பத்தால் சுறுசுறுப்புக்கொண்ட மக்கள் தத்தம் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உடம்பை உழைத்து வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடும் பாட்டாளியிலிருந்து நகத்தில் அழுக்குப்படாமல்

நாசூக்காக மேஜை முன் உட்கார்ந்து உத்தியோகம் பார்த்து விட்டு வரும் பெரிய உத்தியோகஸ்தர் வரை தம்தம் அலுவலை நாடி அவசர அவசரமாகப் போய்க் கொண்டிருந்த னர். சிறிதும் சிரமமின்றிக் காலத்தைத்தள்ளி எப்படியோ உணவுக்கும் உடைக்கும் வழி செய்து கொண்டு உயிர்வாழும் சோம்பேறிகளும் உடல் நலுங்காமல் ஒய்யாரமாக நடந்து உல்லாச வாழ்க்கை நடத்தும் உலுத்தர்களும், ஒரு கவளம் சோற்றையும் சீரணிக்க முடியாமல் மலைப்பாம்பு போல் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கும் பணத் தொந்திகளும் தவிர, மற்றவர்களெல்லாம் பரபரப்பாகத் தங்கள் பாட்டைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

மணி ஒன்பதாய் விட்டது. சதானந்தம் பிள்ளை வீடு அன்று வழக்கத்தைவிட பரபரப்பாக இருந்தது. மாளிகையின் முற்பகுதியிலுள்ள ஆபீஸ் அறையில் கட்சிக்காரர்கள் சதானந்தம் பிள்ளையைச் சூழ்ந்து கொண்டிருந்தனர். மற்றொரு பக்கம் காங்கிரஸ்காரர்களும், பொதுநலத் தொண்டர்களும் அவருடன் பேசுவதற்காகக் காத்துக் கொண்டிருந்தனர். குமாஸ்தா அன்று கோர்ட்டில் ஆஜராகி வாதாட வேண்டிய வழக்குகளைப் பற்றிய விவரங்களை ஞாபகப்படுத்தி 'கேஸ்' கட்டுகளை ஒவ்வொன்றாக அவர் முன் வைத்தவாறு இருந்தான். வழக்கு தஸ்தாவேஜுகளை முறையாகப் பிரித்துப் பார்த்து வந்த பிள்ளையவர்கள் அவைபற்றித் தமக்குள் ஏற்படும் சந்தேகங்களையும் விவரமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விளக்கங்களையும் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களை விசாரித்து அறிந்து கொண்டிருந்தார்.

உள்ளே சிவகுமாரனும், விசுவநாதனும் கல்லூரிக்குப் போக அவசர அவசரமாக ஆயத்தஞ் செய்து கொண்டிருந்தனர். கோகிலா குளித்து விட்டு வந்து தலை வாரிக் கொண்டிருந்தாள். "ஊம்; மணியாகி விட்டது. சீக்கிரம் சாப்பிட்டு விட்டுப் போங்கள்." திலகவதி பிள்ளைகளைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தாள். மங்கையர்க்கரசி அவர்களுக்கு வேண்டியவைகளைக் கவனித்துச் செய்து விட்டு, கடைக்குட்டிச்

கணேசனைக் குளிப்பாட்டி, கிராப் சீவி, சட்டை முதலியவை களைப் போட்டுக் கொண்டிருந்தாள்.

புத்தகக் கட்டைக் கையில் எடுத்துக் கொண்டு பள்ளிக் குப் போகத் தயாரான விசுவநாதன் ஏதோ நினைத்துக் கொண்டு, "சித்தி, குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்று கேட்டான். அதே சமயத்தில் சிவகுமாரனும், "நேற்றுக் கழற்றி மாட்டிய கோட்டு எங்கே காணோம், சித்தி?........" என்று வினவினான்.

ஏதோ கவனமாய், கணேசனுக்குச் சராய் போட்டுக் கொண்டிருந்த மங்கையின் செவிகளில் இவர்கள் சொன்னது விழவில்லை.

"சித்தி, நான் கேட்டது காதில் விழவில்லை......?" என்று கத்தினான் விசுவம்.

சிவகுமாரனும், "மணியாய் விட்டதே! வேறே கோட் டாயினும் கொண்டு வாயேன், சித்தி!" என்று படபடத் தான்.

சிறிது தூரத்திலிருந்து மங்கையை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்த திலகவதி, "மங்கை, எங்கே கவனமாயிருக்கே? பசங்க மணியாய் விட்டதென்று அடிச்சுக் கொள்கிறார்கள், நீ பாட்டுக்கு என்னமோ மகத்தாயாட்டம் ........" என்று கூவினாள். ஆத்திரம் மேலே பேசவொட்டாது அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது.

இப்போதுதான் சூழ்நிலையை யுணர்ந்து திடுக்கிட்டு எழுந்த மங்கை, "என்ன அக்கா? என்னையா கூப்பிட் டீங்க......?" என்று கேட்டாள். அவள் கைகள் பரபரப்பாக, கணேசனின் சட்டையில் பொத்தானைப் போட்டன.

அவளை விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டே திலகவதி "வரவர மாமி கழுதை போலானாள் என்ற கதை யாயிருக்கிறது உன் சங்கதி. வீட்டு வேலை மேல் கவனமில்லா மல் ஏதோ கோட்டையைப் பிடிக்கிறதுபோல் ஆகாசத்தை

யும் பூமியையும் பார்த்துக் கொண்டு சதா யோசனையில் இருக்கிறாயே! உன் மனசில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறே?...'' என்று படபடவெனப் பேசினாள்.

''சித்தி, நீ முதலிலே எனக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அக்கா செய்கிற அதிகாரத்துக்கு அடங்கிப் பதில் சொல்லு.. ...'' என்று தாயையும் சின்னம்மாவையும் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னான் விஸ்வம்.

இதற்குள் தன் கோட்டைத் தேடிப் பார்த்துப் போட்டுக் கொண்டு வந்த சிவகுமாரன், ''ஏன் அம்மா வீணுக்காயினும் சத்தம் போடறே! பாவம், சித்தி சாதுவாயிருக்கவே ரொம்ப ஏமாற்றுகிறாயே! கூப்பிட்டது காது கேக்கலேன்னு......?'' என்றான்.

விசுவநாதத்தின் கேலிப் பேச்சு திலகவதிக்கு அதிக ஆத்திரத்தை யுண்டு பண்ணிவிட்டது. ஆதலால் சிவகுமாரன் பேசுவதைச் சிறிதும் கவனியாமல், ''சித்தியை எவ்வளவு நாளாடா கண்டிங்க? எதற்கெடுத்தாலும், எப்போ பார்த்தாலும் சித்தி, சித்தி என்று கூப்பிட்டுக் கொண்டு. ஏதாயினும் வேண்டுமென்றால் கோகிலாவைக் கூப்பிட்டுக் கேட்கிறது, இல்லே; என்னைக் கேட்டால் செய்கிறேன். அதைவிட்டு விட்டு. சித்தியாம், சித்தி! சித்தி இத்தனை நாளா இல்லாமே இப்போ எங்கே இருந்துடா வந்து விட்டாள்......?'' என்று ஆங்காரம் பொங்க முழங்கினாள்.

தாயின் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்துப் பெரிய பிள்ளைகளும் அசந்து நின்றுவிட்டனர். விவரிக்க வொண்ணாத திகைப்பினாலும் பீதியினாலும் மங்கை வாயடைத்துப் போய் நிற்கலானாள். கணேசன் கோபத்தினால் சிவப்பேறியிருந்த தாயின் முகத்தைப் பார்த்தவாறு, மங்கையை அணைத்துப் பிடித்துக் கொண்டிருந்தான்.

அன்னை இதற்கு முன் இப்படிக் கோபமாகப் பேசி அதுவும் சிற்றன்னையிடம் உரத்துப் பேசிக்கூடப் பார்த்தறியாத

தால், கோகிலா வியப்பும் வருத்தமும் ஒருங்கேகொண்டாள். 'பணிப் பெண்ணைக்கூடக் கடிந்து பேசமாட்டாளே, அம்மா! சித்தியைப் போய் ஏன் இப்படிக் கோபித்துக் கொள்கிறுள்' என்று அவள் பிஞ்சுள்ளம் பல எண்ணி வேதனைப்பட்டது. சிறிது தூர நின்றிருந்த அவள் மங்கைக்கு ஜாடை காட்டித் தாயின் எதிரிலிருந்து அப்புறம் வந்து விடுமாறு சொன்ஞன். ஆனல் மங்கை தலை கவிழ்ந்து கொண்டிருந்ததால் இக் குறிப்பைக் கவனிக்கவில்லை.

திலகவதி ஆத்திரம் அடங்காதவளாய், "பெரியவர்களுக்கே யோசனையில்லாதபோது, சிறுசுகளுக்கு எங்கே புத்தியிருக்கப் போகிறது? அப்பாவே எதற்கெடுத்தாலும் மங்கை மங்கை என்று வாய் ஓயாது கூப்பிட்டு வளைய வருகிருர் என்ருல் அதைப் பார்த்த பிள்ளைகள் பிதற்றுவதற்குக் கேட்கவா வேண்டும்? அவருக்கு வயசு ஆச்சு என்று தான் பேரு......" என்று பேசிக்கொண்டே போனுள்.

இத்தருணத்தில், 'மங்கை, சாப்பாடு ஆயிட்டுதோ இல்லையோ! இலை போடு. நான் இன்றைக்குச் சீக்கிரமாகக் கோர்ட்டுக்குப் போகணும்" என்று கூறிக்கொண்டே உள்ளே வந்த சதானந்தம் பிள்ளை அங்கு நிலவும் சூழ்நிலையைக் கவனியாமல், 'ஏன், சிவா! விசுவம்! உங்களுக்கு மணியாகவில்லையா? இன்னம் இருக்கிறீர்களே! திலகம்! இவர்களுக்குச் சாப்பாடு போடவில்லை?" என்று பிள்ளைகளைப் பார்த்து விட்டு மனைவியைக் கேட்டார்.

தம் கேள்விகளுக்குப் பதில் ஒன்றும் வராததால் அவர் எல்லோர் முகங்களையும் சுற்றிப் பார்த்துக் கொண்டே, "என்ன சமாசாரம்? ஏன் இப்படி நிற்கிறீர்கள் எல்லோரும்?" என்று கேட்கலானுர்.

'ஒன்றுமில்லை, அப்பா! இதோ போகிறோம்" என்று சொல்லியவாறே சிவகுமாரன் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வெளியே நடந்தான். விசுவம் அவனைப் பின் தொடர்ந்தான். கோகிலா ஏதோ எடுப்பதுபோல்,

உள்ளறைக்கு மெல்லப் போகலானான். கண்களிலிருந்து பொங்கி வழிந்து கொண்டிருந்த நீரைத் தடுக்க மாட்டாத வளாய்ச் செயலற்று நின்றிருந்த மங்கை, அத்தான் தன்னைக் கூப்பிட்டுக் கொண்டு வருவதை யறிந்ததும் பரபரப்பாக முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொள்ளலானாள். பின் அவர் என்ன விஷயம் என்று கேட்கத் தொடங்கியதுமே சடக்கெனச் சமையலறைக்குப் போய்விட்டாள். பற்றுக் கோடில்லாது துவளும் பைங்கொடி போல் கணேசன் துவண்டு நின்றுவிட்டான்.

திலகவதி கணவன் கேள்விகளுக்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. கழுத்தை ஒருவிதமாகச் சொடுக்கிக் கொண்டு போய் அவருக்கு உணவு படைக்கலானாள். சதானந்தம் பிள்ளைக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ நடந் திருக்கிறது என்று மட்டும் அங்கு காணப்பட்ட விசித்திர மான சூழ்நிலையிலிருந்து ஊகித்து உணர்ந்தார். மனைவியின் குணம், போக்கை அனுசரித்துப் போகக் கூடியவராதலால், அவள் மௌனஞ் சாதித்துக் கொண்டிருக்கையில், வாயைக் கிளறினால் வம்புதான் வளரும் என்று கருதி அவர் வாளா இருந்து விட்டார். அவர் சாப்பிட்டுவிட்டுக் கோர்ட்டுக்குப் போகும் போதுகூட திலகவதி வாய் திறக்கவேயில்லை. சிறிது காலமாகவே தம் மனைவியின் போக்கு ஒரு தினுசாகப் போய்க் கொண்டிருப்பதைப் பற்றிப் பிள்ளையவர்கள் சிந்தித்துக் கொண்டே போகலானார். அடிக்கடி எடுத்ததற் கெல்லாம் கோபங் கொள்வது, அனாவசியமான விஷயங் களுக்கெல்லாம் மூச்சைப் பிடித்துக்கொண்டு பேசி வாதாடு வது, முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு மௌனம் சாதிப்பது போன்ற செயல்கள் திலகவதியிடம் காணப் படுவதற்குக் காரணமென்ன? நோயினால் பாதிக்கப்பட்டுள்ள உடல் பலவீனங் காரணமா? அல்லது பிணியினால் உடம்பு நலிந்துள்ளதுபோல உள்ளமும் நொந்துள்ளதால் இவ்வித மாறுதல் ஏற்பட்டிருக்கிறதோ? என்றெல்லாம் அவர் வழி நெடுக யோசித்தவாறே சென்றார்.

மங்கையர்க்கரசிக் குண்டான துக்கம் சொல்லிமுடியாது. அவள் திலகவதி சொல்லிய ஒவ்வொரு சொல்லையும் நினைத்து நினைத்து மனவேதனைப் பட்டாள். 'அக்காவா இப்படி எல்லாம் என்னைப் பேசினுள்? என்னிடம் அன்பும் ஆதரவும் அளவில்லாமல் காட்டி வந்த அக்காவா—உடன் பிறந்த சகோதரியைவிட உயர்வாக மதித்து வந்த அக்காவா, உயிருக்குஉயிராக நேசித்துவந்த அக்காவா இப்படி இழிவாகப் பழித்துப் பேசினுள்? அவள் இவ்விதம் ஏசிப் பேசுவதற்குக் காரணம் என்ன? அவள் இவ்விதம் ஆத்திரங் கொண்டு திட்டு வதற்கு நான் செய்த குற்றம் என்ன? என் மனமறிந்து ஒரு குற்றமும் செய்யவில்லையே? பிழை இழைக்கவில்லையே? அப்படி நான் ஏதேனும் செய்திருந்தாலும் ஏன் இப்படிச் செய்தாய் என்று நேரடியாகக் கேட்டுக் கண்டிக்கலாமே! அதை விட்டு மனதில் ஏதோ வைத்துக்கொண்டு மறைமுக மாக வைவானேன்! பிள்ளைகள் முன் வைத்து என்னைப் பேசியதோடல்லாமல் அவர்களையுமல்லவா அநியாயமாகக் கடிந்து கொண்டாள்?......' என்றெல்லாம் எண்ணி அவள் ஏங்கினுள்.

சில காலமாகவே, அக்கா என்னைக் கண்டால் சீறி விழுகிறுள். ஒன்றுமில்லாத விஷயத்துக்குக்கூட மூச்சுப் பிடித்துக்கொண்டு ஒரு மணி நேரம் ஓயாமல் பேசுகிறுள். கணேசனும் கோகிலாவும் விளையாட்டுப்புத்தியால் ஏதேனும் விஷமம் செய்வதையும் தவறு புரிவதையும் பார்த்து, 'இவ்விதம் செய்வது குற்றம். இனி அம்மாதிரி செய்யக் கூடாது' என்று புத்தி கூறி நான் அன்பாகக் கடிந்து கொள் வதைக்கூட அக்கா குற்றமாக எடுத்துக் கொண்டு 'அவர்கள் என்ன செய்தார்கள் என்று இப்படிச் சத்தம் போடுகிறுய்? சின்னப் பிள்ளைகளாயிருந்தால் விஷமம் சில பண்ணத்தான் செய்வார்கள். இதற்குப் போய் சும்மா அதிகாரம் பண்ணு கிறுயே!' என்று ஆத்திரத்தோடு கூறி ஆர்ப்பரிக்கிறுள். சிவகுமாரனும், விசுவநாதனும் இளமைத் துடிப்பால் விடு முறை நாட்களில் சாப்பிட வேண்டிய நேரங்களில்

சாப்பிடாமலும், உறங்க வேண்டிய நேரங்களில் உறங்காமலும் பந்தாட்ட விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலும் ஆர்வங் காட்டி அதிகக் கவனஞ் செலுத்தி வருவதைக் கண்டு, 'விளையாட்டு விஷயங்களில் கலந்து கொள்வது நல்லதுதான். ஆனால் வீண் விவகாரங்களில் கவனஞ் செலுத்தக் கூடாது. ஊணும் உறக்கமும் வேளா வேளைக்கு இல்லாவிட்டால், உடம்பு கெட்டுவிடும்' என்று பரிவோடு சொல்லிக் குறிப்பிட்ட வேளையில் சாப்பிடவும் தூங்கவும் வைத்தால், 'உபசாரம் செய்கிறாளாம். உபசாரம்; வெற்று உபசாரம் செய்து, பிள்ளைகளைச் சாப்பாட்டு ராமன்களாகவும், தூங்கு மூஞ்சிகளாகவும் ஆக்கப் பார்க்கிறாள். இவளுக்கென்ன?' என்றும், 'பெற்ற எனக்கில்லாத கனிகரம் உனக்கு வந்து விட்டதா?' என்றும் ஏளனமாகக் கேட்கிறாள். இருந்தாற் போலிருந்து அக்கா ஏன் இப்படி மாறிவிட்டாள்?

"என்னைக் கண்டால் ஏன் அவளுக்குப் பிடிக்கவில்லை? நான் செய்த தவறு என்ன? என் மனமறிந்து நான் யாதொரு பிழையையும் செய்யவில்லையே!... என்மீது அக்கா எவ்வளவு அன்பாக இருந்தாள்? இப்போது எப்படி வேம்பாகி விட்டாள்? நான் நல்ல புடவைகளையும் நகைகளையும் போட்டுக்கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தவள், இப்போது மினுக்கிக் குலுக்குகிறேன் என்றல்லவா 'பழிக்கிறாள்? அத்தான் என்னை அடிக்கடி கூப்பிட்டுப் பேசுவதையும், வேலையிடுவதையும் அவள் விரும்பவில்லையா? ஒரு வேளை அத்தான் அந்தரங்கமாக என் மீது பரிவு காட்டிப் பேசி ஆறுதல் கூறி வருவது அவளுக்குத் தெரிந்து விட்டதோ! அவள் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கக் கூடுமோ! அதைக் காரணமாகக் கொண்டுதான் என்மீது கோபங்கொண்டு எடுத்ததற்கெல்லாம் குற்றஞ் சாட்டிப் பேசுகிறாளா? என்னவென்றே புரியவில்லையே! ஐயோ! கடவுளே! கவலையில்லாமல் காலந் தள்ளக் கடைசியாக ஒரு ஆதரவான இடம் கிடைத்தது என்று கருதியிருந்தேன்! அதுவும் உனக்குப் பொறுக்க வில்லையா?'' என்றெல்லாம் எண்ணி மனம் பொருமினாள் மங்கையர்க்கரசி.

திலகவதிக்கும்தான் தீராத சிந்தனை உண்டாயிற்று' அன்று அவள் மங்கைமீது வெகுண்டு விழுந்ததை நினைத்து வெகுவாக வருத்தப்பட்டாள். 'ஐயோ, நாம் அவளை ஏன் அப்படிக் கடிந்து கொண்டோம்? அவள் என்னசெய்தாள்?...'

'என்ன செய்தாளா? நம் குடியையல்லவா கெடுக்கப் பார்க்கிறாள்? நம் வாழ்க்கையை யல்லவா பறித்துக் கொள்ளப் பார்க்கிறாள்? இதைவிட வேறென்ன செய்ய வேண்டும்? அவரைக் கைக்குள் போட்டுக் கொள்ள இவள் வசியமல்லவா செய்வதாகத் தெரிகிறது?...'

'சே! அப்படியிருக்காது. மங்கை அப்படிப்பட்டவ ளல்லவே! சரியாக உண்ணாமலும் உயிர் வாழ்வதிலே சிறிதும் பற்றில்லாமலும் தவசி போலிருக்கும் அவளா இப்படிச் சிற்றின்பம் நாடிச் சதி செய்வாள்?'

'......இதெல்லாம் வெளி வேடம்! பட்டிக்காட்டிலே இருந்து வந்த சமயத்தில் அப்படிப் பசப்பினாள்? பட்டணத்துத் தண்ணீர் உடம்பில் ஊறினதும் சினிமாக்காரி போல் சிங்காரித்துக் கொண்டு தளுக்கிக் குலுக்கி நடக் கிறாளே! இப்போது அவள் அறுதலியாகவா இருக்கிறாள்?...'

திலகவதியின் உள்ளத்திலே இப்படி மாறி மாறிப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அவள் வீட்டு விலக்க மாயிருந்தபோது, 'சித்தி கண்ணிலே விழுந்த தூசை அப்பா துடைத்தார்' என்று கணேசன் சொல்லிய தகவல் அவளு டைய கள்ளமில்லாத உள்ளத்தை மிகவும் கலக்கிவிட்டது. அப்போது அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியே 'என்ன!' என்று ஆத்திரம் பொங்கும் கேள்வியாக வெளிவந்தது.

இது கண்டு கணேசன் பயந்து போய், 'இல்லேம்மா! சித்தி கண்ணிலே விழுந்த தூசை அக்காதான் ஊதி எடுத்துச்சி' என்று திருத்திச் சொல்லியபோது, 'ஓ! அப்படியா!' எனச் சிறிது தணிந்து கூறினாலும் உள்ளத்தை மட்டும் அவ்வெண்ணம் குடைந்து கொண்டேயிருந்தது.

இந்தக் குறுகுறுப்பு நாளுக்கு நாள் அதிகமாய்க் கொண்டிருந்ததே யொழிய, குறைந்தபாடில்லை. பாலன் கணேசனின் வெள்ளைப் பேச்சினுல் அவளுக்கு உண்டான சந்தேகம் வேகமாக வளர்ந்து கொண்டே போயிற்று. சந்தேகக் கண்ணுேடேயே, மங்கையர்க்கரசியின் ஒவ்வொரு சிறு செயலையும் அவள் கவனித்து வரலானுள். மங்கை பேசும் சாதாரணப் பேச்சிலும், சிரிப்பிலும் செய்யும் செயலிலும் கூட ஏதோ வஞ்சகம் இருப்பதாகவும், களங்கம் இருப்பதாகவும் அவள் ஊகிக்கலானுள். இவளாகப் பலமுறை வற்புறுத்திச் சொன்னபடி, மங்கை துணிமணிகளை அணிந்து கொண்டது இப்போது இவளுக்கு வித்தியாசமான அர்த்தத்தைக் கற்பித்தது. மங்கை இவள் கணவனுக்குப் பணிவிடை செய்யும் போதும் மறைவிலிருந்து கவனிக்கலானுள் அவர் கேட்பதற்கு மங்கை பதில் சொல்வதை இவள் ஒற்றுக் கேட்கலானுள்.

காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாய் இருப்பதுபோல் சந்தேகத்தால் பீடிக்கப்பட்ட திலகவதியின் கண்களுக்கு மங்கை ஒரு மாய்மாலக்காரியாய்க் காணப்பட்டாள். தன் கணவனுக்கும் மங்கைக்கும் இடையே கள்ள நட்பு ஏற்பட்டிருப்பதாக அவள் தீர்மானித்து விட்டாள்.

'சே! அப்படியிருக்குமா? அவர் அப்படிப்பட்டவரல்லவே?'

'ஆம். பிள்ளைகள் என்ன செய்வார்கள்? பெண்கள் மேல் விழுந்துபோனுல்! மங்கை அவரை மயக்கி விட்டிருப்பாள்.'

'அவள்தான் மானங்கெட்டுக் கையைப் பிடித்தாலும் பிள்ளை குட்டி பெற்ற இந்த மனுஷனுக்குப் புத்தி எங்கே போச்சு?'

'மங்கை இவ்வளவுக்குத் துணிந்திருப்பாளா? அவர் முன்னே போகவே கூச்சப்படுவாளாயிற்றே! நானுகப் பலமுறை சொல்லியனுப்பினுலும் நாணங்கொண்டு நிற்பவளாயிற்றே!'

'வந்த புதுசில் அப்படித்தான் இருந்தாள்! பின்னுல்தான் மெல்ல மெல்லக் கூச்சத்தை விட்டுச் சகஜமாகப் பழகத் தொடங்கி விட்டாளே! நெருங்கிப் பழகப் பழக நெகிழ்ந்து போக வேண்டியது தானே?'

'பாவம்! அவள் சின்னஞ்சிறுசுதானே! கட்டினவனிடம் என்ன சுகத்தைக் கண்டாள்? அதற்கு முன்பேதான் அவன் கண்ணை மூடிவிட்டானே! அவளுக்கு ஆசையிருக்காதா நெஞ்சத்தில் கொஞ்சமாயினும்? தன்னொத்த பெண்கனெல்லாம் இன்ப சுகங்களை அனுபவித்துக் கொண்டிருப் பதைப் பார்த்து வருகிருளல்லவா! இன்ப நினைவு எள்ளள வாயினும் எழாமலிருக்குமா?'

'அதற்கு? என் ஆம்படையானைப் பிடித்துக் கொள்ள வேண்டுமா, என்ன? எனக்குப் போட்டியாகவா புறப்பட வேண்டும்? உடன் பிறந்தவன் உதறித் தள்ளியவளை உவப் புடன் வரவேற்றுக் காப்பாற்றி வருகிறேனே! அதற்குக் கைம்மாறு இது?'

இப்படித் தனக்குள்ளாகவே கேள்விகளை எழுப்பிப் பதிலும் கண்டு வந்த திலகவதி, பருவப் பசியால் பரதவிக்கும் மங்கை இளமையிச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள, தன் கணவனை ஆளாக்கிக்கொண்டு விட்டாள் என்ற தீர்மானத் துக்கு வந்ததும், இடையிடையே அவள்பால் உண்டான இரக்கத்தையும் பச்சாதாபத்தையும் விரட்டி விட்டு ஆத்திர மும் வஞ்சமும் கொள்ளலாஞள்.

ஆகவே, அவள்தான் அடிக்கடி மங்கையை அநாவசிய மாகக் கடிந்து கொள்வதற்காக வருத்தந் தெரிவித்து ஆறுதல் கூற வேண்டுமென்று முதலில் எண்ணியதை விட்டு, வீராப்பாகவே நடந்து கொண்டாள்.

பிள்ளைகளனைவரும் பள்ளிக்கூடம் போன பின்னர், மங்கை, இந்நிலையிலும் மனவருத்தத்தை மறைத்துக் கொண்டு, திலகவதியைச் சாப்பிடக் கூப்பிட்டாள். அப்

போதும் அவள் மங்கையிடம் முகங்கொடுத்துப் பேசவில்லை. "எனக்குப் பசிக்கவில்லை, அப்புறம் சாப்பிடுகிறேன்; நீ போய்ச் சாப்பிடு" என்று வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டே சொன்னாள். அவள் இருக்கும் நிலையைக் கண்டு மங்கை மறுபேச்சுப் பேசாமல் போய்விட்டாள். அவளும் சாப்பிடவில்லை. பின் கட்டில் போய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு தன் அவல நிலையை நினைத்து அவள் குமுறிக் குமுறியழலானாள்.

இவ்வித நிலையினால் பகல் முழுவதும் அவ்வீட்டில் அமைதி நிலவியது. பிற்பகலில் வேலைக்காரி வந்து பற்றுச் சாமான்களைத் துலக்கி வீடு வாசலைச் சுத்தஞ் செய்கையில் தான் திலகவதியின் குரல் கேட்டது

"சின்னம்மா எங்கே? எல்லாம் போட்டது போட்ட வாக்கில் இருக்கிறதே!"

வேலைக்காரி கேட்ட கேள்வியை முன் பக்கத்தில் இருந்து கேட்டுக் கொண்டு வந்த திலகவதி, "அவள்தான் கவர்னரம் மாவாய் விட்டாளே! இதையெல்லாம் எங்கே கவனிக்கப் போகிறாள்?" என்று சொன்னாள்.

இச்சொல்லின் கடுமை மங்கையைத் துடித்துப் பதைத்து எழுந்திருக்கச் செய்துவிட்டது. முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, "சாமான்களை எடுத்துக்கொண்டாயா, முத்தம்மா" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அவள்.

"சோறு கறியெல்லாம் அப்படியே......" என்று ஏதோ பதில் சொல்லி வந்த வேலைக்காரி மங்கையைப் பார்த்ததும், "என்னம்மா, மூஞ்செல்லாம் அழுதழுது வீங்கியிருக்கிறாப் போலிருக்கே?" என்று திகைப்புடன் கேட்டாள்.

"ஒன்றுமில்லையே!" என்று முகத்தைப் பரபரப்பாகத் துடைத்துக் கொண்டே மங்கை, சாமான்களை ஒழித்துப் போட உள்ளே போனாள்.

திலகவதியின் கடுகடுப்பான பேச்சையும், மங்கையின் அழுகை முகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்ததும் ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்று வேலைக்காரி ஊகித்துக் கொண்டாள். அதற்கு மேல் அவள் ஒன்றும் கேட்காமல் தன் வேலைகளைக் கவனிக்கலானாள். ஆனால், அவள் மனம் மங்கையின் பரிதாப நிலைக்காகப் பச்சாதாபப் படலாயிற்று. பெரியம்மாளைவிட சின்னம்மாளான இவள் எதையும் தனக்குத் தாராளமாய்க் கொடுக்கிறாள், எவ்விஷயத்திலும் சலுகை காட்டுகிறாள் என்பது மட்டுமல்ல; தன்னைப் போலவே இவளும் கைம் பெண்ணாக இருக்கிறாளே என்ற இரக்க எண்ணத்தால்தான் அவள் மங்கைமீது அநுதாபங் காட்டலானாள்.

அடுக்களையில் மங்கை சோற்றுப் பானையில் வெந்நீரை விட்டுக் கொண்டிருந்தாள். அச்சமயம் உள்ளே வந்த திலகவதி, "ஆமாம்: சாதம் ஏன் அவ்வளவு மீந்து போச்சு? ஏன்? நீ சாப்பிடவில்லையா? ....." என்று கேட்டாள்.

மங்கை ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நான் கேட்கிறேன்; பேசாமல் இருக்கிறாயே?..."

அதற்கு மேலும் மௌனமாயிருக்கத் துணியாமல், 'அப்படியே தூங்கிப் போய்விட்டேன், அக்கா!' என மெல்லக் கூறினாள்.

திலகவதி தலையை அசைத்தவாறு, "தூங்கிவிட்டாயா? என்னண்டையா மறைக்கிறாய்? நீ என்ன செய்து கொண்டிருந்தாய் என்று எனக்குத் தெரியாதென்றா நினைக்கிறாய்?..." என்றாள்.

மங்கை தலையைக் குனிந்துகொண்டே, ஒழித்த சாமான்களை எடுத்துக் கொண்டு வேலைக்காரியிடம் கொடுக்க வெளியே போனாள்.

"உண்மையில் உறங்கி விட்டவளாயிருந்தால், எழுந்ததும் வந்து சாப்பிட்டிருக்கமாட்டாய்?...உம்; நீ செய்கிற அட

மெல்லாம் செய்...'' என்று திலகவதி கூறிய சொற்கள் அவளைப் பின்பற்றி வந்தன.

வேலைக்காரி வேலைகளையெல்லாம் செய்துவிட்டு மங்கை கொடுத்த சோறு, கறிகளை எடுத்துக் கொண்டு போனாள். மாலை மணி நான்கடிக்கவே, மங்கை அடுப்பில் காபி உலையை வைத்துவிட்டு, சிற்றுண்டி வகைகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானாள்.

மங்கை என்ன செய்கிறாள் என ஜாடையாகப் பார்க்க வந்த திலகவதி, ''என்ன பலகாரம் செய்யப் போகிறாய், மங்கை?'' என்று மெல்லக் கேட்டாள். அவள் குரலில் இரக்கம் தொனித்தது.

''என்ன, செய்யலாம், அக்கா!''

திலகவதியின் குரல்கேட்டுத் திரும்பிய மங்கை மரியாதையாகக் கேட்டாள்.

''இத்தனை நாள் என்னைக் கேட்டா செய்தாய்? ஏதோ செய்கிறதைச் செய்.''

இவ்விதங் கூறிவிட்டு, திலகவதி கூடத்துக்குப் போகலானாள். கேசரி செய்வதற்குக் கோதுமை ரவையை எடுத்து வைத்துக் கொண்டிருந்த மங்கை அவள் போவதைப் பார்த்து 'அக்கா!' என்று கூப்பிட்டாள்.

'என்ன?' எனத் திரும்பினாள் திலகவதி.

ஏதோ உணர்ச்சியின் உந்துதலால் கூப்பிட்டாளே யொழிய, அவள் என்ன எனக் கேட்டதும், வாயெழாமல் நிற்கலானாள் மங்கை.

''ஏதோ கூப்பிட்டாய்? என்ன என்று கேட்டால் பேசாமலிருக்கிறாயே, மங்கை!''

மங்கை, ''ஒன்றுமில்லை, அக்கா'' என்று தயக்கத்தோடு கூறியவள், பின், ''ஊருக்குப் போய் வரலாம் என...''

அவள் கூறி முடிக்கு முன்பே, "இப்போது திடீரென என்ன ஊருக்குப் போக வேண்டுமென்ற நினைவு?" எனக் கேட்ட திலகவதி இடையில் ஏதோ எண்ணமுண்டாகவே, "ஓ! நீ இருந்தாற்போலிருந்து ஊருக்குப் போக வேண்டு மென்று சொல்வதன் காரணம் இப்போது தெரிகிறது? பிகு பண்ணுகிருய்? நீ இல்லாவிட்டால் இங்கு ஒரு காரியமும் நடக்காது என்று உன் நினைப்பு; இல்லையா? அதுதானே?" என்று கோபம் கொதித்து எழக் கேட்டாள்.

மங்கை தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"ஊருக்குப் போக வேண்டுமென்ருல், மகராஜியாய்ப் போ. நான் வேண்டாமென்று சொல்லவில்லை" என்று கூறிய திலகவதி, 'நீ போகாதே, அம்மா! இரு' என உன்னை வேண்டு வேன் என்று மட்டும் நினைக்காதே, மங்கை!......ஆமாம்."

மங்கை கண்ணீர் சிந்தியவாறே காரியத்தைப் பார்க்க லானுள்.

"இன்னுமா அம்மா உங்களுடைய தகராறு முடியவில்லை" எனக் கேட்டுக்கொண்டே விசுவநாதன் வந்தான். வழக்கத் துக்கு மாருக அவன் அன்று முன்னதாக வந்துவிட்டான்.

அவனைப் பின் தொடர்ந்தாற்போல் கோகிலாவும் கணேசனும் வந்தனர். கணேசன் வந்ததும் வராததுமாக, "சித்தி! பட்சணம் கொடு முன்னே; எனக்குப் பசிக்குது" என்று கேட்டுக்கொண்டே மங்கையின் கால்களைக் கட்டிக் கொண்டான்.

கோகிலா திலகவதியின் முந்தானையைப் பிடித்து நெருடியவாறு, "என்ன அம்மா, நீ! சித்தியண்டை போய் சும்மா சண்டை பிடிக்கிருய்?..." என்று மெதுவாகச் சொன்னுள்.

"அம்மாவுக்குக் குணம் கெட்டுப் போச்சு, கோகிலா! வயசாகிவிட்டதோ இல்லையோ! அதுதான் முசுடாகி..."

திலகவதிக்குத் தாங்கமுடியாத கோபம் உண்டாய் விட்டது. "ஆமாம்! எனக்கு வயசாகிவிட்டது. உங்க அப்பா வுக்கு வேறே கலியாணஞ் . செய்து வைத்துவிடுங்கள், சிறு சாகப் பார்த்து. என்ன!"

விசுவநாதன் தாயின் கோபத்தைக் கண்டு அஞ்சினு யினும், தமாஷாகப் பேசி நிலைமையை மாற்றவேண்டும் எனக் கருதி, "அம்மா, காளியவதாரம் எடுத்துவிட்டார்கள். வா, கோகிலா! தம்பியை அழைத்துக்கொண்டு; போகலாம்..." என்று சிரித்துக்கொண்டே கூறினுன்.

"நீங்கஎெல்லாம் என்னை மதிக்காமல் இப்படிப் பேசுவ தால்தான், மங்கையும் மதிக்கமாட்டேன் என்கிருள்" என்று அழுத்துக்கொண்டாள் திலகவதி.

"அம்மா பேசுகிறதைப் பேசிக்கொண்டே போகட்டும். ஏதாயினும் செய்திருந்தால் கொடுத்தனுப்புங்கள், சித்தி! கோகிலாவிடம்" என்று கூறியவாறு விசுவநாதன் அவ் விடத்தைவிட்டுப் போனுன்.

"நான் உங்களுடன்கூட வேலை செய்யட்டுமா, சித்தி!" என்று கேட்டுக்கொண்டே அருகே போனுள் கோகிலா.

"சித்தி, சித்தி என்று எதற்கெடுத்தாலும் அவளை நீங்கள் சுற்றிக்கொண்டு வருவதால்தான், மங்கை தலைக்குமேல் ஏறி யிருக்கிருள்" என்று எரிச்சலோடு கூறினுள் திலகவதி.

மங்கை, "நான் அப்படியொன்றும் இல்லை, அக்கா! நேற்று வந்து நாளை போகப் போகிறவள்; எனக்கென்ன அதிகாரம் வேண்டியிருக்கு..." என்று மெல்லக் கூறினுள்.

கோகிலா அவள் மோவாயைக் கனிவாகப் பற்றி, "நீங்கள் பேசாதிருங்கள், சித்தி! அம்மாவுக்கு என்னவோ..."

திலகவதி மகளுடைய கரத்தை வெடுக்கெனப் பற்றி இழுத்து ஒரு பக்கம் தள்ளியவாறு, "எனக்கு என்னடி வந்திருக்கு? எல்லோரும் சேர்ந்து என்னைப் பைத்தியக்காரி

என நினைத்திருக்கிறீர்களா? என்ன! நான்தான் ஏதோ தப்பாக நடந்துகொள்கிற மாதிரி எண்ணி அந்தச் சிறுக்கிக்குப் பரிந்து பேசுகிறீர்கள். அவ்வளவு தூரம் சொக்குப்பொடி போட்டு அவள் உங்களையெல்லாம் மயக்கி வைத்திருக்கிருள்...'' என்று இரைந்தாள்.

அன்னையின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு கோகிலா அசந்து போய்விட்டாள். 'இதோ வெளி வருகிறேன் பார்' என்பதுபோல் கண்ணீர் அவளுடைய விழிகளிலே மிதந்தது.

''எனக்காக நீங்களெல்லாம் ஏன் அம்மா, பேச்சு வாங்கு கிறீர்கள்? துஷ்டியால் உங்கள் அனைவருக்கும் இந்தத் துன்பம் நீ போ, கோகிலா!'' என்று இரக்கத்துடன் அவள் தோளைப் பற்றிச் சொல்லி அவ்விடத்தைவிட்டுப் போகச் செய்தாள் மங்கை.

பின் அவள் அருவிபோல் வழிந்துவரும் கண்ணீரை முந்தானையால் துடைத்துக்கொண்டே, அடுக்களை நோக்கி அவசரமாகப் போனுள்.

ஆவேசம் வந்தவள்போல் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க நின்றிருந்த திலகவதி, போகும் மங்கையைக் கண்ணுல் சுட்டு எரித்து விடுபவள் மாதிரி வெறித்துப் பார்த்துவிட்டுத் திரும் பினுள். உரத்துச் சில வார்த்தைகள் பேசிய சிறிது நேரத்தில் அவள் மிகவும் களைத்துப் போய்விட்டாள். அவளுடைய முகமும் உடம்பும் குபீரென்று வியர்த்துவிட்டிருந்தது. ஆதலால் தன் சேலைத் தலைப்பால் முகத்தையும் கைகளையும் துடைத்துக் கொண்டே, சிரமத்தோடு கூடத்துக்குப் போய் உட்கார்ந்து, 'அப்பாடா!' என்று கூறியவாறு ஒரு தூணில் சாய்ந்துவிட்டாள்.

இதுவரை பக்கத்து அறை வாயிலண்டை இருந்து அன்னை செய்யும் தர்பாரைக் கவனித்துக் கொண்டிருந்த விசுவநாதன், அவள் அவ்வழியாக வருவது அறிந்ததும் அறைக்குள் விரைந்து போய் ஏதோ புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருப்பதுபோல் பாவனை செய்யலானுன்.

பிள்ளைகளுக்கெல்லாம் பட்சணம் கொடுப்பதற்கு முன் மங்கை திலகவதிக்குப் பலகாரத்தைக் கொண்டு போய்க் கொடுத்தாள். அவள் அலுத்துப் போயிருப்பதை நன்கு உணர்ந்த மங்கை காபியைக் கொடுக்காமல் ஹார்லிக்ஸைக் கலக்கித் தந்தாள். இவ்வளவு கனிகரத்துடன் அவள் கவனித்துச் செய்தும் திலகவதி, "வைத்துவிட்டுப் போ; இப்படி" என்று வேண்டா வெறுப்பாகச் சொன்னாள்.

"ஆறிவிடப் போகிறது. சூடாகச் சாப்பிடுங்கள்" எனப் பயபக்தியோடு மெல்லக் கூறினாள் மங்கை.

"எனக்குத் தெரியும், நீ செய்ய வேண்டியதைச் செய்து விட்டாயோ, இல்லையோ! போய் உன் வேலையைப் பார்' என்று வெடுவெடுப்புடன் சொன்னாள் திலகவதி.

மங்கை பேசாமல் அவ்விடத்தை விட்டு அகன்று பிள்ளை களுடைய வேலையைக் கவனிக்கலானாள்.

படுசுட்டி கணேசன் முகத்தில்கூடக் கலகலப்பில்லை. எல்லோரும் மௌனமாக இருந்து சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு எழுந்து போயினர்.

குழாயில் கையைக் கழுவிக்கொண்டு திரும்பிய சிவகுமாரன், பற்றுப் பாத்திரங்களை எடுத்து வந்து அலம்ப வந்த மங்கையைப் பார்த்து, "சித்தி, மனதில் ஒன்றும் வைத்துக்கொண்டு வருந்தாதீர்கள். தம்பி சொன்னான் வந்ததும், காலையில் நடந்த பாரதம் சாயங்காலமும் தொடர்ந்து நடக்கும் என்று எண்ணவில்லை. அம்மாவுக்கு என்னவோ தெரியவில்லை. அவர்கள் எப்போதும் இப்படி இருந்ததில்லை......" என்று அனுதாபத்தோடு சொன்னான்.

"என் துரதிஷ்டம் அப்படி, சிவா! இதற்கு யாரை நோவது?......" என்று மங்கை தழுதழுத்த குரலில் சொன்னாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை சித்தி! இன்றைக்கு என்னமோ கிரஹணம் மாதிரி......" என்று சொல்லிக்

கொண்டு திரும்பினவன் ஏதோ நினைத்துக் கொண்டவனாய், "ஆமாம், சித்தி! இருந்தாற் போலிருந்து அம்மா ஏன் இப்படி எரிந்து விழுகிறார்கள்? நீங்கள் ஏதாயினும்......" என வார்த்தையை முடிக்காமலே கேட்டு நிறுத்தினான்.

இக்கேள்வி மங்கையின் உள்ளத்தில் சுருக்கெனத் தைத்தது. "நான் ஒன்றும் செய்யவில்லை. அம்மாதான்......" என்ன சொல்கிறோமென்று நினைக்காமல் படபடவெனப் பதில் சொன்னாள்.

"அப்படியா!" என மொழிந்தவாறே, யோசனையோடு நடந்து சென்றான் சிவகுமாரன்.

மாதா கோவில் மணி ஆறு அடிக்கலாயிற்று. நன்றாக இருட்டுவதற்குள்ளாகவே, மங்கை முதன் முதலாகப் பூசையறையில் தூங்காமணி விளக்குக்கு எண்ணெய் ஊற்றி நன்றாகத் தூண்டிவிட்டுப் பின் பக்கத்திலிருக்கும் விளக்குகளைப் பொருத்தினாள். பிள்ளையாருக்கும், நடராஜாவுக்கும் ஒரு கும்பிடு போட்டு விழுந்து வணங்கிவிட்டு எழுந்தாள். அவளுடைய நா ஏதோ உச்சரித்துக் கொண்டிருந்தது. கண்கள் பனித்திருந்தன. சில விநாடிகள் தியானத்துக்குப் பின் அவள் பூசையறையை விட்டு வெளியேறி மற்ற இடங்களில் மின்சார விளக்குகளை ஏற்றினாள். கோகிலாவும் அவளுக்கு உதவி செய்தாள். வெளியே விளையாடிக் கொண்டிருந்த கணேசன் விளக்கு வைத்ததுமே வீட்டுக்குள் வந்து புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு படிக்கலானான். கோகிலாவும் மற்றொரு பக்கம் அமர்ந்து வாசித்துக் கொண்டிருந்தாள்.

மங்கை அவசர அவசரமாகச் சமையல் வேலை செய்து கொண்டிருந்தாள். பொழுது போனது தெரியாமல் திலகவதி உன்மத்தம் பிடித்தவள்போல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். வெளியே எங்கே போவதாயிருந்தாலும் கோர்ட்டிலிருந்து நேராக வீட்டுக்கு வந்து விட்டே போகும் பழக்கமுடைய சதானந்தம் பிள்ளை அன்று வெகு நேரமாகியும் வரவில்லை.

6—45 மணிக்கு வக்கீல் குமாஸ்தா வந்தார். அவரைப் பார்த்துவிட்டு, "எங்கே ஐயாவைக்காணோம், நாயுடு?" என்று கேட்டுக்கொண்டே எழுந்தாள் திலகவதி. அப்போ திருந்த மன நிலையில், குறித்த காலத்தில் கணவன் வராத தற்கு அவள் மிக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். 'அவர் இருந்தால் உரிமையோடு சண்டை போட்டிருக்கலாமே?' என்று நலிந்து போயிருந்த அவள் மனம் நினைத்தது. ஆகவே தான் வக்கீல் குமாஸ்தாவைக் கண்டதும், அவர் வராதது குறித்து ஆவலோடு விசாரிக்க எழுந்தாள்.

வக்கீல் குமாஸ்தா, வீட்டு எசமானியைக் கவனிக்கவில்லை. அப்போதுதான் உள்ளேயிருந்து வந்து கொண்டிருந்த மங்கையர்க்கரசியைப் பார்த்த அவர், "சின்னம்மா, ஐயா வர இன்னைக்கு நேரமாகும். சாப்பாட்டுக்குத்தான் வருவாராம். காபி பலகாரம் எடுத்து வைத்துக்கொண்டு காத்திருக்க வேண்டாம் என்று சொல்லச் சொன்னார். கோனார் ஐயா கோர்ட்டண்டையே வந்து அழைச்சிக் கொண்டு போயிட்டார் நம்ம ஐயாவை" என்று சொன்னார். "பொழுதோடவே வந்திருப்பேன், அம்மா! பஸ் கிடைக்க வில்லே, காத்துக் காத்துக் கால்கூடக் கடுத்தும் போச்சு."

திலகவதி அப்படியே திகைத்து நின்றுவிட்டாள். 'நான் கேட்டதைக்கூடக் காதில் வாங்காமல், அவளண்டை யல்லவா போய்ச் சொல்லுகிறான் இந்தக் குமாஸ்தா! எல்லாருமல்லவா என்னை இப்படி அலட்சியப் படுத்தத் தொடங்கிவிட்டார்கள். என் வயிற்றில் பிறந்த பிள்ளைகளே என்னைச் சட்டை செய்யவில்லையென்றால், மற்றவர்கள் எங்கே மதிக்கப் போகிறார்கள்? எல்லாம் நான் கொடுத்த இடம். எதற்கெடுத்தாலும் அவளை முன்னே கொண்டு வந்து நிறுத்திப் பேசியது எனக்கே தீம்பாகி விட்டது. உம்... இருக்கட்டும்' என்று நினைத்துக்கொண்டே எரிச்சலுடன் பின் பக்கம் போனாள்.

நிலைமையை எளிதில் ஊகித்துக்கொண்ட மங்கை, ,அம்மா இருந்தார்களே, பார்க்கவில்லையா? அவர்களிடம்

சொல்லியிருக்கப் படாதா?'' என்று சொல்வதற்குள் குமாஸ்தா திரும்பிப் போய்விட்டார்.

பந்தாடிவிட்டு வந்த .விசுவநாதனும் சிவகுமாரனும் தத்தம் இடத்திலமர்ந்து படிக்கலாயினர்.

'ஐயோ, இன்றைக்குப் பார்த்து அத்தான் காலதாமத மாக வரப் போகிறரே! மணியாய் விட்டால்...?' மங்கை நிலைகொள்ளாமல் கூடத்துக்கும் சமையல் உள்ளுக்குமாகப் போய் வந்து கொண்டிருந்தாள். அவள் சமையல் வேலையை முடித்து வெகு நேரமாயிற்று. பிள்ளைகளுக்கு முன் திலகவதியைச் சாப்பிடக் கூப்பிடலாம் என்றலோ அவள் என்ன சொல்வாளோ என்ற பயத்தால் மங்கை மௌனமா யிருந்தாள்.

'டாண்' என்று மணியடித்து, கடியாரம் ஏழுரை யானதைக் காட்டியது. நிமிர்ந்து பார்த்த மங்கை திடீரென நினைத்துக் கொண்டு தன் உடைகளை யெல்லாம் எடுத்து மூட்டை கட்டலானுள்.

''என்ன மூட்டை கட்டுகிறீர்கள்? சித்தி! எங்காயினும் ஊர்ப் பிரயாணமா? என்ன!''

விசுவநாதனின் கலகலவென்ற சிரிப்புப் பேச்சு மங்கையை விதிர்ப்புற வைத்தது. பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''ஆமாம்: விசுவம்! ஊருக்குத்தான்......'' என்று சிரிப்பைச் சிரமப்பட்டு வருவித்துக்கொண்டு சொன்னுள்.

''என்ன விளையாடுகிறீர்களா? சித்தி!'' என்று திகைப் புடன் கேட்ட விசுவநாதன், ''வண்ணானுக்குப் போட அழுக்குத் துணிகளை மூட்டை கட்டுவது எனக்குத் தெரியாதா? நான் வேடிக்கைக்காக இப்படிக் கேட்டால், உடனே ஒரே போடு போடுகிறீர்களே!'' என்று தன்னைச் சமாளித்துக் கொண்டு சொன்னுன்.

''இல்லை, விசுவம்! நான் ஊருக்குத்தான் பயணப்படு கிறேன். மூட்டையைப் பார்; அழுக்குத் துணிகளா இருக்கிற தென்று. உன்னிடம்கூட விளையாடுவேனு....''

"நீங்க சொல்வது உண்மையா? சித்தி......"

"நிசமாகத்தான் சொல்கிறேன், விசுவம்."

"இப்ப என்ன ஊருக்கு? அம்மா இன்றைக்கு ஏம்தா சத்தம் போட்டார்களே; அதற்காகவா கோபித்துக்கொண்டு போகிறீர்கள், சித்தி?"

"சே! அதற்கில்லை; விசுவம். முன்னமே ஊருக்குப் போக வேண்டுமென்று தீர்மானித்தேன். போய்விட்டு......"

"என்னமோ, சித்தி! நீங்க இந்தச் சமயத்தில் போவது அவ்வளவு நன்றாயில்லை......"

தற்செயலாக அப்பக்கம் வந்த திலகவதி இவர்களுடைய உரையாடலை ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"நீ வேறு விதமாக நினைக்காதே, விசுவம்! சாதாரணமாகத்தான்......"

"என்ன, மகனும், சித்தியுமாக மந்திராலோசனையில் ஆழ்ந்திருக்கிறாப் போலிருக்கு? அதுதான் கூப்பிடக் கூப்பிட மங்கைக்குக் காது கேட்கவில்லை......" என்று புன்சிரிப்புடன் கூறிக்கொண்டே அங்கு வந்தார் சதானந்தம் பிள்ளை. அவரைப் பின் தொடர்ந்தாற் போல் வந்த கோகிலா, "உங்களுக்குச் சங்கதி தெரியாதா, அப்பா......ஊம், சித்தியிடத்திலே அம்......"

விசுவநாதன் உதட்டின்மீது விரலை வைத்து அவ்விஷயத்தைச் சொல்ல வேண்டாம் என்று குறிப்புக் காட்டவே, கோகிலா அப்படியே பேச்சை நிறுத்திவிட்டாள்.

காலையில் நிகழ்ந்த சம்பவத்தை, வெளியே போய் எத்தனையோ, விவகாரங்களைக் கவனித்தும் மறவாதிருந்த பிள்ளையவர்கள் வந்துமே மங்கை மகிழ்ச்சியாய் இருக்கிறாளா? வருத்தமாயிருக்கிறாளா? என்று கவனிக்கலானார். அக்கவனத்தில் அவருக்குக் கோகிலாவின் பேச்சும் காதில் விழவில்லை. விசுவநாதன் சைகையும் தெரியவில்லை.

"ஆமாம்; இது என்ன மூட்டை முடிச்சு? மங்கை......" என்று துணி மூட்டையை வியப்புடன் பார்த்தவாறே வினவினார் பிள்ளையவர்கள்.

மங்கையின் ஊர்ப் பிரயாணத்தை எப்படியும் நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்ட விசுவநாதன், "சித்தி ஊருக்குப் போகப் போகிறார்களாம்......அப்பா!" என்று சடக்கெனச் சொன்னான்.

இதைக் கேட்டதுமே பிள்ளையவர்களின் முகம் மாறி விட்டது. "என்ன? திடீரென ஊர்ப் பிரயாணம், மங்கை?" எனக் கேட்டவர் சில விநாடி கழித்து, ஊரிலிருந்து கடிதம் ஏதாயினும் வந்திருக்கிறதா என்ன? உன்னை வரச் சொல்லி அண்ணன் அல்லது அம்மா......" என்று யோசனையோடு கேட்டார்.

இதுவரை மறைவிலிருந்த திலகவதிக்கு அதற்கு மேல் இருக்க முடியவில்லை.

"அண்ணன் அன்பாக அழைக்கக்கூடிய பவிசு இருந்தால் இவளைப் பிடிக்கவே முடியாது. ஆட்டுக்கு வாலை அளந்து தானே வைத்திருக்கிறான் ஆண்டவன்" என முழக்கஞ் செய்து கொண்டு இவர்கள் முன் வந்தாள்.

திலகத்தைக் கண்டதுமே எல்லோருக்கும் கிடுகிடுத்து விட்டது. இவளுடைய சுடு சொல்லைக் கேட்டு மங்கை துடி துடித்துவிட்டாள். மனங் குமுறி யழலானாள்.

திலகவதி கணவனை விரைப்பாக நோக்கி, "உங்களால் தான் இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கிறது. இங்கு தன்னால் தான் எல்லாம் நடக்கிறதென்று அவள் நினைத்துக் கொண் டிருக்கிறாள். தான் போய்விட்டால் எல்லாமே, அஸ்தமித் துப் போய்விடும் என்பது இவள் எண்ணம். அதனால்தான் ஊருக்குப் போகவேண்டும் என ஜபர்தஸ்து பண்ணுகிறாள். 'மங்கை, போகாதே, மங்கை' என்று நான் மண்டியிட்டுக் கேட்பேன் என அவள் மனப்பால் குடிக்கிறாள். இவள் ஜம்பம் இந்தத் திலகத்திடம் நடக்காது, தெரியுமா?"

சதானந்தம் பிள்ளை, "திலகம், இதென்ன! ஒன்றுமில் லாததற்கு இப்படி களேபரம் பண்ணி ஊரை இரண்டாக்கு கிறாய்? மங்கை உனக்கு வைரியா, என்ன?......" என்று உணர்ச்சியை அடக்கமாட்டாமல் கேட்டார்.

திலகவதி, "அவள்தான் எனக்கு வைரியாகி எத்தனையோ நாளாகிவிட்டதே! இனி மேலா ஆக வேண்டும்? உங்களுக்கு வேண்டுமானால் உறவாயிருக்கட்டும், நீங்கள் அவளுடன் குலாவுங்கள்; உங்கள் பிள்ளைகள் குலாவட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை......?"

"திலகம், நீ பேசாமலிருக்க மாட்டாய்... .." என்று இரைந்தார் பிள்ளையவர்கள். அவர் பொறுமையை இழந்து விட்டார்.

"அவள் எனக்கு வைரியாகி எத்தனையோ நாளாகி விட்டதே!" என்ற வார்த்தையைக் கேட்டதுமே மங்கை, 'ஐயோ!' என்று ஆற்றாமையால் அலறினாள். விஷயம் வெகு தூரத்துக்குப் போய் விட்டது. அக்கா தன் மீது என்ன காரணத்தாலோ அளவில்லாத அசூயையும் வெறுப்பும் கொண்டுவிட்டாள். இனி ஒரு கணம் தங்குவது மரியாதை யல்ல" என்று தீர்மானித்த அவள் அக்கணமே புறப்படக் கருதி, "அத்தான், அக்காவைக் கோபிக்காதீர்கள். அவர் கள்மீது எவ்விதத் தப்புமில்லை. என் மீதுதான் தவறு. என்றால் உங்களுக்குள் சண்டை வேண்டாம் நான் போகி றேன். எனக்கு விடை கொடுங்கள்......" என்று கூறிய வாறே மூட்டையைக் கையில் எடுத்தாள்.

"எங்கே போகப் போகிறாய்?" எனப் பதற்றத்துடன் கேட்டார் பிள்ளையவர்கள்.

"ஊருக்குத்தான், அத்தான்."

"அவசரப்படாதீர்கள், சித்தி!" என்று கூறித் தடுத்தான் விசுவம்.

“போகாதீர்கள், சித்தி” என்று அழுது கொண்டே கூறிய கோகிலா மங்கையின் கையிலிருந்த மூட்டையைத் தான் வாங்கிக் கொள்ள முயன்றாள்.

“என்னை இப்போது தடுக்காதீர்கள்......” என்று விசுவத்தையும், கோகிலாவையும் விநயமாகக் கேட்டுக் கொண்டாள் மங்கை.

“அட! இவர்கள் வேண்டுவதும், அவள் பிகு பண்ணுவதும் பார்க்க வேடிக்கையாகத்தான் இருக்கிறது. வீட்டு இளக்காரம் வண்ணானுக்குத்தான் தெரியும் என்ற கதை போல இந்த வீட்டு எசமானின் ஏமாளித்தனத்தையறிந்து சிறுக்கி ஏய்க்கிறாள்” என்று ஏளனமாகப் பேசிய திலகவதி, “போயேன் கழுதை! உன்னை யார் இரு, இரு என்கிறது. நாடகம் நடிக்கிறாயே! .....” என வெறுப்போடு சொன்னாள்.

“போகிறேன், அக்கா! நீ சொன்னாலும் நான் இனி இருக்கமாட்டேன்” என்றாள் மங்கை.

“இப்போது என்ன அவசரம்? நாளை, அல்லது நாளை மறுநாள் போனால் போகிறது” என்றார் பிள்ளையவர்கள்.

“அத்தான், உங்கள் பேச்சை மீறி நடப்பதாக எண்ணக் கூடாது. நான் அவசியம் போய்த்தான் ஆகவேண்டும் ......” என்று சொன்னாள் மங்கை. அவள் பேச்சில் கண்டிப்பு தொனித்தது.

தன்னை ஏக்கத்துடன் பார்த்த பிள்ளைகளைப் பார்த்து, “சீக்கிரம் திரும்பி வந்துவிடுவேன், கோகிலா!” என்று ஆறுதல் கூறினாள்.

“உன்னை யாரும் திரும்பி வரும்படி வேண்டவில்லை. நீ வர வேண்டாம்” என்று கர்ஜித்தாள் திலகவதி.

“வரமாட்டேன்; அக்கா! நீங்க பயப்படாதீர்கள்; குழந்தைகளை ஆறுதல் படுத்த அப்படிச் சொன்னேனே யொழிய, மறுபடியும் இங்கு வரும் எண்ணம் எனக்குக்

கிஞ்சித்தும் கிடையாது'' என்று கூறியவாறு மூட்டையுடன் நடக்கலானாள் மங்கை.

மற்றவர்களுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அவள் வெளியே போகையில், ''எங்கே போகிறாய், சித்தி!'' என்று கேட்டுக் கொண்டே கணேசன் ஓடிவந்து கையைப் பிடித்தான். குழந்தை அவனுக்கு அங்கு நிகழ்ந்த பிரளயம் தெரியவே தெரியாது. சிவகுமாரன் மட்டும் சத்தத்தைக் கேட்டு வந்து வருத்தத்துடன் வழியில் நின்றிருந்தான்.

''இரு கண்ணு; வருகிறேன்'' என்று கூறி மங்கை அவனைக் கட்டி உச்சி மோந்து விட்டுப் போகலானாள். ஒன்றும் தோன்றாமல் அவன் திகைத்து நின்று விட்டான்.

மங்கை வாயிற்படியை விட்டு இறங்கிய பின்தான் பிள்ளையவர்கள் திடுக்கிட்டார். அவர் விசுவத்தை அருகழைத்து ஏதோ சொன்னார். பணப்பையிலிருந்து நாலைந்து நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தார்.

''இரு, சித்தி! வருகிறேன்'' என்று விசுவநாதன் ஓடினான்.

''நானே போய்விடுவேன், நீ இரு, விசுவம்!''

திலகவதி கணவனை ஒருவிதமாகப் பார்த்து விட்டுக் கழுத்தைச் சொடுக்கிக் கொண்டு உள்ளே விரைப்பாகப் போனாள்.

தந்தையும், மகளும், மகனும் இருளில் போய்க் கொண்டிருக்கும் மங்கையை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். மங்கை போவதையும், மற்றவர்கள் வருத்தத்தையும் கவனித்த கணேசன், திடீரென ஏதோ புரிந்து கொண்டவன் போல, ''சித்தி!'' எனக் கதறியவாறு ஓட முயன்றான். சிவகுமாரன் அவனைப் பிடித்துத் தூக்கிக் கொண்டான்.

# 8

அருணோதயம் உண்டாவதற்கு முன்பே, உறக்கத்தை விட்டு எழுந்து விட்டனர் அவ்வூர் மக்கள். கிராமவாசிகளாதலால், அந்த அதிகாலையிலேயே சுறுசுறுப்பாகக் காரியங்களைச் செய்யலாயினர். மங்கையர் வீதிகளில் சாணந் தெளித்துப் பெருக்கிச் சுத்தஞ் செய்தனர். ஆடவர் வயல் நோக்கிச் சென்றனர்.

மயிலாடுதுறை நீர்வளமும், நிலவளமும் உடைய ஊராதலால் எங்கு பார்த்தாலும் செழுமையாகக் காணப்பட்டது. ஊர்ப் பெயருக் கேற்ப, கோல மயில்கள் ஒயிலாகத் தோகை விரித்து ஆடாவிட்டாலும், வயல் வெளிகளில் நஞ்சைப் பயிர்களும், புஞ்சைப் பயிர்களும், கதிர் பிடித்துக் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. பச்சைப்பசேல் என்ற இப் பசுமைக் காட்சி காலை சூரியோதயத்தில் பார்ப்பதற்கு ரம்மியமாயிருந்தது. வேளாள வீதியில் ஓட்டு வில்லை வீடு ஒன்றின் வாசலில் கோலம் போட்டுவிட்டு நிமிர்ந்த வயோதிக மாது ஒருத்தி வண்டிச் சப்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். உடனே முதுமையால் ஒளியிழந்திருந்த அவள் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

"மங்கை! என்ன செய்யறே, உள்ளே! ஓடிவா. பட்டணத்திலே இருந்து......" என்று அக்கிழவி வீட்டின் உட்புறத்தை நோக்கிக் கூறினாள்.

"பட்டணத்திலே இருந்து" என்றதும் அவள் சொல்லி முடிக்கும் முன்பே மங்கையர்க்கரசி செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டுப் பதறியோடி வந்தாள்.

"பட்டணத்திலே இருந்தா? யாரு அம்மா?"

"சிவாவோ, விசுவமோ? சரியா தெரியவில்லை. அக்கா வீட்டிலே இருந்துதான்......"

இதற்குள் மாட்டு வண்டி வீட்டை நெருங்கி விட்டது. மங்கையின் கண்கள் பரபரப்போடு வண்டியினுள் பார்த்தன. உள்ளே உட்கார்ந்திருப்பது சிவகுமாரன்தான் என்பது அவளுக்கு உடனே தெரிந்து விட்டது. ஆனால் அவன் முகம் வாட்டமாயிருப்பதைக் கண்டு அவள் கலவரமடைந்தாள். 'என்னவோ ஏதோ!' என்று எண்ணி அவளுடைய உள்ளம் ஏங்கியது. 'நான் சென்னையிலிருந்து வந்து ஒரு வாரங்கூட ஆகவில்லை; அதற்குள் அங்கிருந்து ஆள் வந்திருக்கிற தென்றால்? அதுவும் மனவருத்தத்துடன் வந்திருப்பதைக் கவனித்தால்? பட்டணத்திலிருந்து வந்திருப்பது வேறு யாருமில்லை. அக்காவின் பெரிய பிள்ளையே வந்திருக்கிறான். என்ன விஷயமாயிருக்கும்? ஒருவேளை என்னைக் கூப்பிட்டு வரச் சொல்லி அனுப்பியிருப்பார்களோ? அத்தான் சொல்லியனுப்பி யிருப்பாரோ? அக்கா சொல்லி அனுப்பியிருப்பாரோ? அக்கா விருப்பத்துக்கு மாறாக அத்தான் கூறியனுப்பி யிருக்க முடியாது. அக்காவேதான் கூறியனுப்பியிருக்க வேண்டும். என்மீது வெறுப்புக் கொண்டு வீட்டை விட்டு விரட்டியடித்த அக்கா என்னைக் கூட்டி வரச்சொல்லி அனுப்பியிருப்பாளா? நான் பிரிந்து வந்தபின் அக்கா என்மீது கொண்ட கோபம் மாறி......' மங்கையின் மனத்தில் ஒரு சில விநாடிகளில் இப்படிப் பல எண்ணங்கள் தோன்றின.

"வா சிவா, ஊரிலே அம்மா, அப்பா எல்லாம் சுகமா?" என்று சிவகாமியம்மாள் கேட்டு வரவேற்பது உணர்ந்து மங்கை நினைவுகளிலிருந்து விடுபட்டு, சிவகுமாரனை வரவேற்க எதிர்கொண்டு போனாள்.

இதற்குள் சிவகுமாரன் வண்டியை விட்டு இறங்கிப் படுக்கை பெட்டிகளை எடுத்து வைக்கச் செய்தபின், வண்டிக் காரனுக்குச் கூலி கொடுத்து அனுப்பிவிட்டு வந்தான்.

மங்கை பெட்டி படுக்கைகளை இரு கைகளிலும் எடுத்துக் கொண்டு, "நேரே பட்டணத்திலிருந்துதான் வருகிறாயா, சிவா?......" என்று கேட்டுக் கொண்டே சிவகுமாரனை

உள்ளே அழைத்துப் போனுள். சிவகாமியம்மாள் அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

மங்கை சாமான்களை உள்ளறையினுள் கொண்டு போய் வைத்துவிட்டு வந்து, சிவகுமாரனை நோக்கி, "அத்தான், அக்கா, கணேசன், கோகிலா, விசுவம் எல்லாம்......" என்று க்ஷேமலாபம் விசாரிக்கலானுள்.

சிவகுமாரன், "எல்லாம் சௌக்கியந்தான், சித்தி!......" என்று புன்முறுவலுடன் சொன்னுன்.

"யோக க்ஷேமம் விசாரிப்பது இருக்கட்டும், மங்கை! முதலில் சிவா காலைக் கடனை முடிக்கட்டும். பலகாரமெல்லாம் செய்தான பின்னர்......" என்று அன்னை மகளுக்குக் கடமையை உணர்த்தினுள்.

மங்கை சிவகுமாரனைப் புறக்கடைக்கு அழைத்துச் சென்றுள். பல் விளக்கச் சொல்லிவிட்டு வெந்நீர் போட்டுக் கொண்டு போய்க் கொடுத்தாள். அவன் குளித்து வருவதற்குள் பலகாரம் தயார் செய்து விட்டாள்.

சிவகுமாரன் சிற்றுண்டி, காபி முதலியன அருந்தியான பின், அவன் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த மங்கை, "என்ன சிவா, முகம் ஒரு மாதிரியிருக்கிறது? உனக்கு உடம்பு ஒன்றுமில்லையே?......அல்லது வேறு யாருக்காயினும்......" என்று கேட்டு நிறுத்தினுள்.

"எனக்கு ஒன்றுமில்லை" என்று சொல்லி விட்டு, சிவகுமாரன் மங்கையின் முகத்தை ஒருவிதமாக நோக்கினுன்.

"என்ன தயங்குகிறுய்? சிவா! யாருக்காயினும்......"

மங்கை பதற்றத்துடன் கேட்டாள்.

சிவகுமாரன் சிந்தனையோடு "இருந்தது சிவகாமியம்மாளுக்கும் சிந்தாகுலத்தை யுண்டு பண்ணியது.

"சொல்லு, சிவா! யாருக்கு என்னவென்று?"

பாட்டியும் கேட்ட பின் சிவகுமாரனால் பேசாமலிருக்க முடியவில்லை.

“சித்தி வந்தபின், தம்பி நோயில் விழுந்து விட்டான்......”

“யாரு விசுவமா?” என்று கேட்டாள் சிவகாமியம்மாள்.

“கணேசனுக்கா உடம்பு அசௌக்கியம்?” என்று சொல்லி வைத்தாற்போல் வினவினாள் மங்கை.

“ஆமாம், சித்தி! கணேசனுக்குத்தான் காய்ச்சல்......கை கால் எல்லாம் வீங்கியிருக்கு......”

மங்கை பதறிப்போய், “என்ன, சுரமா? கைகால்களும் வீங்கியிருக்கா?”

“காய்ச்சல் கண்டால் கையும் காலும் ஏன் வீங்கும்? இதென்ன, புதுவிதமான நோயாயிருக்கிறதே!”

சிவகாமியம்மாள் வியப்போடு பேசினாள்.

“டாக்டரை அழைத்து வந்து காட்டினீர்களா? அவர் என்ன சொன்னார்? மருந்து என்ன கொடுத்திருக்கிறார்?”

மங்கை மூச்சு விடாமல் கேட்டுக்கொண்டே போனாள்.

சிவகுமாரன், “நம்ம குடும்ப டாக்டர்தான் வந்து பார்த்து மருந்து கொடுக்கிறார். ஆனால் குணம் சிறிதும் காணவில்லை......”

“என்ன? மருந்து கொடுத்துமா குணம் ஏற்படவில்லை. இது என்ன?” உணர்ச்சியால் மங்கையின் பேச்சு தடைப்பட்டது.

“அதுதான் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கவலையாயிருக்கிறது. ஆகாரம், தூக்கங்கூடக் கொள்ளாமல் பித்துப் பிடித்தவர்கள் போல் உட்கார்ந்திருக்கிறார்கள்.”

சிவகுமாரன் தயங்கித் தயங்கி விஷயத்தை விவரித்தான்.

"ஒருவேளை தெய்வக் குற்றமா யிருக்குமோ! குல தெய்வத்துக்கு......"

"சிவகுமாரன், "டாக்டர்கூட இது உடம்பால் உற்ற நோயாகத் தெரியவில்லை. வேறு ஏதோ......"

"வேறு என்னவாயிருக்கும்?......பச்சைக் குழந்தைக்கு......"

"கணேசன் சதா சித்தி, சித்தி என்று அரற்றிக் கொண்டே யிருக்கிறான், சித்தி! அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் உங்கள் கவனத்தால் அவனுக்கு உடம்பு அப்படி யிருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். சுரம் கண்டால் கைகால் வீங்குவதற்குக் காரணமில்லை என அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்......"

"ஆமாம்; ஆமாம். இப்போதுதான் எனக்கும் ஞாபகம் வருகிறது. குழந்தைகள், சிறுவர்கள் பெற்றவர்களிடத்தோ பிறரிடத்தோ பாசமாயிருந்தால் அவர்கள் பிரிவைத் தாங்காமல் இப்படித்தான் உடம்பு உப்புசமாகிக் கஷ்டப் படுவார்கள். சில பிள்ளைகளுக்கு மூஞ்சியெல்லாம்கூட வீங்கிவிடும்......இதை நான் பார்த்திருக்கிறேன்......"

பாட்டி பேசி நிறுத்துவதற்கு முன்னே, சிவகுமாரன் பேசத் தொடங்கி, "அதற்கேற்றாற்போல, பாரு பாட்டி! சித்தி வந்த மறுநாளே கணேசன் படுக்கையில் விழுந்து விட்டான் .." என்று சொன்னான்.

"அப்படியா?" என்று கேட்டவாறு சிவகாமியம்மாள் மகளின் முகத்தைப் பார்த்தாள்.

மங்கை கண்கலங்கி அழுதுகொண்டிருந்தாள்.

சிவகுமாரன் அவளைப் பார்த்து, "அப்பாவும் அம்மாவும் உங்களைக் கையோடு அழைத்துவரச் சொன்னார்கள், சித்தி!" என்று மெல்லச் சொன்னான்.

"அம்மாவும் சொன்னார்களா?" என்று கேட்டறிய வேண்டுமென்று மங்கை ஆவல் கொண்டாள். ஆனால் அன்னையின் முன்னர் அவ்விதம் கேட்டால், தான் மன வருத்தத்தோடு திரும்பி வந்துள்ள விஷயம் தெரிந்துவிடுமே என்று வாளாவிருந்தாள்.

சிறிது நேரங் கழித்து, மங்கை சிவகுமாரனை ஏறிட்டுப் பார்த்து, "போவோம், சிவா!" என்று சொன்னாள். "ஆமாம்; பட்டணத்துக்குத் திரும்ப டிரெயின் எப்போது போகிறது? தெரியுமா சிவா?"

சிவகுமாரன், "தெரியும்; வரும்போதே கேட்டுக் கொண்டு வந்தேன். பகல் தனுஷ்கோடி பாஸஞ்சர்; தப்பினால் செங்கோட்டை பாஸஞ்சரில் நாம் போகலாம். எதற்கும் சீக்கிரம் ஸ்டேஷனுக்குப் போய்விட்டால், சௌகர்யம்போல் போகலாம்" என்று பதில் சொன்னான்.

மங்கை, "இதோ ஒரு நொடியில் பகல் உணவைத் தயாரித்து விடுகிறேன். சாப்பிட்டுவிட்டுப் புறப்படுவோம்" என்று கூறிவிட்டு அவசரமாக உள்ளே செல்ல முயன்றாள்.

"வந்து ஆறேழு நாள்கூட ஆகவில்லை. அதற்குள்...உம், குழந்தை அப்படியிருக்கும்போது போகத்தான் வேண்டும்" என்று மெல்ல சிவகாமியம்மாள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

மங்கை இது கேட்டுச் சடக்கெனத் திரும்பி உதட்டின் மீது விரலை வைத்துச் சும்மா இருக்குமாறு சிவகுமாரனுக்குச் சைகைக் காட்டினாள்.

சிவகுமாரன் மங்கையர்க்கரசியின் பெருங் குணத்தை மனதுக்குள் வியந்து கொண்டிருந்தான். பெற்ற தாயிடம் கூடத் தான் மன வருத்தத்துடன் வந்ததைச் சொல்லாமல் சாதுரியமாக நடந்து கொண்டதோடு இப்போது வந்து கூப்பிடும்போது மறுமொழி கூறாமல் உடன் வரவல்லவா உடன்பட்டு விட்டாள்? இவ்வளவு உயர்ந்த மனப்பான்மை

யுடையவளை அம்மா ஏதோ தவருகக் கருதிக் கோபித்துப் பகைமை பாராட்டினுளே என்று அவன் எண்ணி வருந்தினுன்.

*　　　*　　　*

சதானந்தம் பிள்ளை வீட்டுக் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் காணப்பட்ட கலவரம் அவருடைய நிம்மதியற்ற நிலைமையையும் தீவிர யோசனையையும் பிரதிபலிப்பதா யிருந்தது. இடையிடையே அவருடைய கண்பார்வை கூடத்தைச் சேர்ந்தாற்போலிருந்த அறையை நோக்கலாயிற்று.

அந்த அறைக்குள் திலகவதி, கணேசன் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள். சோகை நோய் கொண்டவன்போல் உடம்பெல்லாம் ஊதி முகம் புடைத்து வெளுத்திருக்கும் மகனையே கவலையோடு கவனித்துக் கொண்டிருந்த அவள் அடிக்கடி கணவனையும் கடைக் கணிக்கலானுள். மூச்சுப் பேச்சில்லாமல் வெகு நேரம் அசைவற்றிருப்பதும் திடீர், திடீரெனக் கண்விழித்து ஏதேதோ அரற்றுவதுமாயிருக்கும் தம்பியைப் பார்த்து, என்னவோ ஏதோ என்று அச்சங் கொண்டு, கோகிலா ஒரு பக்கத்திலிருந்து குழம்பிக் குமுறிக் கொண்டிருந்தாள். விசுவநாதன் தன் அறையிலிருந்து ஏதோ காரியமாய் வருவது போல, அடிக்கடி அப்பக்கம் வந்து நிலைமையைக் கவனித்துப் போய்க் கொண்டிருந்தான்.

டாக்டர் சிறிது நேரத்துக்கு முன்தான் வந்து போனுர். அவர் கணேசனைக் குறித்துக் கவலை கொள்வதற்கு ஒன்றுமில்லை யென்றும், கூடிய சீக்கிரம் குணமாய் விடுமென்றும், தைரியம் சொல்லிவிட்டுப் போயும் திலகவதியும் ஆறுதல் கொள்ளவில்லை; சதானந்தம் பிள்ளையும் சாந்தியடையவில்லை.

“ஏன் திலகம்? மங்கை வருவாளா?...” என்று இருந்தாற்போலிருந்து பிள்ளையவர்கள் மனைவியை நோக்கிக் கேட்டார்.

இக்கேள்வி திலகவதியை ஈட்டி கொண்டு குத்துவது போல் இருந்தது. தான் சண்டை போட்டு அவளை அனுப்பி விட்டதாகவே, கணவனிலிருந்து பிள்ளைகள்வரை அனைவரும் எண்ணியிருப்பதை அவர்களுடைய ஒவ்வொரு பேச்சி லிருந்தும் அவள் உணரலானாள். 'அவர்கள் எண்ணுவ தென்ன? உண்மையும் அதுதானே? தான் மங்கையைப் பற்றித் தவருன எண்ணங் கொண்டு எடுத்ததற்கெல்லாம் அவள்மீது சிடுசிடுவென எரிந்து விழுந்தும் வாயில் வந்தவாறு பேசியும் தொந்திரவு கொடுத்து வந்ததால்தான், இந்த ஒருவினை தாங்காமல் அவள் போய்விட்டாள்' என்று திலகவதியின் மனம் ஒப்புக்கொள்ளத்தான் செய்தது. இந் நிலையில், மங்கை இங்கு மீண்டும் திரும்பி வருவாளா என்பது இவளுக்கும் சந்தேகமாய்த்தானிருந்தது. ஆனாலும் இவள் ஐயப்பட்டதையே கணவன் கேட்டபோது இவளுக்குக் குற்றமாகப் பட்டது. தான் மங்கை விஷயத்தில் அநியாய மாக நடந்து கொண்டதாகச் சுட்டிக் காட்டவே, கணவன் இவ்விதம் கேட்பதாக எண்ணி மனம் வருந்தினாள்.

கணேசன் நிமிஷத்துக்கு ஒருதரம், 'சித்தி! சித்தி' என்று அரற்றுவதைக் கேட்டுவிட்டு, பக்கத்து வீட்டுப் பெரியம்மா, 'இவனுக்கு உடம்பாலுற்ற நோய் ஒன்றுமில்லை, திலகம்! மங்கையின் கவனமாய் இருக்கிருன் இவன். அவள் வரட்டும், பார். இவன் உடனே எழுந்து விளையாடுகிருனு இல்லையா என்று?' என்று கூறி, 'மங்கையை உடனே வரச் சொல்லி எழுது! இல்லாவிட்டால் ஆளையனுப்பிக் கூட்டி வரச் சொல். நான் சொன்னது சரியா இல்லையா அப்புறம் சொல்லேன்' என்று சொல்லிய யோசனை மீதுதான் அவள் கணவனிடம் கூறி மூத்த மகனை அனுப்பி வைத்தாள். பிள்ளைக்கு இப்படி யிருக்கிறதே என்ற தாபத்தால், அவள் அப்படி மங்கையை அழைத்துவரச் சிவகுமாரனை அனுப்பி ளுளே யொழிய, அடுத்த கணத்திலே அவள், 'ஏன் அனுப்பி னேம்? கூப்பிட்டதற்கு மதிப்புக் கொடுத்து மங்கை வராமல் போய்விட்டால், முகத்தில் கரியைப் பூசிக்கொண்டது

போலத்தானே ஆகும்?'' என்று பலவிதமாக எண்ணி நெஞ்சம் நைந்தாள். தன் மனநிலையை அவள் வெளிக்குக் காட்டவில்லையே தவிர, உள்ளுக்குள் மட்டும், 'மங்கை வருவ தென்பது சந்தேகம்தான். வந்த பிறகே நிச்சயம்' என்று எண்ணிக் கொண்டிருந்தாள். இந்நிலையில் ,கணவன் கேட்ட கேள்வி அவள் மனதை வாள் கொண்டு அறுத்தது.

''என்ன அப்பா, அப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று இடைமறித்தாள் கோகிலா.

பிள்ளையவர்கள் மகளை நோக்கி, ''இல்லையம்மா, சித்தி திரும்பி வருவாள் என்று எனக்கென்னமோ நிச்சயமில்லை'' என்றார்.

கோகிலா, ''அப்படி நினைக்காதீங்க, அப்பா! தம்பிக்கு அசௌக்கியம் என்றதும், அலறியடித்துக் கொண்டு வரப் போகிறாங்க, பாருங்களேன்!...''

''உம். பார்க்கலாம்!'' என்று பெருமூச்சு விட்டவாறே சொன்ன பிள்ளையவர்கள், ''மங்கைக்கு கணேசன்மீது உசிர் தான். ஆனாலும்...'' என்று இழுத்தார்.

திலகவதி திடீரென எழுந்து பின்பக்கம் போகலானாள். தந்தையும் மகளும் பேசும் பேச்சைக் கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை. இக்குறிப்பை ஒரு நொடியில் உணர்ந்து கொண்ட பிள்ளையவர்கள் தாம் பேசவந்த பேச்சை அத்துடன் நிறுத்தலானார். மேலும் தாம் அங்கிருந்தால் மகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய திருக்கும் என்று கருதி அவர் மெல்லத் தம் இருப்பிடத் துக்குப் போனார்.

இச்சமயம் விசுவநாதன் தன் அறையிலிருந்து பரபரப் பாக வெளியே வந்தான்.

இது கண்டு, ''என்ன!'' என்று வினவிய பிள்ளையவர்கள் நின்று எதையோ உற்றுக் கவனிக்கலானார். ''ஏதோ வண்டி

வந்து நிற்கிறுப் போலிருக்கே! யார் வருகிறது பார், விசுவம்?'' என்று கூறினார்.

''இதோ போகிறேன், அப்பா!...நம்ம வீட்டுக்கா? வண்டி வருகிறதைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். ஒரு வேளை.. சித்திதான்......''

விசுவநாதன் பேசி முடிப்பதற்கு முன் கோகிலா மேல் மூச்சு வாங்க ஓடோடியும் அங்கு வந்து, ''அப்பா! அப்பா! சித்தி வந்துட்டாங்க, அப்பா!'' என்று கூறிக் குதிக்கலானாள்.

''என்ன!'' என்று வியப்போடு கேட்டவாறே வெளிப் பக்கம் நோக்கினார் பிள்ளையவர்கள்.

''ஆமாம்; அப்பா! சித்திதான் வருகிறார்கள், அண்ணனுடன்......''

விசுவநாதனும் கோகிலமும் கூறியபடி, சிவகுமாரன் பின்னே வர மங்கையர்க்கரசி முன்னே விரைந்து வந்து கொண்டிருந்தாள்.

எதிர் பாராதபடி ஏற்பட்ட சந்தடி கேட்டுத் திலகவதி பின்புறமிருந்து வந்தாள்.

சதானந்தம் பிள்ளை, ''வா, அம்மா! மங்கை என்று மங்கையை வரவேற்றார்.

அத்தானைக் கண்டதும் மங்கை நாணத்தால் ஒரு கணம் தலை குனிந்தவாறு தயங்கி நின்றாள். ஆயினும் கணேசன் மீதுள்ள பரிவுணர்ச்சி அவளை உந்தித் தள்ளியது. ஆகவே அவள், ''குழந்தைக்கு என்ன உடம்பு, அத்தான்?'' என்று துயரக் குரலில் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

அவளுடைய தாய்மை யுணர்ச்சியைக் கண்டு சதானந்தம் பிள்ளை திகைத்து நின்றார்.

''வாங்க, சித்தி!......எங்கே வராம போய்விடுவிங்களோன்னு...'' என்று கூறிக்கொண்டே அவளை எதிர்கொண்டு

அழைத்த கோகிலாவுக்கு வாய்மீது விரலை வைத்துப் பேசாம லிருக்குமாறு விசுவநாதன் குறிப்புக் காட்டினான். ஆதலால், அவள் அத்துடன் பேச்சை நிறுத்தி, மங்கையைச் சேர்த்து அணைத்தவாறு அழைத்துப் போகலானாள்..

"குழந்தை எங்கே இருக்கிறான், கோகிலா!......" எனக் கேட்டுக்கொண்டே போன மங்கை வழியில் திலகவதி நின்றி ருப்பதைக் கண்டு, "அக்கா, கணேசனுக்கு உடம்புக்கு என்ன? எனக்கு முன்னமே சொல்லியனுப்பக் கூடாதா?......" என்று துக்கந் தொண்டையை அடைக்கக் கேட்கலானாள்.

மங்கையைக் கண்டதுமே, அவள் முகத்தில் எப்படி விழிப்பது என்று வெட்கத்தால் உடல் குன்றி நின்றிருந்த திலகவதி இவளுடைய கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தாள். வாயெழாமல் போகவே அவள் கைகளால் கணேசன் படுத்திருக்கும் இடத்தைக் காட்டினாள்.

உடனே மங்கை ஒரே பாய்ச்சலாக, கணேசன் இருக்கு மிடத்தை அடைந்தாள். கோகிலா பின்னோடேயே சென்றாள்.

ஒரே தாவாகத் தாவிய மங்கை கணேசனை அப்படியே எடுத்துத் தழுவிக்கொண்டு, "கண்ணு, ஒரு வாரத்திலே இப்படி உருக்குலைந்து விட்டாயே!" என்று கூறிப் பொருமினாள்.

மருந்து மயக்கத்தில் மெய்மறந்து படுத்திருந்த கணே சன், மங்கையின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் உணர்வு கொண்டு விழித்து எழுந்தான். மெல்ல மெல்லத் திறந்த அவன் கண்கள் மங்கையைக்கண்டதும் அகல விரிந்தன. "ஆ! சித்தி!" என்று அலறியவாறே அவன் மங்கையை இறுகச் சேர்த்துக் கட்டிக் கொள்ளலானான்.

"சித்தி! எங்கே போனே? சித்தி!......என்னைத் தனியா விட்டுட்டு எங்கே போனே? சித்தி!.......என்னண்டை சொல்

லாமெ கொள்ளாமெ கூட எங்கேயோ போயிட்டியே சித்தி!......''

குழந்தையின் பிரலாபம் மங்கையை மேலும் உருக்கி விட்டது.

"நான் எங்கேயும் போகவில்லையடா, ராஜா! உன்னை விட்டுவிட்டு இனி எங்கேயும் போகமாட்டேண்டா, கண்ணு!......நீ நல்லபடி ஆகிவிட்டால் போதும்'' என்று சொல்லியவாறே அவனை உச்சி மோந்து முத்தமிட்டாள். அவளுடைய மென்கரங்கள் கணேசனுடைய உடம்பைப் பரிவோடு வருடலாயின.

"என்னை விட்டுவிட்டு மறுபடியும் போயிடமாட்டியே? சித்தி!.....!''

மீண்டும் கணேசனின் பிஞ்சு உள்ளம் பேசியது.

"ஊஉம். போகவே மாட்டேன். உன்னை விட்டுவிட்டு ஒரு இடத்துக்கும் போகமாட்டேன். ஒரு கணமும் பிரிய மாட்டேன், கண்ணு!'' என்று கன்னத்தைக் கிள்ளியவாறு கொஞ்சலாகச் சொன்னாள்.

கணேசன் மங்கையை இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டு, "சித்தி! நீ இல்லாதே போகவே எனக்கு என்னவோ போலிருந்தது, சித்தி! ஒரு இராத்திரி பூதம்போல் ஒன்னு வந்து என்னை மருட்டிச்சி, சித்தி! நீ இருந்தா அதை அடிச்சித் துரத்திருக்கமாட்டே?...அம்மாவைக் கூப்பிட்டா வரவே இல்லே, சித்தி!'' என்று மழலை ததும்ப மொழிந்தான்.

"அப்படியா! இனிமேல் நீ எதற்கும் பயப்படாதே; நான் இருக்கிறப்போ, பூதம் பிசாசு எதுவும் உன்னண்டை வராது'' என்று மங்கை குழந்தைக்குத் தைரியம் சொன்னாள்.

இச் சோகக் காட்சியை எல்லோரும் தூர இருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். கோகிலா மட்டும்தான் மங்கையின் பக்கத்தில் இருந்தாள்.

பிள்ளையவர்கள் தம் மனைவியைக் குறிப்போடு பார்த்தார். மழைத்துளி போல கண்ணீரைச் சோரவிட்டுக் கொண்டிருந்த திலகவதி கணவன் பார்வையை எதிரிட மாட்டாது, தலை குனிந்து கொண்டாள். அவள் முகத்தில் வெட்கம் வழிந்தது.

சிவகுமாரன் பிரயாணப் பையுடன் உள்ளே போகலானான். விசுவநாதனும் மன ஆறுதலுடன் போனான்.

# 9

உதய ஞாயிற்றின் கதிரொளி ஜன்னல் வழியாக அறைக்குள் நுழைந்து வெளிச்சத்தை அதிகமாக்கிக் கொண்டிருந்தது. அவ்வளவு அதிகாலையில் எறும்புகள் மேல் நோக்கிச் சாரி சாரியாகச் சுவரின் மீது போய்க் கொண்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை முட்டைகளைத் தாங்கியிருந்தன. கீச், கீச்செனச் சப்தமிட்டவாறு சிட்டுக் குருவிகள் ஜோடி ஜோடியாகப் பறந்து வருவதும் போவதுமாயிருந்தன. அவை தங்கள் சிறு மூக்குகளால் வைக்கோலையும் தென்னங் கீற்று ஓலைகளையும் கொத்திக் கொண்டு வந்து முகட்டில் வைக்கலாயின.

சதானந்தம் பிள்ளை சோபாவில் சாய்ந்தவாறு அன்று காலை வந்த "ஹிந்து" பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் போட்டிருந்த மூக்குக்கண்ணாடியின் தங்க விளிம்பில் சூரிய கிரணம் பட்டுத் தகதகத்தது. ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிச் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்த அவர் ஒரு பக்கத்தில் பி. ஏ. பி. எஸ் ஸி. ஆனர்ஸ்., பி. ஓ. எல். முதலிய பரீட்சைகளின் 'ரிஸல்ட்' வந்திருப்பதைக் கண்டு 'நெம்பர்களைக்' கவனிக்கலானார். பி. எஸ் ஸி. ஆனர்ஸ். 'ரிஸல்டை' ஊன்றிக் கவனித்து வந்த அவருடைய முகத்தில் ஏமாற்றம் தோன்றலாயிற்று. அவர் ஒரு முறைக்கு மூன்று முறை அந்த 'ரிசல்ட்' நெம்பர்களைத் திருப்பித் திருப்பிப்

பார்க்கலானார், கடைசியாக அவர் உதட்டைப் பிதுக்கி விட்டுத் தலை நிமிர்ந்து அறைக்கு வெளியே கண்ணை ஓட்டி, "சிவா! ஏ! சிவா!" என்று கூப்பிட்டார்.

"பெரியண்ணாவையா கூப்பிடணும், அப்பா?" என்று கேட்டுக் கொண்டே கோகிலா அங்கு வந்தாள்.

"ஆமாம், அம்மா! அவன் இல்லையா?" சதானந்தம் பிள்ளை கோகிலாவைக் கேட்டார்.

"இதோ கூட்டி வருகிறேன், அப்பா! அண்ணா இப்போது தான் குளித்து விட்டு அறைக்குள் போச்சு."

"மெல்ல வரட்டும். அவசர மொன்றுமில்லை" என்று அவர் மெதுவாகச் சொல்லிவிட்டுப் பத்திரிகையில் மீண்டும் கண்களைப் பதித்தார்.

கோகிலா உள்ளே போன சிறிது நேரத்துக்கெல்லாம், சிவகுமாரன் பிள்ளையவர்கள் இருக்குமிடம் வந்தான். தந்தையார் காலைப் பத்திரிகையைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதுமே அவன் மனம் குழம்பியது. அவனுடைய உடம்பில் பதற்றம் காணப்பட்டது. தான் வந்திருப்பதைத் தெரிவிக்கக் கூட அவன் அஞ்சி நின்றான்.

தலையங்கப் பகுதியுள்ள பக்கத்தைப் புரட்டிவிட்டு மறு பக்கத்தைப் பார்க்க முயன்ற சமயத்தில், சிவகுமாரன் வந்து நின்றிருப்பதைத் தற்செயலாகக் கண்டுவிட்ட பிள்ளையவர் கள், "ஆமாம்; சிவா, உன் பரீட்சை நெம்பர் என்ன?......" என்று கேட்டார்.

இவ்வினா சிவகுமாரனைக் கிடுகிடுக்க வைத்தது. அவன் முகம் அச்சத்தால் கருத்தது. தந்தை கூப்பிடுகிறார் என்ற போதே பரீட்சை 'ரிசல்ட்' பற்றி விசாரிக்கத்தான் அழைக் கிறார் என ஊகித்து அதற்கு என்ன பதில் சொல்வது என்று நடுங்கிய சிவன் இப்போது இன்னும் அதிகமாக விதிர் விதிர்ப் புக் கொண்டான்.

"501" என்று வாய் குழறச் சொன்னான்.

பிள்ளையவர்கள், "501 ஆ?" என்று கேட்டவாறே பரீட்சை 'ரிஸல்ட்' பிரசுரிக்கப் பட்டிருந்த பக்கத்தைத் திருப்பிப் பார்த்து, "அந்த நெம்பர் இல்லை போலிருக்கிறதே! அப்போதிலிருந்து தேடித் தேடிப் பார்க்கிறேன். ஒரு வேளை என் கண்களுக்குத்தான் தெரியவில்லையோ? நீ பார் இருக்கிறதா என்று?" எனச் சொல்லித் தாம் வைத்திருந்த தினசரியை மகனிடம் நீட்டினார்.

சிவகுமாரன் நடுங்கிய கையால் அப்பத்திரிகையை வாங்கினான். ஆனாலும், அவன் அதைப் பார்க்கத் தயங்கினான். ஏனென்றால் அவன் ஏற்கனவே தன் பரீட்சை 'ரிஸல்டை'ப் பற்றிக் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தான். ஆனால், அதை அவன் தந்தையிடம் எப்படிச் சொல்வது என அஞ்சியிருந்தான். இப்போதோ சொல்லியாக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இதனிடையே அவன் மனதில் ஒரு சபலம் உண்டாயிற்று, ஒரு வேளை சர்க்கார் கெஜட்டில் தன் பரீட்சை நெம்பர் வந்திருந்தால், இப் பத்திரிகையிலும் வெளியாயிருக்குமல்லவா? என்று. "கடவுளே! நான் 'பாஸ்' செய்ததாக நெம்பர் வந்திருக்கக்கூடாதா? நான் விசாரித்தறிந்தது பொய்யாகி விடலாகாதா?" என்று அவன் மனம் பிரார்த்தித்தது. அந்தச் சஞ்சல நெஞ்சத்தோடு அவன் பத்திரிகையில் வெளியாகியுள்ள பரீட்சை நெம்பர்களை ஊடுருவிப் பார்க்கலானான். அவன் பாஸ் செய்திருந்தால் தானே அவனுடைய பரீட்சை நெம்பர் வந்திருக்கும்? பல முறை பார்த்தால் வராதது வந்துவிடுமா, என்ன? ஆனாலும் அவன் பஞ்சத்தில் அடிபட்ட ஒருவன் படியால் அரிசியைப் பலதடவை அளந்து குறுணி பதக்காகாதா என்று பார்ப்பது போலே, பரீட்சை 'ரிஸல்ட்' அச்சாகியுள்ள பத்தியைத் துழாவித் துழாவிப் பார்த்தான்.

"என்னடா, சும்மா பார்க்கிறாய்? உன் நெம்பர் இல்லையில்லையா?"

சதானந்தம் பிள்ளை பொறுமையை இழந்து கேட்டார்.

சிவகுமாரன் "காணவில்லை" என்று மெல்லக் கூறினான்.

"காணாமல் எங்கேனும் ஓடிப்போய் விட்டதோ! காண வில்லையாம். இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமில்லை?"

சிவகுமாரன் தலைகுனிந்து கொண்டு மௌனமாயிருந் தான்.

"உன் நெம்பர் எப்படி வரும்? நீ பரீட்சையில் நன்றாக எழுதியிருந்தால்தானே!......"

சிவன் இப்போது மெல்ல நிமிர்ந்து, "எல்லாம் நன்றாகத் தான் எழுதியிருந்தேன், அப்பா!......" என மிக மெதுவாகச் சொன்னான்.

"நன்றாக எழுதியிருந்தால் ஏன் பாஸ் மார்க் கிடைத் திருக்காது?" என்று பிள்ளையவர்கள் ஆத்திரத்தோடு கேட்டார்-

"பிஸிக்ஸ் சப்ஜக்டில் கொஞ்சம் மார்க் குறைவாகி விட்டது. அப்பா!......" என மீண்டும் தலையைக் கவிழ்த்துக் கொண்டே அவன் பதிலளித்தான்.

"அப்போ உனக்குப் பரீட்சை 'ரிஸல்ட்' முன்னமே தெரிந்துவிட்டது என்று சொல்லு. அப்படியானால் அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?... .."

"நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள் என்று......"

"இப்போ கோபித்துக் கொள்ள மாட்டேனா?......"

சிவகுவாரன் பேசாமலிருந்தான்.

"ஆமாம், பரீட்டை 'ரிஸல்ட்' எப்படித் தெரிந்தது? ஒவ்வொரு சப்ஜக்டிலும் மார்க் இவ்வளவு கிடைத்திருக்கிற தென்று இவ்வளவு விவரமாக யார் உனக்குச் சொன்னது?"

சிவகுமாரன், "என்னுடைய வகுப்பு மாணவன் நீலகண்டன் என்பவனுடைய தகப்பனார், சர்வகலாசாலை

ரிஜிஸ்டிரார் காரியாலயத்தில் வேலையாயிருக்கிறார். அவர் மூலமாக........''

''ஊம்; அப்படியா?'' என்று யோசனையோடு கேட்ட பிள்ளையவர்கள், ''அவன்களை ஏண்டா விசாரித்தாய்? நம்மவர்கள் எதிலும் தலையெடுக்கக் கூடாது என்று கங்கணங் கட்டிக்கொண்டு வேலை செய்பவர்களாயிற்றே! விரோதியிடம் போய் ஜாதகம் கேட்பது போல......அவன்களண்டை போய்......அவன்களே கூட 'மார்க்'கைச் சுழித்து விட்டிருப்பான்களே! 'எக்ஸாமினர்கள்' போட்டிருப்பதைக் கூட அடித்து .......'' என்று பேசிக்கொண்டே போனார்.

சிவகுமாரன் சஞ்சலத்தோடு தந்தையின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீ சரியாகப் படித்திருந்தால், இப்படியெல்லாம் ஏண்டா கேட்டு அலையணும்?......'' என்று ஆதங்கத்தோடு கேட்ட சதானந்தம் பிள்ளை, ''உனக்குப் படிப்பின்மீது எங்கே கவனம் இருக்கு? 'அங்கே கூட்டம்; இங்கே பந்தாட்டம்' என்றல்லவா திரிந்துகொண்டிருக்கிறாய்? ஊர் விவகாரத்தில் கவனம் போய்விட்டால் உருப்பட்டாற்போல்தான். படிக்கிற பிள்ளைக்கு அரசியல், அந்தக்கட்சி இந்தக்கட்சி என்ற வம்பு தும்பு எதுக்கடா? காலாகாலத்திலே காலேஜுக்குப் போனோமா, திருப்பி வந்தோமா? என்றில்லாமல் ...''

கணவனுடைய உரத்த குரலைக் கேட்டுவிட்டு அங்கு வந்த திலகவதி, ''என்ன இது காலையிலே? இரைச்சல்! சிவன் என்ன செய்தான்?......''என்று வினவினாள்.

''அத்தான் இவ்வளவு சத்தம் போட்டு எப்போதும் பேசியதில்லையே! என்னமோ ஏதோ'' என்று எண்ணியவளாய், அடுக்களையில் வேலை செய்து கொண்டிருந்த மங்கையர்க்கரசி கையில் துடுப்புடன் அக்காவின் பின்னாலேயே அங்கு வந்து பக்கம் ஒதுங்கி நின்று ஒற்றுக் கேட்கலானாள்.

மனைவியைப் பார்த்ததும் பிள்ளையவர்களுக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. ''என்ன செய்தானா? உன்மகன் படித்துக்

கிழித்து விட்டான். நீ பெற்ற பிள்ளையின் பவிஷு இதோ பத்திரிகையில் சிரிப்பாய்ச் சிரிக்கிறது........."

திலகவதி விஷயத்தைப் புரிந்துகொள்வதற்கு முன் மங்கை தெரிந்து கொண்டாள்.

"அப்போ சிவாவின் நெம்பர் பேப்பரிலே வரவில்லையா? இவன் பெயிலாகி விட்டானு, என்ன?" எனத் திடுக்கிட்ட வாறு கேட்டாள் திலகவதி.

"ஜோஸியன் எவனுயினும் போகிருனு? பார்! தக்ஷிணை வைத்துக் கேட்போம்........." என்று பிள்ளையவர்கள் ஏளனத்துடன் சொன்னுர்.

"என்ன சிவா? நீ பரீட்சையிலே ......." என்று திலகவதி மகனை நோக்கிக் கேட்டு நிறுத்திஞள்.

சிவகுமாரன் முகத்தைக் கீழே கவிழ்த்துக்கொண்டான்.

இதைக் கவனித்த மங்கை, 'ஐயோ! சிவன் எப்படிக் குன்றிப் போயிருக்கிருன்? இவன் பரீட்சைக்கு இராத்திரி யெல்லாம் கண்விழித்துப் படித்தானே! எப்படி பாஸாகாமல் போய்விட்டது?' என்று எண்ணி வருந்திஞள்.

இந்தச் சமயத்தில் வெளி வராந்தாவிலிருந்து, "அண்ணு இருக்காங்களா?" என்று யாரோ குரல் கொடுத்தார்கள்.

எதிர் அறையிலிருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த விசுவநாதன் யார் என்று வெளிவந்து பார்ப் பதற்குள், பிள்ளையவர்கள், "யார் அது?" என்று பதிலுக்குக் குரல் கொடுத்தார்.

"ஓ! இருக்கிறீர்களா? நான்தான் மாசிலாமணி" என்று சொல்லிக்கொண்டே, மாசிலாமணி முதலியார் உள்ளே வந்தார்.

அவர் குரலைக் கேட்டபோதே, திலகவதி அவ்விடத்தை விட்டு அகன்ருள். அதற்கு முன்பே மங்கை சமையற்

கட்டுக்குப் போய்விட்டாள். சிவகுமாரன் ஒதுங்கி நின்று அவருக்கு வழி விட்டான்.

மாசிலாமணி முதலியார் வரும்போதே இரத்தப் பசை யற்ற தம் கண்களால் அவ்விடத்தை ஆராய்ந்து கொண்டு வந்தார்.

இவரைப் பார்த்தவுடன், பிள்ளையவர்கள் ஆசனத்தை விட்டு எழுந்தவாறு, "வாருங்கள் முதலியார்வாள், வாருங்கள்" என்று வரவேற்று உட்கார வைத்தார். பின் தாமும் தம் இருக்கையில் அமர்ந்து, "ஆமாம், இன்றென்ன புது வழக்கமாயிருக்கிறதே! நான் இருக்கிறேனு என்று குரல் கொடுத்துவிட்டு வருவது?......" என்று கேட்டார்.

மாசிலாமணி முதலியார், "ஹிஹி, ஒன்றுமில்லை, அண்ணு! நான் வாயிற்படியில் காலை எடுத்து வைத்தபோது, நீங்கள் ஏதோ உரத்த குரலில் கோபமாகப் பேசுவதுபோல் கேட்டது. சந்தர்ப்பப் பேதமாயிருக்குமோ என்றுகூட எண்ணித் தயங்கினேன். அப்படியே திரும்பிப் போய்விட்டுப் பின்னர் வரலாம் என்றும்... ..." என்று இழுத்தார்.

"அட ஓ! இதுதானு விஷயம்?" என்று புன்சிரிப்போடு கூறிய பிள்ளையவர்கள், "நான் உரத்துப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு ரொம்ப பயந்துவிட்டீர்களோ?" என்று கேட்டார்.

மாசிலாமணி, "இல்லையண்ணு, நீங்க எப்போதும் இப்படிச் சத்தம் போட்டுப் பேசுவதில்லை யல்லவா? அதனுல் தான்......"

பிள்ளையவர்கள், "என்ன! அஹிம்சாவாதி வீட்டில்கூட இப்படி அட்டகாசமாயிருக்கிறதே என்று எண்ணினீர்களில்லையா?......"

மாசிலாமணி, "அஹிம்சாவாதியும் மனிதன்தானே, அண்ணு! எவ்வளவு சாந்தமூர்த்தியாயிருந்தாலும், மனிதனுக்குக் கோபதாபங்கள் இல்லையென்ருல் அவன் மனிதனு

யிருக்க முடியாது. அப்பேர்ப்பட்ட தேவாதி தேவனுக்குக் கூட......''

மாசிலாமணி முதலியார் வந்தவுடனேயே, அந்தச் சந்தடி சாக்கில் மெல்ல அவ்விடத்தைவிட்டுப் போய்விட முயன்ற சிவகுமாரன் காலெழாது இதுவரை தவித்துக் கொண்டிருந்தான். அவன் இருவர்க்கிடையிலும் பேச்சு மும்முரமாய் வரும் இச்சமயத்தில் ஓசைபடாமல் செல்ல அடியெடுத்து வைத்தான்.

வந்ததிலிருந்து அசடு வழிய நின்று கொண்டிருக்கும் சிவகுமாரன் மீதே கடைக்கண் வைத்திருந்த மாசிலாமணி முதலியார் தம் பேச்சை அப்படியே நிறுத்திவிட்டு, "என்ன சிவா, நான் வந்ததும் போகிறாய்?—ஆமாம்; உன் பரீட்சை 'ரிஸல்ட்' தெரிந்ததா? அதைக்கேட்டுத் தெரிந்து கொள்ளலா மென்றால் நீ...'' என்று கேட்டுக் குறும்பு நகை புரிந்தார்.

இது கேட்டு, சிவகுமாரன் திடுக்கிட்டு நின்றுவிட்டான்.

சதானந்தம்பிள்ளை, "நீங்கள் வரும்போது நடந்து கொண்டிருந்த ரகளைக்கு இதுதான் காரணம். பையன் பரீட்சையில் கோட் அடித்து விட்டான்'' என்று புன் முறுவலை வருவித்தவாறு சொன்னார்.

ஏற்கனவே, தாம் வரும்போது அரைகுறையாக விழுந்த வார்த்தைகளாலும் அங்கு நிலவியிருந்த சூழ்நிலையாலும் விஷயத்தை ஒருவாறு ஊகித்திருந்தும் மாசிலாமணி முதலி யார், ஒன்றும் தெரியாதவர்போல் பாசாங்கு செய்தவாறு, "என்ன! சிவனின் பரீட்சை ரிஸல்ட் என்ன ஆயிற்று என் கிறீர்கள்? பெயிலாகிவிட்டானென்று சொல்கிறீர்கள்?'' என்று வியப்புத் தோன்றக் கேட்டார்.

ஏற்கனவே அவமானத்தால் குன்றிப்போயிருந்த சிவ குமாரன், முதலியாருடைய கேள்விக்கு அப்பா என்ன விதமாகப் பதில் சொல்வாரோ என்ற அச்சத்தோடு குனிந்த தலையை நிமிராமலே கடைக்கண்ணால் நோக்கினான்.

தம்முடைய மகன் பரீட்சையில் பெயிலாகிவிட்டான் என்பதை, சதானந்தம்பிள்ளை தம் வாயாலேயே சொல்லச் சிறிது சங்கடப்பட்டார். ஆனாலும் கேட்டதற்குப் பதில் சொல்லியாக வேண்டிய நிலையில் இருந்ததை நினைத்து, "நிலைமையைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியவில்லையா? 'ரிஸல்ட்' என்னவிதமாய் இருந்திருக்கும் என்று. நீங்கள் வரும்போது நான் உரத்த குரலில் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தேன் என்றால், அது எதற்காக இருக்கும் என்று தெரிந்துகொள்ள உங்களுக்கு அதிக நேரம் ஆகுமா? இவனுடைய பரீட்சை ரிஸல்ட் இன்று காலைப் பத்திரிகையில்தான் வெளியாகியிருக்கிறது......" என்று ஒரு தினுசாக மறுமொழி கூறினார்.

மாசிலாமணி முதலியார் நரைத்த புருவங்கள் நெற்றியில் ஏற, "அப்படியென்றால் சிவன் பாஸாகவில்லையா?" என்று வியப்போடு வினவி விட்டு, சிவகுமாரன் பக்கந் திரும்பி, "ஏன் சிவா! அப்பா சொல்வது உண்மையா? அல்லது விளையாட்டுக்கு..." என்று கேட்டு நிறுத்தினார்.

சிவகுமாரன் விவரிக்க வொண்ணாத வேதனையோடும், வெட்கத்தோடும் மேலும் தலையைக் குப்புறக் கவிழ்த்துக் கொண்டான்.

விடாக்கண்டரான முதலியார் வெந்த புண்ணில் வேலைச் செருகுவதுபோல் பேசினார். "என்னால் கொஞ்சமும் நம்பவே முடியவில்லையே! சிவன் பாஸ் ஆகவில்லை யென்றால், வேறெந்தப் பையனுமே இப்பரீட்சையில் பாஸ் ஆகியிருக்க முடியாது...ஆமாம்..."

திலகவதியும் மங்கையர்க்கரசியும் உள்பக்கத்தில் இருந்தவாறே இவர்களுடைய உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தனர். 'இந்தச் சமயத்தில் இந்த மனுஷன் வந்து தொலைந்தானே! எக்கச்சக்கமாக ஏதாயினும் சொல்லி அத்தானுடைய கோபத்தை அதிகப்படுத்தி விடுவானோ என்னவோ!' என்று மங்கை அஞ்சலானாள்.

மங்கைக்கு மாசிலாமணி முதலியாரிடத்தில் நல்ல அபிப்பிராயங் கிடையாது. முதன்முதலாகப் பார்த்தபோதே அவளுக்கு அவரைப் பிடிக்கவில்லை. 'எங்கு என்ன இருக்கிறது? என்ன நடக்கிறது?' என்று அறிவதிலேயே ஆவல் கொண்டவராய் நாலாபக்கமும் பார்வையைச் சுழலவிட்டுப் பார்க்கும் கழுகுப் பார்வையும், எப்போது பார்த்தாலும் ஊர் அக்கப் போரையே அளந்து கொண்டிருக்கும் வம்புப் பேச்சும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. பிறரைப்பற்றி எப்போதும் குறைகூறிக் கொண்டிருக்கும் இவர் அத்தானைப் பற்றியும், அவர் குடும்பத்தைப் பற்றியும் பிறரிடம் அக்கப் போர் அளக்காமலிருப்பார் என்பது என்ன நிச்சயம்? அத்தகைய மனிதரிடம் உத்தமரான அத்தான் எப்படி நட்பு வைத்துக் கொண்டிருக்கிறார் என்று அவள் அடிக்கடி எண்ணி வியப்பதுண்டு. ஆனால் அக்காளும் அவர்பால் மரியாதை காட்டி நடப்பதைப் பார்த்து, தான் அவசரப்பட்டு யாரிடமும் அவரைப்பற்றி அபிப்பிராயம் வெளியிடக் கூடாது என்று அடக்கிக் கொண்டாள். ஆனால் இச்சமயத்தில் அவளுடைய மன உணர்ச்சியை அடக்கிக் கொள்ள முடியவில்லை. 'கட்டையிலே போகிறவன். இச்சமயத்தில் வந்து தொலைந்தானே!' என்றுதான் தன் மனத்துக் குள்ளாகச் சபித்துக் கொண்டாள்.

'பரீட்சையில் தவறிவிட்ட அண்ணனுக்கு அப்பா என்ன விதமான தண்டனை கொடுப்பாரோ?' வைவாரோ?' என்ற அச்சத்துடன் விசுவநாதன் தன் அறையிலிருந்து, இவ் விடத்தை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சதானந்தம்பிள்ளை மாசிலாமணி முதலியாரை வியப் பாக நோக்கி, "என்ன முதலியார்வாள், அப்படிச் சொல்லு கிறீர்கள்? சிவன் விஷயத்தில் உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை எப்படியுண்டாயிற்று? நீங்கள் என்ன கண்டீர்கள்?......" என்று கேட்டார்.

மாசிலாமணி முதலியார் பொக்கை விழுந்த வாயை அகலத் திறந்து கலகலவென நகைத்தவராய், "நான் எங்கு.

இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அண்ணா? எங்கெங்கு என்ன நடக்கிறது? யார் யார் என்ன செய்கிறார்கள்?' என்று எனக்கு இருந்த இடத்திலிருந்தே எல்லாம் தெரியும்......'' என்றார்.

சதானந்தம்பிள்ளை, "அதுதான் எனக்கு நன்றாகத் தெரியுமே! நீங்கள் நாரதர்போல் சர்வலோக சஞ்சாரி; சகலமும் அறிந்தவர் என்று...'' தமாஷாகக் கூறிக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

''ஆனால் அண்ணா! நாரத முனிக்குள்ளதாகச் சொல்லும் கலகஞ் செய்யும் குணம் மட்டும் எனக்குக் கிடையாது —...''

''இருந்தால்தான் என்ன! நாரதர் கலகம் நன்மையிலே முடியும் என்று சொல்வார்களே? அதுபோல, நீங்கள் செய்கிற கலகமும்...''

''நன்மையாக முடியுமோ, தீமையாக முடியுமோ! குண்டுணித்தனம் செய்து ஒருவர் சிண்டை மற்றொருவருடன் முடி போடும் மோசமான குணம் எங்கள் வீட்டு வேலைக்காரிக் குக்கூட கிடையாது. அண்ணா! நீங்கள் நிச்சயமாக நம்புங்கள்......''

''நான் உங்களைப்பற்றி எப்போதேனும் எதற்காயினும் சந்தேகித்ததுண்டா? திடீரென உங்களுக்கு ஏன் இப்போது அந்த விசாரம் வந்தது?...''

''சிவன் பேச்சிலிருந்து தொடங்கி இப்படி ஏதோ ஒரு தினுசாகப் பேச்சு வந்து முடிந்திருக்கிறது. அது போகட்டும். நாம் எதைப்பற்றி முதலில் பேச்சை ஆரம்பித்தோமோ அவ்விஷயத்துக்கு வருவோம்...''

சதானந்தம் பிள்ளை எதையோ நினைவு கூர முயல்பவர் போல, முகத்தில் சிந்தனை ரேகையைப் படர விட்டு, "எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்..?'' என்று கேட்டார்.

"இதற்குள் மறந்து விட்டதா?" என்று வினவிய மாசிலாமணி முதலியார், "பாவம்! உங்களுக்கு எத்தனையோ வேலைகள். கவலைக்கோ கணக்கில்லை. இந்நிலையில் எந்த விஷயந்தான் உங்களுக்கு எப்படி ஞாபகமிருக்கும்? இந்த நிமிஷத்தில் நினைத்தது அடுத்த கணத்தில்..." என்று அளந்து கொண்டே போனார்.

"சரி, சரி; முதலியார்வாள்! நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்" என்று சதானந்தம் பிள்ளை இடை மறித்துக் கூறினார்.

மாசிலாமணி முதலியார், "சொல்லத்தானே போகி றேன்!" என்று கூறியவாறு மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேல் உத்தரீயத்தின் முனையால் துடைத்துப் போட்டுக் கொண்டு, "சிவன் வாசிக்கும் கல்லூரியில் நம்ம மைத்துனனின் பையனொருவனும் படிக்கிறான். சச்சிதானந்தம் என்பவனை உனக்குத் தெரியுமோ, சிவா..."

சிவகுமாரன் வாயைத் திறக்கவேயில்லை.

மாசிலாமணி சுதாரித்துக் கொண்டு, "உனக்கு எப்படித் தெரியும்? அவன் கீழ் வகுப்பு. ஆயிரம் பேருக்கு மேல் படிக்கும் கல்லூரியில் யாரை யார் தெரிந்து கொள்ள முடியும்? ஒரே வகுப்பில் படிப்பவர்களிலேயே எல்லோரையும் தெரிந்து கொள்ள முடியாதே! அப்படியிருக்க......" என்று இழுத்தார்.

சதானந்தம் பிள்ளைக்கு இவருடைய பேச்சின் போக்கு சிரிப்பை வருவித்தது. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொண்டார்.

மாசிலாமணி முதலியார் மீண்டும் ஆரம்பித்தார். "ஆனால், அண்ணா! நம்ம சிவனை, அந்தக் காலேஜிலுள்ள எல்லோருக்குந் தெரிந்திருக்கிறது. அவனுடைய தீட்சண்ய புத்தியையும் திறமையையும் புரொபஸர்களெல்லாம் கூடப் பாராட்டுகிறார்களாம்."

சதானந்தம் பிள்ளை புன்முறுவலோடு, "என்ன முதலியார்வாள்! கதை சொல்லுகிறீர்களா? அல்லது .."

மாசிலாமணி, "என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான் சொல்வது உங்களுக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும். உங்கள் பிள்ளையைப்பற்றி சொல்கிறேனே இல்லையோ! எப்போதும் தங்கள் கையிலுள்ள சரக்கைப் பற்றி—அது விலை மதிப்பற்றதாக இருந்தாலும் சரியான மதிப்புத் தெரியாது. பிறருக்குத்தான் அதன் நன்மை நன்கு தெரியும். சிவனைப் பற்றி நீங்கள் என்னமோ எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையாகச் சொல்கிறேன். அவன் படிப்பிலே பிரகஸ்பதியையும் தோற்கடிக்கக் கூடியவன்; சாதுரியத்திலே சாணக்கியனையும் விஞ்சியவன். அவன் காலத்திலே உங்களைவிடப் பன்மடங்கு பிரசித்தியாக இருப்பான். எதிர்காலத்திலே ஜெயப்பிரகாஷ் நாராயணன், சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால் நேரு முதலிய தலைவர்களைப் போல இணையற்று விளங்கி நம் நாட்டுக்குப் பெரும் புகழும் வாங்கித் தருவான்; தெரியுமா!......"

"போதும்; போதும். முதலியார்வாள்! போதும்" என்று குறுக்கிட்டார் சதானந்தம்.

மங்கை இப்போதுதான் மூச்சைச் சரியாக விடலானாள். திலகவதியும் கீழே உட்கார்ந்து விட்டாள்.

தந்தையின் கடுமொழியைவிட மாசிலாமணி முதலியாரின் புகழ்மொழி சிவகுமாரனை மிகவும் கதி கலக்கியது. இந்த மனிதன் எதற்காக இவ்வளவு பீடிகை போடுகிறானோ என்று அவன் அஞ்சினான்; ஆதலால் மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவிப் போக முயன்றான்.

இதைக் கண்டுவிட்ட மாசிலாமணி, "சிவா! எங்கே போகிறாய்? இரு, அப்பா! உன்னிடம் சில வார்த்தை சொல்ல வேணும்" என்று கூறி அவனைத் தடுக்கலானார்.

சதானந்தம், "அவன் போகட்டும், முதலியார்வாள்! அப்புறம் பேசிக் கொள்ளலாம்......" என்று கூறி அவனைப்

போகச் செய்தார். 'அவனை எதிரில் வைத்துக் கொண்டே அவனைப் பற்றி வானளாவப் புகழ்கிறாரே! இங்கிதந் தெரியாத மனுஷன்' என்று அவருக்கு வருத்தமுண்டாயிற்று.

அவருடைய மனக் குறிப்பை யறியாத மாசிலாமணி முதலியார், "நான் கேள்விப்பட்ட வரை சிவன் தன் வகுப்பிலே எல்லாவற்றிலுமே முதன்மையாக விளங்கிக் கொண்டிருந்தானாம். அவன் விசேஷ பாடமாக எடுத்துக் கொண்டுள்ள பூத பௌதிக சாஸ்திரத்தில் மேதாவிலாசத்துடன் இருந்தான் என்று சொல்லுகிறார்கள். அப்படியிருக்க, அவன் பரீட்சையில் பாஸாகவில்லை யென்றால், அதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. கடைசியில் நான் கேள்விப்பட்டது சரியாகத்தான் போய் விட்டது..."

சதானந்தம் குறுக்கிட்டு, "இதில் என்ன முதலியார்வாள் சூது நடந்திருக்க முடியும்? நீங்கள் என்ன கேள்விப் பட்டீர்கள்?...... யார் என்ன சொன்னார்கள்?......"

மாசிலாமணி, "உங்களுக்கு உலகமே ஒன்றுந் தெரியாது. வெளுத்த தெல்லாம் பால் என்று எண்ணும் சுபாவமுள்ளவர்களுக்குச் சூதும் வாதும் எங்கே தெரியப் போகிறது? எல்லாரையும் உங்களைப்போலவே பரப்பிரமம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்....நான் சொல்லுகிறேன். சிவனைப் 'பெயி'லாக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு யாரோ சிலர் பரீக்ஷாதிகாரிகளைப் பார்த்து வேலை செய்திருக்கிறார்கள். உங்களுடைய அரசியல் விரோதிகள் மட்டுமல்ல; சிவனுடைய தீவிரப் போக்கு பிடிக்காத கல்லூரி நிர்வாகிகள் சிலர் கூட இவனைக் கவிழ்க்கும் சூழ்ச்சியில் கலந்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில் எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்கக்கூடிய மாணவனை—நன்றாக விடை யெழுதியுள்ள மாணவனைப் 'பெயி'லாக்க முடியுமா? நான் சொல்வது பொய் யென்றால், நீங்கள் அவன் எழுதியுள்ள விடைத்தாள்களை வாங்கிப் பாருங்கள்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார்.

இது கேட்டு சதானந்தம் பிள்ளை பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்து விட்டார். மாசிலாமணி முதலியார் சிவகுமாரனைப் பற்றி நல்ல விதமாக அபிப்பிராயஞ் சொல்லத் தொடங்கியதுமே, மகிழ்ச்சியும், திருப்தியும் கொண்டு அடுக்களை வேலையைக் கவனிக்கப் போய் விட்ட மங்கை இச்சமயம் திரும்பி வந்தாள். திலகவதி மிகக் கவனமாகக் கூடத்தில் அமர்ந்து பேசுபவர்களுடைய பேச்சைக் கேட்பதைக் கண்டதும் ஏதோ முக்கியமான பேச்சு என்று எண்ணி அவளும் ஒற்றுக் கேட்கலானாள்.

சதானந்தம், "நான் யாருக்கும் ஒரு தீங்கும் செய்யவில்லையே! சிவன்தான் என்ன அப்படித் தீவிரவாதியாயிருக்கிறான்? எந்த விஷயத்தில் இருக்கிறான்? எனக்கு ஒன்றும் புரியவில்லை, முதலியார்வாள்!" என்று வருத்தந் தொனிக்கக் கூறினார்.

மாசிலாமணி, "நல்லவர்களுக்குத் தானே கெட்டது செய்வது, இந்தக் காலத்துத் தருமமாயிருக்கிறது! பதவி வேட்டையாடுவதற்காகச் சந்தர்ப்பம் போல் வேஷம் போட்டுக் கூத்தாடும் சுயநலக் கூட்டத்தாரோடு சேர்ந்து நீங்கள் தாளம் போடவில்லையல்லவா! அது இன்று ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களின் கண்களைக் கரிக்கிறது. அத்துடன் உங்கள் பிள்ளை கருப்பிலும், சிவப்பிலும் அதிகம் கவனம் செலுத்துகிறான். அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின் செயலாளர்களில் ஒருவனாயிருக்கிறான்......"

"இருந்தால் என்ன? கல்லூரி மாணவனாயிருக்கும் அவன் மாணவர் சங்கத்தில்......"

"சேர்ந்து வேலை செய்யலாம், அண்ணா! ஆனால் மேற்படி சம்மேளனம் இப்போது கம்யூனிஸ்டு கட்சியின் மனோபாவமுடையவர்களுடைய ஆதிக்கத்தில் இருக்கிறதாம். அதனால் தான், காங்கிரஸ் சார்புடைய மாணவர்களுக்கும் இதிலிருந்து பிரிந்து தனிச் சங்கம் ஏற்படுத்திக் கொண்டார்களாம். இவ் விஷயங்களெல்லாம் உங்களுக்குத் தெரியாதே!......"

"இந்த இழவை யெல்லாம் யார் கவனிக்கிறார்கள்......?"

"நம்ம சிவன் மேற்படி மாணவர் சம்மேளனத்தில் பொறுப்பேற்ற பின்னர், எல்லாக் கிளர்ச்சிகளிலும் முன்னணியில் இருக்கிறானாம். அவன் இவ்விதம் இருப்பது உங்களுக்கு உடன்பாடாய்த் தானிருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். நீங்கள் ஸ்தாபனத்துக் குள்ளிருந்து கண்டிக்க முடியாதவற்றை, உங்கள் பிள்ளையைக் கொண்டு வெளியில் கண்டிக்கச் சொல்லுகிறீர்கள் என்பது ஆட்சியிலிருப்போரது அபிப்பிராயம் ....."

"அட, மடப் பயல்களா? இவர்களுடைய தவறான போக்கைக் கண்டிப்பதற்கு என் தநயனையா ஏவவேண்டும்? எனக்குத் தைரியமில்லையா? இவர்கள் செய்யக் கூடிய தகாத செய்கைகளைக் கண்டிக்க வேண்டுமென்றால் நானே கண்டித்து விட்டுப் போகிறேன். என் பிள்ளையிடம் சொல்லிக் கண்டிக்க வேண்டிய அவசியம் என்ன? ஏன் காங்கிரஸ் சுதந்திரம் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் பதவிப் போட்டிக் காக நடந்த தில்லுமல்லுகளையும், முறை தவறான காரியங் களையும் நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும் எத்தனையோ முறை கடுமையாகக் கண்டித்திருக்கிறேன். அப்படியிருக்க......"

இதெல்லாம்தான் அவர்களுக்கு மனக் கடுப்பு. இவற்றைக் கருத்திற் கொண்டுதான் அவர்கள் உங்களைக் கண்டால் கடுவன் பூனை போல் இருந்து கொண்டு உங்கள்மீது பழி தீர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்......"

"பேடிப்பயல்கள்! இவர்களால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து கொள்ளட்டும். இதற்கெல்லாம் பயந்து விட்டால், உலகில் மனிதன் வாழ முடியுமா?......"

மாசிலாமணி முதலியார் இரக்கமாகப் பேசத் தொடங்கினார்:— "குரங்கு கையில் பூமாலை அகப்பட்டமாதிரி

அவர்கள் கரத்தில் அதிகாரம் அகப்பட்டு விழிக்கிறதே, அண்ணா! அவர்கள் என்ன செய்தால் யார் கேட்க முடியும்? தலைமை அரசாங்கத்துக்கு இங்குள்ள நிலைமை தெரிவதில்லை. தெரிந்தாலும், 'ஆளைப் பார், முகத்தைப் பார்' என்று தாட்சணியம் பார்க்கிறார்கள். நீங்களோ சட்டசபையில் வகித்து வந்த அங்கத்தினர்பதவியையும் மற்றப் பதவிகளையும் உதறித் தள்ளிவிட்டீர்கள். உங்களுக்கு உத்தியோக தோரணையில் செல்வாக்கோ, அதிகாரமோ எதுவுமில்லை. இந்நிலையில்......"

"ஏன் தயங்குகிறீர்கள்? தாராளமாகச் சொல்லுங்கள், முதலியார்வாள்! என்னை அவர்கள் அப்படியே விழுங்கி விடுவார்கள் என்கிறீர்களா? பயந்து நான் மூர்ச்சை போட்டு விட மாட்டேன். வெளிப்படையாகச் சொல்லுங்கள் ...."

மாசிலாமணி, "கொஞ்ச காலத்துக்கு நீங்களும் உங்களுடைய அபிப்பிராயங்களை வெளிபடையாகச் சொல்லாமலிருங்களேன். நமது சிவன், விசுவம் ஆசியவர்களையும் எதிலும் கலந்து கொள்ளாமல் இருக்கச் சொல்வது நல்லது. கருணை சிறிதுமில்லாத கொடியவர்களின் ஆட்சி குமைகிற காலம் மிக வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது, அண்ணா! அது வரை......"

சதானந்தம், "நீங்கள் இப்படிச் சொல்வதன் நோக்கம் என்ன? முதலியார்வாள்! நீங்கள் எதையோ மனதில் வைத்துக் கொண்டுதான் இவ்விதம் பேசுகிறீர்கள். இதன் பொருள்......?"

"அயோக்கியர்களின் பொல்லாப்பு நமக்கு எதற்கு அண்ணா? உள்ளத்தை உள்ளபடி சொல்லும் இயற்கையுள்ள நீங்கள், ஊழலைக் காணச் சகியாது களைந்தெறிய முயலும் நீங்கள், வெளியில் சுதந்திரமாக உலவி வரும்வரை தங்களுடைய சுயநலக் காரியங்களை தாராளமாகச் சாதித்துக் கொள்ள முடியாதென்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அதனால்..."

"அதனால், என்னை உள்ளே தள்ள ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்கிறீர்கள்; இல்லையா?"

"நான் மட்டும் சொல்லவில்லை. அவர்கள் அபிப்பிராய மும் அதுதான் என்பதை அறிந்தே சொல்லுகிறேன்...எதற் கும் சிவனையும் விசுவத்தையும் கம்யூனிஸ்டுகளின் கூட்டங் களுக்கும் திராவிட கழகத்தினரின் கூட்டங்களுக்கும் போக வேண்டாமென்று சொல்லி வையுங்கள்."

"நான் எப்படிச் சொல்ல முடியும்? தந்தை என்பதற்காக அறிவு வந்த பிள்ளைகளின் தனிப்பட்ட விஷயங்களில் தலை யிடுவது மரியாதையாகுமா? சொன்னால்தான் இந்தக் காலத்துப் பிள்ளைகள் கேட்பார்களா...?"

"சொல்லவேண்டியதைச் சொல்லத்தான் வேண்டும், கண்டிக்க வேண்டியதைக் கண்டிக்கத்தான் வேண்டும். இப்போது பரீட்சையில் தவறி விட்டதற்காக, சிவனை நீங்கள் கடிந்து கொள்ளவில்லையா?..."

சதானந்தம்பிள்ளை யோசனையில் ஆழ்ந்தார்.

மாசிலாமணி முதலியார், "அண்ணா, நான் ஏன் இவ்வளவு தூரம் வற்புறுத்துகிறேன் என்றால், போலீஸ் மந்திரி கோமதி நாதன் உங்களை மடக்குவதற்குமுன், சிவனை புரட்சிக் கொள் கையுள்ள கட்சியில் சேர்ந்திருப்பவன் என்று காரணம் சொல்லிக் கண்ணி வைத்துப் பிடித்து உள்ளே தள்ளச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான்...முன்னமேயே ஒருமுறை அவனைக் காரணமாக வைத்து உங்கள் வீட்டைச் சோதனை போடத் திட்டம் போட்டான். ஆனால் முதல் அமைச்சர் அதற்கு இடந்தரவில்லை..."

இச்சமயம் 'ஆ!' எனப் பெரும் கூச்சல் உள்ளே இருந்து கேட்கவே, "என்ன இது? என்று கேட்டுக் கொண்டே சதானந்தம் பதறியெழுந்தார். இதற்குள், கோகிலா, அங்கு ஓடி வந்து, "அம்மா மூர்ச்சை போட்டு விழுந்திட்டாங்க, அப்பா!" என்று பயத்தால் படபடக்கச் சொன்னாள்,

சதானந்தத்தின் உடல் பதறியது. இரண்டு எட்டில் அவர் உள்பக்கம் தாவினார். மாசிலாமணி முதலியாரும் திகைப்புற்றவராய்ப் பின் தொடர்ந்தார்.

இவர்களுக்கு முன் சிவகுமாரனும் விசுவநாதனும் உள்ளே போயிருந்தனர். ஆனால் தாய் காக்கை வலிப்புப் போல் இழுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் திகைத்து நின்று விட்டனர். சதானந்தமும் செய்வதறியா மல் துடிதுடித்துக் கொண்டிருந்தார்.

திலகவதியைத் தூக்கி மடியில் தாங்கியவாறு ஆஸ்வாசப் படுத்திக் கொண்டிருந்த மங்கையர்க்கரசி அத்தானைப் பார்த்ததும் கதறிவிட்டாள்.

"என்ன? என்ன நேர்ந்தது? ஏன் அக்கா...?" சதானந்தம் வாய் குழறத் தட்டுத் தடுமாறிக் கேட்கலானார்.

மங்கை அக்காவை ஒருமுறை பார்த்துவிட்டு அத்தானை நோக்கி, "நீங்கள் சிவா விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தீர் களல்லவா? அரசாங்கம் என்னமோ உங்கள் மீதும் நடவடிக்கையெடுக்க முயன்று கொண்டிருப்பதாக அண்ணா சொன்னதைக் கேட்டதும் அக்கா பதறிப் போய்ச் சாய்ந்து விட்டார்கள்..." என்று விவரித்தாள்.

அப்போதுதான் தன் மனைவியின் முகத்தைக் குனிந்து கவனித்த சதானந்தம் அவள் முகம் கோணலாக இழுத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், "அடடா! பக்ஷவாதமல் லவா திடீரெனத் தாக்கியிருப்பதாகத் தெரிகிறது?..." என்று அவர் வாய் விளம்பியது.

"எதிர்பாராத தொன்றைக் கேட்ட அதிர்ச்சியால் இப்படி ஏற்பட்டிருக்குமா?..." என்று யோசனையோடு மாசிலாமணி முதலியார் சொன்னார்.

சதானந்தம் சிவகுமாரன் பக்கந் திரும்பி, "சிவா! உடனே போய் நம்ம டாக்டரைக் கையோடு அழைத்து வா" என்று கட்டளையிட்டார்.

அவன் இரண்டு மூன்று அடி எடுத்து வைத்துக்கூட இருக்க மாட்டான். இதற்குள் அவர் விசுவநாதனை நோக்கி, "எதற்கும் நீ போனில் டாக்டரைக் கூப்பிட்டுத் தகவல் சொல்லி உடனே வரச் சொல்" என்று பதட்டந்தோன்றச் சொன்னார்.

விசுவநாதனும் ஓடினான்.

சதானந்தம் பிள்ளை கீழே குனிந்து மனைவியின் நாடியைத் தொட்டுப் பார்த்தவாறு, "கோகிலா! கொஞ்சம் குளிர்ந்த நீர் கொண்டு வா" என்று கூறினார்.

கோகிலா பின் பக்கம் போனாள்.

# 10

நகரம் நவநாகரிக நாரீமணி போல, மினுக்கிக் குலுக்கி ஒய்யாரமாக நடை போட்டுக் கலகலவென நகைத்துக் கொண்டிருந்தது. ஆம்; பொங்கல் புது நாள் மக்களைப் பூரிப்பில் ஆழ்த்திப் புத்தாடை பூண்டு அணிமணிகள் தரித்து ஆண்களும் பெண்களும் குழந்தை குட்டிகளுடன் வளைய வந்து கொண்டிருந்தது, பார்ப்பதற்கு நகரமே நளினமாக நடனமாடுவது போன்ற பிரமையைத்தான் உண்டு பண்ணியது. தொடர்ந்தாற்போல் ஐந்தாறு வருஷங்கள் மழையில்லாமல் இவ்வருஷம் பருவமழை பெய்து வயல்களைப் பசுமையாக்கியது போல் மக்களுடைய வாழ்க்கையிலும் பசுமையை ஏற்படுத்தியதால் அவர்கள் பொங்கல் விழாவைப் பூரிப்போடு கொண்டாடி மகிழ்ந்தனர். வானமா மழை காணாது வாடியிருக்கும் பயிர்கள் போல், பஞ்சத்தால் பரதவித்த மக்கள் முன் ஆண்டுகளில் பொங்கல் வந்து பூரிப்பின்றிப் பட்டினி பசியால் நலிந்திருந்தனர். அமுத மழைத் துளிகள் விழுந்ததும் சாவியாகிச் சரிந்து விழும் நிலையிலிருந்த பயிர்கள் குப்பெனத் தளிர்த்துத் தலைதூக்கி நிற்பதுபோல், பருவமழையால்

பயனடைந்த மக்கள் பல ஆண்டுகளுக்குப் பின் இவ்வருஷந் தான் மகிழ்ச்சிப் பொங்கலோடு பால் பொங்கலிட்டு அருக் கனில் சோதிவைத்த அருள் இறைவனுக்குப் படைத்துப் பின் மனைவி மக்களுடன் வயிறுர உண்டு பேருவகை கொண் டார்கள்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்னும் பழமொழிக்கு ஏதுவான தை மாதம் பிறந்த—அதாவது பொங்கல் நாள் வந்த மூன்றும் நாள், 'காணும் பொங்கல்' என்று கூறிக் கொண்டு களிப்பு மிகக் கொண்ட மக்கள் உறவினரையும் நண்பர்களையும் உவந்து போய்ப் பார்த்து அளவளாவி விட்டு வரும் நன்னாள். அன்று மக்கள் சாரி சாரியாகப் பல பக்கங் களிலும் போய்க்கொண்டிருந்தார்கள். செல்வத்தில் திளைத் திருந்தவர்கள் கார்களிலும், குதிரை வண்டிகளிலும் செருக் கோடு சென்று கொண்டிருந்தனர். பொருளிலும் பிறவற்றி லும் மத்திய தரமாகவுள்ள மக்கள் வாடகை வண்டிகளில், பஸ்ஸில் போகலாயினர். ஏழை மக்கள் கால் நடையாகச் செல்லலாயினர். பாட்டாளி மக்கள் கூட்டம் பள்ளுப்பாட்டு பாடித் தெம்பாகச் சென்று கொண்டிருந்தது. கூலி வேலை செய்யும் குமரிப் பெண்களும் நடுத்தர வயது மகளிரும் தங்க ளுக்குத் தெரிந்தவர்களின் வீடுகள் தோறும் சென்று கும்மி யடித்துப் பொங்கல் இனும் காசு பெற்றுப் போய்க் கொண் டிருந்தனர்.

மாலை மஞ்சள் வெய்யிலில் மக்கள் இவ்விதம் வையாளி வந்து கொணடிருந்தது பார்க்கக் கண் கொள்ளாக் காட்சி யாயிருந்தது. மக்கள் முகங்களில் மகிழ்ச்சி துளும்ப, கலகல வெனப் பேசிக்கொண்டு போன கலகலப்பொலி நகர் முழு வதுமே எதிரொலி செய்து கொண்டிருந்தது.

இவ்விதம் எங்கு பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் ஆனந்தம் தாண்டவமாடிக் கொண்டிருக்க, ஒரேயொரு வீட்டில் மட்டும், ஒரு சிலர் முகங்களில் மட்டும் சோகம் குடி கொண்டிருந்தது. மயிலாப்பூர் செந்தோம் ரோட்டிலுள்ள

சதானந்தம் பிள்ளையவர்களின் மாளிகை பலவகையிலும் சோபையிழந்து காணப்பட்டது. ஒரு மணிக்கொரு தரம்— காலை மாலைகளில் கால் மணிக்கொரு தரம் அடிக்கும் செந்தோம் மாதாகோவில் மணியின் 'டணர், டணர்' என்ற ஒலி கூட அவ்வீட்டிலுள்ளோரைத் துயரத்திலிருந்து துயில்எழுப்ப வில்லை. அவ்வளவுக்கு அளவிடமுடியாத துக்கம் அவர்களை ஆட்கொண்டிருந்தது. இதற்குக் காரணம் சொல்லவேண் டியதில்லை. அந்த வீட்டுத் தலைவியான திலகவதியம்மாள் திடீரெனப் பக்ஷவாதத்தால் பீடிக்கப்பட்டுப் படுகிடையாகி, 'இப்பவோ, பின்னையோ, இன்னும் சற்று நேரத்திலோ!' என்றும் 'ஆக்கை அகத்ததோ, புறத்ததோ!' என்றும் சொல்லக்கூடிய நிலையில் இருந்து வரும்போது வீட்டிலுள்ளார்க்கு எப்படி கலகலப்பாய் இருக்க முடியும்?

விளையாட்டைப்போல், திலகவதியம்மாள் நோயில் விழுந்து ஆறு மாதத்துக்கு மேலாய்விட்டது. மூத்த மகன் பரீட்சையில் தேர்ச்சிபெறாமல் போய்விட்டதையும் அரசாங் கத்துக்கு எதிரான இயக்கங்களில் ஈடுபட்டிருப்பதால் அடக்கு முறைக்கு ஆளாகவேண்டிய அபாய நிலையில் இருப்ப தையும் ஒரே சமயத்தில் கேட்ட அதிர்ச்சியினால், ஏற்கனவே நோயில் நலிந்துள்ள திலகவதியைப் பக்ஷவாதம் பற்றிப் பல விதமான பிணிகளைக் கிளைக்கச் செய்தும் நோய் நீங்கிய பாடில்லை. ஒன்று மாறி ஒன்று வந்து கொண்டேயிருந்தது. சதானந்தம் பிள்ளையவர்கள் முதலில் ஆங்கில வைத்திய முறைகளால் சிகிச்சை செய்து பார்த்தார். அதனால், நீங்காதென்று அறிந்தபின், மாசிலாமணி முதலியாரின் யோசனை யின்படி, ஆயுர்வேதம், சித்தவைத்தியர்களைக் கொண்டு, சிகிச்சை செய்யலானார். இவற்றாலும் உடனடியாகப் பலன் ஏற்படாமல் போகவே, யூனானி, ஹோமியோபதி வைத்திய முறைகளாலும் கிகிச்சை செய்யச் சொல்லிப் பார்த்தார்.

அவருக்குச் சில விஷயங்களில் நம்பிக்கையில்லையானாலும், தம் அருமை மனைவி எப்படியாயினும் மரணப் படுக்கை

யிலிருந்து மீண்டு எழுந்தால் போதும் என்ற ஆதங்கத்தோடு மற்றவர்கள் சொல்லியபடியெல்லாம் மணி, மந்திர, ஔஷத முறைகள் அனைத்தையும் கையாண்டு பார்த்துவிட்டார். ஆனால் ஆயிரக் கணக்கில் பணம் செலவானது தவிர, அலுப்பு சலிப்பு இல்லாமல் யார் யார் என்ன சொன்னாலும் யாரைப் பற்றிச் சொன்னாலும் அவர்கள் சொல்லுகிற வைத்தியர்களை யும், மந்திரவாதிகளையும், ஜோதிடர்களையும் அலைந்து திரிந்து போய் அழைத்து வந்து பார்த்து ஏமாந்தது தவிர, திலகவதி யம்மாள் படுக்கையிலிருந்து இம்மியளவுகூட எழுந்திருக்க வில்லை. எந்தவிதமான சிகிச்சையாலும் மருந்து மாயங்களா லும் சதானந்தம் பிள்ளையின் மனைவி சிறிதளவும் குணமடை யாததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். சில மருந்துகளால், மணி மந்திரங்களால், சில சமயம் நோய் சிறிது குணமாவதுபோல் காணப்படும். இரண்டு நாள் கழித்து மறுபடியும் நோய் முடக்கிக் கொள்ளும். இந்த விதமான விசித்திர நிலை, பொதுவாக உறவினர், அக்கம் பக்கத்து மனிதர்களை மட்டுமல்லாமல், வைத்தியர்களையும் மந்திரவாதிகளையும் வியப்பில் ஆழ்த்தியது; இதிலிருந்து, திலகவதியம்மாளுக்கு உடம்பில் மட்டும் முடக்குவாதமில்லை உள்ளத்திலும் முடக்கு வாதம் பிடித்துக் கொண்டிருக்கிறது என்றே தோன்றியது. உடற்பிணிக்கு மணி மந்திர ஔஷதம் பிடிக்கும். மனப்பிணிக்கு எப்படிப் பிடிக்கும்? நோய் ஒன் றிருக்க மருந்தொன்று கொடுத்தால் குணமாகுமா? மன நோய்க்கும் மருந்து உண்டோ?

மகனால் ஏற்பட்ட மன அதிர்ச்சியால்தான், மனக் கவலை யால்தான் ஏற்கனவே, உடல் நலிவுற்றிருந்த திலகவதியம் மாள் இப்போது தீரா நோய்க்காளானாள். மனநோய் முற்றிய தால் உண்டான உடற்பிணிக்கு மருந்துகளைக் கொடுப்பதை விட முதலில் மனப்பிணி அகல மார்க்கஞ் செய்தால் பூரண குணம் ஏற்படும். ஆனால் அதற்கு வழி யாரும் செய்யவில்லை. ஏனென்றால் திலகவதியம்மாளை உள்ளூர அரித்துவரும் மன நோயை—மற்றவர்கள் — மணாளன்கூட அறியாததுதான்

இதற்குக் காரணமாகும். வியாதியின் மூலத்தையுணர்ந்தால் தானே அதைப் போக்க முடியும்?

மாசிலாமணி முதலியார் மூட்டிவிட்ட தீதான் திலகவதியம்மாளைச் சரியாகப் பற்றிக்கொண்டது. அவர் பிள்ளையவர்களுடன் அடிக்கடி பேசி வந்த பேச்சிலிருந்து கணவனைப் பற்றியும் குமாரர்களைப் பற்றியும் அறிந்த சில விஷயங்கள் அவளுக்கு அதிர்ச்சியை உண்டு பண்ணின. 'உத்தமரான என் கணவரையும் உலகம் சந்தேகிக்கிறதே! விரோதிக்கிறதே! உலகம் என்றால் யார்? அறிவால், ஒழுக்கத்தால் உயர்ந்த ஆன்றோர்களா? நற்குண சம்பன்னர்களா? இல்லை; இல்லை. சுயநலத்தால் சூழ்ச்சி செய்யும் உலுத்தர்கள்—யோக்கியப் பொறுப்பற்றவர்கள் தான் என் கொழுநரைக் குறை கூறுகிறார்கள்; குற்றஞ்சுமத்த முயல்கிறார்கள். குரோதங் கண்டு தீமை புரியச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸில்—தேச மகா சபையாகிய காங்கிரஸில் — தாதாபாய் நௌரோஜி—கோபாலகிருஷ்ண கோகலே—சுரேந்திர நாத பானர்ஜி—விபினசந்திர பாலர்—பால கங்காதர திலகர்—போன்ற தேச பக்தர்கள்—தியாகிகள் அரும் பாடுபட்டு வளர்த்த காங்கிரஸில்—காந்தி மகான்—சத்தியத்தையும் அஹிம்சையும் ஆயுதங்களாகக் கொண்டு சுதந்திரப் போராட்டம் நடத்திய மகாத்மா காந்தி பலப்படுத்திய காங்கிரஸில்—சுபாஷ் சந்திர போஸின் அரும்பெருந் தியாகத்தாலும், வீரதீரப் போராட்டத்தாலும் நாட்டுக்கு ஆட்சி சுதந்திரம் வாங்கித் தரும் பெருமை பெற்ற காங்கிரஸில் கூடவா சுயநலவாதிகள்—அயோக்கியர்கள் மலிந்துவிட்டார்கள்? அட கடவுளே! தந்தை மீதுள்ள வஞ்சங் காரணமாக, பிள்ளைகள்மீது பழி தீர்த்துக்கொள்ளப் பார்க்கிறார்களே! கயவர்கள்?' என்று எண்ணியெண்ணி மனம் வருந்தினாள்.

இவர் எதற்காக அந்த அயோக்கியர்களோடு மல்லாடுகிறார்? நீதியும், நேர்மையும், உண்மையும் இல்லையென்று அறிந்தால் இவர் பேசாமல் விலகிக் கொள்வதுதானே!

காங்கிரஸில் இருந்துதான் மக்களுக்குச் சேவை புரிய முடியுமா? என்ன! வேறு எந்த ஸ்தாபனத்திலும் சேர்ந்து சேவைசெய்யமுடியதா? நீண்டகாலம் காங்கிரஸ்ஸில் இருந்து தொண்டாற்றி வந்ததால், பிற கட்சிகளில் சேர விருப்ப மில்லையென்றால், தனிப்பட்ட முறையில் முடிந்த அளவு மக்களுக்கு நன்மை செய்து மனத்திருப்தி கொள்வதுதானே! அதை விட்டு......... பொல்லாதவர்களுடன் பொல்லாங்கு எதற்கு? நாய் வாலை நிமிர்த்த முடியுமா? துஷ்டர்களுக்குப் புத்தி சொன்னால் திருந்தப்போகிறார்களா? அதற்குப்பதிலாக அவர்கள் தீமை செய்யத்தான் பார்ப்பார்கள். தங்க இட மின்றி மழையில் நனைகிறதே என்ற பரிவுணர்ச்சியோடு புத்தி சொன்ன தூக்கணாங் குருவியின் கூட்டைப் பிய்த்தெறிந்த குரங்கின் கதையை இவர் அறிய மாட்டாரா? இவருக்குத் தெரியாத விஷயமா? இவருக்கு யோசனை சொல்ல எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?—மனைவிக்கு உரிமையா? இல்லாத உரிமையிருக்கலாம். அந்த உரிமையை எப்பேர்ப் பட்ட கணவரிடம்—எந்த சமயத்தில் உபயோகப்படுத்த வேண்டும் என்று தெரிய வேண்டாமா.........?'

கணவனிடத்தில் திலகவதிக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு; உயர்ந்த மதிப்பு உண்டு. இடையில் மங்கை விஷயமாக அவள் சந்தேகங் கொண்டபோது கூட, கணவன்மீது கடுகள வும் ஐயங் கொள்ளவில்லை. மங்கைமீதுதான் சந்தேகங் கொண்டாள்; அசூயை கொண்டாள். அவள்தான்–இளமையி லேயே இன்பத்தை இழந்துவிட்ட விதவையான அவள் தான் தன் கணவரை மயக்க முயல்கிறாள் என்று எண்ணினாள்.

தன் கணவர் அனுபவ மிகுந்தவர்; அவர் நிலைமைக்குத் தகுந்தபடி நடந்து கொள்வார்; அவரைப் பற்றித் தான் அதிகமாகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. 'அரசாங் கத்தில் பதவி வகிப்பவர்களின்—அதிகாரத்தைக் கைக் கொண்டிருப்பவர்களின்—பகைமை எதற்கு?' என்ற ஒரு சிறு நினைவைத் தவிர அவள் அவரைப் பற்றி அதிகஞ் சஞ்சலங்

கொள்ளவில்லை. பிள்ளைகளை நினைக்கும்போதுதான் அவள் பெருங்கவலை கொண்டாள். சிறு வயதிலேயே— படிக்கும் போதே—இவர்களுக்கு எதற்காக அரசியல் விவகாரங்கள்? கட்சிகளில் கலந்து கொண்டு கூச்சல் போடுவதேன்? நல்லது, கெட்டது என்று இன்னமும் சரியாகத் தெரியாத நிலையில் இவர்கள் பொது விஷயங்களில் ஈடுபடுவது கூடாது. ஆனால், அவர்கள் இதைக் கேட்க மாட்டார்கள் போலிருக்கிறதே! பெரியவன்தான் ஒரு தினுசாய்ப் போய் விட்டான் என்றா லும், சின்னவனும் அதைவிட மோசமாகவல்லவா இருக் கிறான்? ஆனால் விசுவம், சிவனைப் போலப் பரீட்சையில் 'கோட்' அடிக்கவில்லை. எப்படியோ எழுதிப் பாஸாய் விடுகிறான்; மேல் படிப்பில் எப்படி இருப்பானோ?......' என்று பெற்ற பிள்ளைகளை எண்ணித்தான் அவளுடைய தாயுள்ளம் பெரும் பேதுற்றது.

பீ.எஸ்.ஸி. ஆனர்ஸ் பரீட்சையில் பாஸாகாமல் போன தற்குப் பொதுவிவகாரங்களில் ஈடுபட்டதுதான் காரணம் என்று தந்தையார் படித்துப் படித்துச் சொல்லிக் கண்டித்துங் கூட, சிவகுமாரன் தன் போக்கை மாற்றிக் கொள்ளாமல், அரசியலில் அதிகமாக ஈடுபட்டு வருவதை அறிந்து திலகவதி யம்மாள் வெகுவாக வருந்தினாள். வெளிப் பார்வைக்குத் தான் எதிலும் கலக்காதது போல் பாவனை செய்து வந்தா லும், அந்தரங்கத்தில் அவன், அரசியல், சமூகக்கிளர்ச்சிகளில் தீவிரமாகக் கலந்து வேலை செய்து வருகிறான் என்ற செய்தி பிள்ளையவர்களுக்கு மாசிலாமணி முதலியார் முதலியவர்கள் வாயிலாக எட்டத்தான் செய்தது. சிவகுமாரன் கம்யூனிஸ்டு கட்சியிலும், விசுவநாதன் திராவிட முன்னேற்றக் கழகத்தி லும் சேர்ந்து முக்கிய பங்கெடுத்துக் கொள்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது. 'தகப்பன் காங்கிரஸ் காரர்; பிள்ளைகள் காங்கிரஸுக்கு நேர்விரோதமான கட்சி களில்—காங்கிரஸ் செல்வாக்கைக் குலைப்பதையே குறிக் கோளாக் கொண்ட எதிர்க்கட்சிகளில் — சேர்ந்திருக் கின்றனர்' என்று சதானந்தம் பிள்ளையவர்களைக் குறை கூற முயன்றவர்கள் கேலியாகச் சொல்லலாயினர்.

பிள்ளைகளின் வெளி விவகாரம் பகிரங்கமாகத் தெரிந்த பின்னர் திலகவதிக்குப் பயம் அதிகமாய் விட்டது. "விசுவம் தி.மு.க.வில் சேர்ந்திருப்பதுகூடப் பாதகமில்லை. சிவன் போய் அந்தச் சதிகாரக் கட்சியில் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதுதான் எனக்கு மன வேதனையாயிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் பலாத்கார முறையை விட்டு விட்டார்கள், வேலைத் திட்டத்தை மாற்றிக் கொண்டார்கள் என்று சொல்லப்பட்டாலும், அதைச் சட்ட ரீதியான கட்சி, நேர்மையான அரசியல் கட்சி என்று நம்மால் நம்ப முடியாது. அரசாங்கமும்-மத்திய அரசாங்கங்கூடத்தான்—அதை நம்பாமலே யிருந்து வருகிறது. இந்நிலையில் இவன் போய் அதன் நடவடிக்கைகளில் கலந்து கொள்வது—அல்லது அநுதாபங் காட்டுவது - கொள்ளிக்கட்டையைக் கொண்டு தலையைச் சொரிந்து கொள்வது போலல்லவா ஆகும்?......" என்று ஒரு நாள் கணவர் தம் நண்பரொருவரிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டதும் வேதனை இவள் நெஞ்சத்தைத் துளைத்தது. மாசிலாமணி முதலியார் அன்றொரு நாள் எச்சரித்தது போல், இன்று ஆட்சி பீடத்திலிருக்கும் தன் கணவனுக்கு வேண்டாதவர்கள், இவர் மீதுள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, சிவனை அரசாங்கத்துக்கு எதிரான கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறான் என்று ஏதாயினும் காரணங் காட்டிச் சிறையில் தள்ளி விட்டால் என்ன செய்வது என்று எண்ணி ஏங்கினாள். இப்பயங்கர நினைவு அவளைப் பாகாய் உருக்கி விட்டது.

அவள் கணவர் சமீபத்தில் பழநிசாமிப் படையாச்சியிடம் தெரிவித்ததுபோல், சிவன் சிறு பையனாயிருந்தாலும் இரண்டு அறை அறைந்து அதிலெல்லாம் சேராதே என்று பயமுறுத்திப் புத்தி சொல்லலாம்; தலைக்கு மேலே மூத்துவிட்ட பிள்ளையை எந்த விதமாகக் கண்டிப்பது? மிஞ்சிக்கண்டித்தால் மீறி விட்டால் என்ன செய்வது? கொஞ்சநஞ்சமுள்ள மரியாதையுமல்லவா கெட்டுப் போகும்? ஆகவே, கணவன்

இதைக் கண்டும் காணுமல், அறிந்தும் அறியாமல் போவது தான் நல்லது என்று அவள் எண்ணினுள். பிள்ளைகள் தன் கணவனை எதிர்த்துக் கொள்ளும் நிலை ஏற்படக் கூடாதே, கடவுளே! என்று அவள் பிரார்த்திக்கலானுள்.

ஆனுலும் திலகவதிக்குச் சிவன்மீது மனத் தாங்கல் ஏற்படத்தான் செய்தது. எந்த மகன் பரீட்சையில் பெயி லாய் விட்டதைக் கேட்டு—பெயிலானதற்கு இன்னதுதான் காரணம் என்று அறிந்து—ஆட்சியிலுள்ளவர்கள் அவன்மீது அடக்குமுறையைக் கையாளக்கூடும் என்று கேட்டு அவள் அஞ்சினுளோ—அந்த அச்சத்தாலேயே அதிர்ச்சியடைந்து முடக்கு வாதத்தில் முடங்கி விட்டாளோ—அந்த மூத்தமகன் தன்னைப்பற்றி அவ்வளவாகக் கவலை கொள்ளாமல் தான் தோன்றித்தனமாகத் திரிந்து விட்டு வருவது—செப்டம்பரில் பரீட்சை எழுதிப் பூர்த்தி செய்யப் போகிறேன் என்று சொல் லிப் பின் அவ்விதம் செய்யாமல்— 'சரியாகப் படிக்கவில்லை; நன்ருகப் படித்து மார்ச்சு பரீட்சைக்குப் போகிறேன்' என்று கூறி வீண் பொழுது போக்கிக் கொண்டு தந்தையின் நற் பெயரையும் குடும்பக் கௌரவத்தையும் கெடுத்து வருவது அவளால் சகிக்கக்கூடாததாய் விட்டது. அதை நினைத்து நினைத்தே அவள் நெக்குருகி விட்டாள். இவ்விதம் மன நோய் முற்ற முற்ற உடலைப் பற்றிய வியாதி எப்படிக் குணப்படும்? எந்த மருந்துதான் எப்படிப் பிடிக்கும்? ஆகவே, அவள் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு தான் வந்தது. வந்தது இந்நிலையிலும் அவளுக்கு ஒரே ஒரு ஆறுதல் மங்கையர்க்கரசி ஒன்றுவிட்ட சகோதரியாயிருந் தும் உடன் பிறந்த சகோதரியைவிட உறு துணையாயிருந்து வரும் மங்கையர்க்கரசி தன் குடும்ப நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு திறமையாக நடத்தி வருவதும், தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் யாதொரு குறைவுமின்றி அக்கறையாகக் கவனித்துக் காரியங்களைச் செய்து வருவதும் கண்டு விம்மிதமுற்ருள். அத்துடன் மங்கை சிறு பிள்ளைகளை நன்கு பராமரிப்பதோடு சமயம் நேரும்போது சிவகுமாரனுக்

கும் விசுவநாதனுக்கும் புத்தி சொல்லித் திருத்த முயல்வதை யறிந்து அவள் நெஞ்சம் நன்றியுணர்வால் நெகிழ்ந்தது.

இவ்விதம் திலகவதி பலவித நினைவுகளால் சதா அலைக்கப்படுவதை அவள் சரீரம் தாங்கவில்லை. அது மிகவும் சோர்ந்து போய் விட்டது. ஒருநாள் திடீரென உடல் நிலை மிக மோசமாய் விட்டது. பொங்கலுக்கு முன்னுள் இரவு அவள் நிலை கவலைக்கிடமாய் விட்டது. ஊர் முழுவதும் மக்கள் பீடை மாதங் கழித்துப் புத்தாண்டு பிறந்து வாழ்க்கை மகிழ்ச்சி பொங்கப் போகிறது. வீடுகளில் பால் பொங்க வைக்கப் போகிறோம் என்று பூரிப்புக் கொண்டு, போகிப் பண்டிகையில் பழசுகளை யெல்லாம் தீக்கிரையாக்கி மேளமடித்து எண்ணெய் தேய்த்து முழுகிக் கோடியாடை உடுத்திக் குதூகலமாயிருக்கும் சமயத்தில், சதானந்தம் பிள்ளை வீடு துக்கமும் அழுகையுமாய் இருந்தது. திலகவதி யின் படுக்கையைச் சுற்றி எல்லோரும் கவலையோடும் கண்ணீ ரோடும் கை பிசைந்து கொண்டு நின்றிருந்தனர்.

தனக்கு ஆயுள் குறுகி விட்டது; இனி தன் உயிர் உடல் கூட்டிலிருந்து எந்தக் கணத்திலும் பிரிந்துவிடக் கூடும் என்று நன்கு அறிந்து கொண்டாளாஞலும், திலகவதி கணவனுக்கும் மங்கைக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் மொழி புகலலாஞள். இவளுடைய தாய் வீட்டுக்கும் மற்றும் முக்கியமான உறவினருக்கும் தகவல் சொல்லி வரவழைக்க லாம் என்று சதானந்தம் முயன்றதைக்கூட, அவள் 'அவசரப் பட்டுச் சொல்லியனுப்ப வேண்டாம்; பின்னல் பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறித் தடுத்துவிட்டாள். அவள் தன் அருமருந்தன்ன கணவனின் மடிமீது தலையை வைத்துத் தான் அமைதியாக உயிர்விட வேண்டுமென்று விரும்பிஞள். இவ்வளவு நெருக்கடியான சமயத்திலும் வீட்டில் தங்காமல் பொறுப்புணர்ச்சியின்றி சிவன் எங்கெங்கோ சுற்றிவிட்டுக் காலங் கடந்து வருகிறுனே என்று ஒரு புறம் அவள் மனம் கவன்று கொண்டுதானிருந்தது. இத்தருணத்தில் விசுவநாதன் புத்தசாலித்தனமாக நடந்து கொண்டான்.

தந்தை கூப்பிடுங் குரலுக்கு ஏனென்று கேட்டு நடக்கப் பக்கத்திலேயே இருந்தான். சிற்றன்னையுடன் இருந்து தாய்க்குச் செய்ய வேண்டிய சிச்ருஷைகளைச் செய்வதில் உதவியாய் இருந்தான்.

திலகவதிக்குப் பேச்சு மூச்செல்லாம் மெல்ல மெல்ல அடங்கி வந்தது. ஆனால், அவள் கண்கள் மட்டும் அடிக்கடி எல்லோரையும் ஆவலாகப் பார்க்கலாயின. இரவு பகலாய்க் கண் விழித்தும் கவலை கொண்டும் கணவன் உருக்குலைந்து போயிருப்பதைக் கண்டு அவள் உள்ளம் உருகியது. அடுத்த படி, எல்லாப் பாரங்களையும் தான் தாங்கிக் கொண்டு அக்கா எப்படியும் பிழைத்தெழுந்து விடவேண்டும் என்ற ஆவலோடும், நம்பிக்கையோடும் வேளா வேளைக்கு மருந்தும், உணவும் கொடுத்து கண்ணுங் கருத்துமாகக் காத்து ஓய்ச்சல் ஒழிவின்றி உழைத்து ஓடாய்ப் போய் விட்டிருக்கும் மங்கையைப் பார்த்து அவள் கண்ணீர் உகுத்தாள்.

விவரம் நன்றாக அறியாவிட்டாலும் தான் அசௌக்கியமாயிருப்பதற்காக வருந்தி மெலிந்து போன கணேசனையும், கோகிலத்தையும் கட்டிக் கொண்டு அவள் கோவென அழுதாள்.

விசுவநாதனை அவள் அன்பாகத் தடவிக் கொடுத்து, "அப்பாவுக்கு ஒத்தாசையாயிரு, விசு! அண்ணனைப் போல் அக்கரையற்றிராதே" என்று அறிவுரை கூறினாள்.

சிவகுமாரனுக்கும் ஏதாயினும் சொல்லிவிட்டுப் போக வேண்டும் என்று அவளுடைய உள்ளந் துடித்தது. அவன் அவள் அருகே வருவதே அருமை. தூர இருந்தே துயரத்தை வெளிப்படுத்தி விட்டுப் போய் விடுவான். ஒரு கணமாயினும் தன் சமீபம் அவன் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டது திலகவதியின் நைந்த உள்ளம். அதற்கு அவன் சந்தர்ப்பம் அளிக்கவில்லை.

இரண்டு மூன்று நாட்களாகவே, திலகவதி அடிக்கடி உணர்விழப்பதும் மெல்ல உணர்வு பெறுவதுமா யிருந்தாள்.

ஆகவே, சதானந்தம் அவள் அருகேயே இருந்தார். ஒரு கணம் கூட அப்படி இப்படி போவதில்லை. தப்பித் தவறிப் போனாலும் மங்கையைக் கூப்பிட்டு இருக்கச் சொல்லிவிட்டுப் போவார்.

காணும் பொங்கலன்று மாலை திலகவதியின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாய் விட்டது. இது கண்டு, பிள்ளையவர்களும் மங்கையும் வெலவெலத்துப் போயினர். விழிகள் மேலுங் கீழுமாக உருள்வதையும் மருள மருளப் பார்ப்பதையுங் கண்டு பயந்து கோகிலாவும் கணேசனும் அழலாயினர். அச்சமயம் விசுவநாதன் கூட இல்லை.

இருட்டி விட்டுங்கூட, விளக்கு ஏற்றத் தோன்றவில்லை இருவருக்கும். பேயறைந்தவர்கள் போலப் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தனர். பணிப் பெண் வந்துதான் மின்சார விளக்குகளைப் பொருத்தலானாள்.

விளக்கு ஏற்றப்பட்டதும் திலகவதியின் உயிர் விளக்கும் சிறிது பிரகாசமாய் எரியலாயிற்று. திடீரென அவள் முகத்தில் ஒரு விதக் களை காணப்பட்டது. இப்போது இவள் சிறிது தெளிவாகக்கூட பேச முயன்றாள். வேலை செய்து விட்டு, வீட்டு எசமானிக்கு இப்படியிருக்கிறதே என்று கருதித் தயங்கி ஒரு புறம் நின்றிருந்த பணிப் பெண்ணை நோக்கி, அவள் வீட்டுக்குப் போய்க் காலையில் வருமாறு மங்கை மூலம் சொன்னாள். பின், அவள் குழந்தைகளை அழைத்துப் போய் பொழுதோடு சாப்பிடச் செய்யுமாறு மங்கைக்குப் பணித்தாள்.

கலக்கத்தோடு நின்றவாறு தன்னையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கணவனை நோக்கி, "நீங்களும் சாப்பிட்டு விட்டு வாருங்களேன்" என்று பரிவோடு மெல்லக் கூறினாள்.

"இருக்கட்டும்" என்றார் பிள்ளையவர்கள் தழுதழுத்த குரலுடன்.

"எனக்கு ஒன்றுமில்லை; நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்?"

மனைவியின் இந்த ஆறுதல் மொழி பிள்ளையவர்கள் மனத்தை என்னவோ செய்தது.

திலகவதி கணவனைக் கனிவோடு பார்க்கலானாள். அவருடைய முகத்தில் அந்தச் சில விநாடிகளில் என்னென்ன கண்டாளோ! அவள் கண்களில் நீர் பனித்தது. அவள் உள்ளம் பொருமியது. அவ்விம்மிதத்தையுணர்ந்து கொண்டவர் போல் அவரும் பொருமினார்.

"ஏன் நிற்கிறீர்கள்? இப்படி உட்காருங்கள்" என மிக மெல்லச் சொன்னாள் திலகவதி.

பிள்ளையவர்களுக்கு மனைவியின் பக்கத்தில் அமர்ந்து அவளை ஆஸ்வாசப் படுத்த வேண்டும் என்று ஆவல் அடிக்கடி எழும். ஆனால், மங்கையோ மற்றவர்களோ எப்பொழுதும் உடனிருப்பதால் தூர இருந்தே அவளுடைய காரியங்களைக் கவனிப்பார். இப்போது மனைவியே சொன்னதும், அவர் அவள் பக்கத்தில் போய் அமர்ந்தார். சடை பிடித்துத் தாறுமாறாய் முகத்தின் மீது விழுந்து கிடந்த கூந்தலை அவரது இடது கரம் கோதலாயிற்று. அவரது வலக்கை வற்றியுலர்ந்திருந்த அவள் கன்னத்தை வருடியது.

மீண்டும் கணவனைக் கனிகரமாகப் பார்த்த திலகவதி "எப்படியிருந்த தேகம் எப்படியாய் விட்டது? தளதளப்பெல்லாம் போய் தாடை யொட்டியல்லவா போயிருக்கிறது. தோளும் சூம்பிக் கைகளும் சோர்ந்து போய்... .." என்று ஆற்றாமையோடு சொல்லி நிறுத்தினாள்.

"பேசிச் சிரமப்படுத்திக் கொள்ளாதே, திலகம்! என் உடம்புக்கு என்ன? நீ தான் நலிந்து......நீ நல்லபடியாக எழுந்து விடு. அப்புறம் பார்; எல்லாம் சரியாகிவிடும்......"

அவள் பிழைக்க மாட்டாள் என்று அவருக்கு நன்கு தெரிந்தும் நப்பாசையால் அவ்விதம் நவின்றார்.

"நல்லபடியாக... ..." அவள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள், அவள் கண்கள் மட்டும் அவர் கண்களை

ஊடுருவி நோக்கின. அவருடைய கண்களில் கருமணி களில் அவள் தன் கணவனுடன் கருத்தொருமித்து நடத்தி வந்த இருபத்தைந்து வருடத்திய இல்வாழ்க்கையைப் பார்க்கலானாள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இளம் பெண்ணாக அவர் கையைப் பற்றியது, பிறந்தகத்திலிருந்து புக்ககம் வந்ததும் மாமியார், நாத்திமார் உட்பட அனைவரும் அன்புடன் வரவேற்றது, கணவனுடன் தனிக்குடித்தனம் நடத்தத் தொடங்கியது, கணவனின் காதலன்பிலே தவழ்ந்து புத்திரச் செல்வங்களைப் பெற்று, எல்லாரிடமும் இங்கிதமாய் நடந்து நற்பெயர் வாங்கியது, இவ்விதம் ஒவ்வொரு நிகழ்ச்சி யும் அவளுடைய நினைவுச் சுருளில் வந்து கணவனின் கருமணி களில் பிரதிபலித்தது. தான் அறியாமையால் பல பிழைகள் புரிந்த காலத்தும் கோபிக்காமல் அன்பாகக் கடிந்துகொண்டு திருத்திக்கொள்ள அவகாசங் கொடுத்து ஆதரவு காட்டிய கணவனின் பேரன்பையும் பெருந்தன்மையையும் நினைந்து அவள் இச்சமயம் விம்மிதமுற்றாள். இருபத்தைந்து வருட வாழ்வில் அவர்களிடையே நிகழ்ந்த கோப தாபங்கள் நீரில் கிழித்த கோடு போலக் கணத்தில் தோன்றிக் கணத்தில் மறைந்தவைதாம் அதிகம். அவர்களுக்கிடையில் ஏற்படும் சிறு பிணக்கம் அடுத்த கணம் மிக நெருக்கத்தைத்தான் உண்டு பண்ணும். புலவி கலவிக்குத் தான் அடிகோலும். ஊடலோ மகிழ்ச்சியாகக் கூடலைத் தான் கூட்டுவிக்கும். மற்றபடி மன மாற்சரியங்களோ பூசல்களோ மருந்துக்குக் கூட அவர்களிடையே ஏற்பட்டதில்லை. மங்கலமான மனை மாட்சிக்கு நன்கலமாக அவள் பிள்ளைகளைப் பெற்ற காலத் தில் எல்லாம் மறவாமல் தக்க பரிசுகள் பட்டாடைக ளாகவும், பொன்மணி அணிகளாகவும் பிள்ளையவர்கள் வழங்கத் தவறியதில்லை. முதல் பிரசவமாகச் சிவகுமாரனைப் பெற்ற காலத்தில் பிள்ளையவர்கள் பூரித்த பூரிப்பு, அவளைப் போற்றிய போற்றல், அணிமணி வழங்கி அளவளாவிய அக மகிழ்வு இவைகளை இப்போது நினைத்த போதும் அவள் இத யத்தில் இன்பந்தான் பெருக்கெடுத்து ஓடியது. இவ்வளவு அருமையான கணவரைத் தன் வாழ்க்கைத் துணைவராகப்

பெற்று மகிழ்ந்து இப்போது இடையில் பிரிந்துபோக வேண்டியிருக்கிறதே என்று எண்ணியபோதுதான் அவள் கண்கள் இரத்தக் கண்ணீர் வடித்தன.

"நாதா! இருபத்தைந்து வருடங்கள் உங்களுடன் இன்ப வாழ்க்கை நடத்தினேன். நீங்கள் எனக்கு வாழ்க்கையில் யாதொரு குறையும் வைக்கவில்லை. ஆனால், நான்தான் ஏதாயினும் தவறு புரிந்திருப்பேன். தங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் தவறியிருப்பேன்; பணிவிடைகளில் பிழை புரிந்திருப்பேன். ஆனால், அவை நான் தெரிந்து செய்தனவாக இரா. எனினும் நீங்கள் இச் சமயத்தில் என்னை மன்னித்து அருள வேண்டும். நான் மறுபடியும் பிறக்க நேர்ந்தால் உங்களோடு வாழக் கூடிய பேற்றையும் உங்களுக்குக் குற்றேவல் செய்யக் கூடிய உரிமையையும் வழங்கியருள வேண்டுமென்று நமது குல தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன்.."

சதானந்தம் பிள்ளை மனைவியின் வாயைத் தம் கரத்தால் பொத்தி, "திலகம்! இதென்ன பேச்சு? நீ நீடுழி வாழ வேண்டும். இப்படி இடை நடுவில் விட்டுப் போக நான் உன்னை ஒருகாலும் விடமாட்டேன்..." என்று ஆவேசம் வந்தவர்போல் பேசினார்.

திலகவதி இரக்கத்தோடு கணவனை ஏறிட்டுப் பார்த்து, "எனக்கு மட்டும் உங்களை விட்டுப் போக வேண்டுமென்ற விருப்பமா? என்ன! இந்தச் சண்டாள நோய் வந்து நம்மைப் பிரித்துவிடச் சதி செய்கிறதே! என் செய்வது!......" என்று கூறிப் பின், "நாதா! கொஞ்சம் நகர்ந்து வந்து என் தலையை யெடுத்து உங்கள் மடிமீது வைத்துக் கொள்ளுங்கள்...கொஞ்சம் அப்படி விச்ராந்தியாயிருந்து உயிர்விட விரும்புகிறேன்" என்றாள்.

தன் தலையை எடுத்து மடிமீது வைத்துக்கொள்ள வேண்டுமென்று திலகவதி சொன்னவுடனே, பரிவோடு எடுத்துக் கொண்ட பிள்ளையவர்கள் "விச்ராந்தியாய் உயிர்

விட'' எனத் தொடங்கியவுடனே மீண்டும் அவள் அதரத்தை மூடினார்.

"நீ இப்படி யெல்லாம் பேசக்கூடாது. எனக்குக் கோபம் வரும்'' என்று பிள்ளையவர்கள் கடிந்து கொண்டார்.

திலகவதி, "என்மீது கோபித்துக் கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு. தாராளமாகக் கோபித்துக் கொள்ளுங்கள்...''—'' என்று வெளுத்த உதடுகள் மலரச் சொன்னாள். உடனே ஏதோ நினைத்துக் கொண்டு, "ஆனால், நாதா, ஒரு வரம். என் கண்மணிகளை மட்டும் கோபித்துக் கொள்ளாதீர்கள். அவர்கள் தாயற்ற குழந்தைகள். உங்களைத் தவிர, திக்கு யாருமில்லை. அதிலும் சிவனை நீங்கள் மன்னிக்க வேண்டும். அவன் சிறு பிள்ளைத்தனமாய் ஏதாயினும் பிழை செய்வான்..''

"வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே! திலகம்!'' என்று அவளை மேலே பேசவொட்டாமல் தடுத்துவிட்டார் பிள்ளையவர்கள்.

இச்சமயம் கோகிலாவும் கணேசனும் முன்னே வர மங்கை அங்கு வரலானாள். இது கண்டு திலகவதி கணவன் மடி மீதிருந்த தன் தலையை எடுத்துக் கொள்ள முயன்றாள்.

உடனே மங்கை, "அக்கா. அப்படியே படுத்திருங்கள். நான் அப்புறம் வருகிறேன்'' என்று கூறியவாறே அவ்விடத்தை விட்டுப் போக முயன்றாள்.

திலகவதி கை காட்டி. "போகாதே! மங்கை! இரு. உன் வருகையைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் நான். நினைவு இழப்பதற்குள் உன்னிடம் சில விஷயங்கள் சொல்ல வேண்டும்......'' என்று படபடப்போடு கூறினாள்.

மங்கை வருத்தத்தோடு தயங்கி நின்றாள்.

திலகவதி தன் பிள்ளைகளைச் சில விநாடிகள் பார்த்துப் பின், "கோகிலா, தம்பியை அழைத்துப்போய்த் தூங்க வை,

பெரியண்ணாவோ சின்ன அண்ணாவோ வந்தால் மட்டும் இங்கு நான் வரச்சொன்னேன் என்று சொல்'' என்று சொன்னாள்.

கோகிலா கணேசனை அழைத்துக்கொண்டு அப்புறம் போகலானாள்.

பின் திலகவதி மங்கையை நோக்கி, ''மங்கை! அருகே வா!'' எனக் கைநீட்டி அழைத்து, ''சகோதரி, உனக்கு நான் எத்தனையோ வகைகளில் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், என்னால் எந்த வழியிலும் உனக்குக் கைம்மாறு செய்ய முடியாது. நன்றி தெரிவித்துக் கொள்ளமட்டும்தான் முடியும்.''

''அக்கா! இது என்ன பேச்சு? நீங்கள் மன நிம்மதியோடு பேசாமல் இருங்கள். நான் போய்க் கொஞ்சம் கஞ்சி கொண்டு வருகிறேன்.........'' எனக் கூறி அவள் பேச்சை மாற்றிவிட்டு அங்கிருந்து அகல முயன்றாள் மங்கை.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். தயவு செய்து நான் சொல்வதைச் சற்றுக் கேள். நீ முதன் முதலாகச் சித்தியுடன் இங்கு வந்தபோது நான் சொன்ன வார்த்தைகள் நினைவிருக்கும் என்று நம்புகிறேன்......''இது உன் வீடு. நீதான் இந்த வீட்டுத் தலைவி'' என்று சொன்னேன். அப்போது அவ் வார்த்தைகளை நான் சங்கோஜப்பட்டுக் கொண்டிருந்த உனக்கு ஆறுதலாக இருக்க உபசார மொழியாகக்கூடச் சொல்லியிருக்கலாம். ஆனால், இப்போது சொல்லுகிறேன்: இது உன் வீடு. இனி நீதான் இந்த வீட்டின் தலைவி. இதோ இருக்கும் அத்தான், சிவன், விசுவம், கோகிலா, கணேசன் அனைவரும் உன் பராமரிப்பில் இருக்க வேண்டியவர்கள். இப்போது நீ இவர்கள் அனைவரையும் அன்பாக ஆதரித்து வருவதுபோலவே இனியும் இன்னும் அதிகமாய்ப்பாதுகாத்து வர வேண்டும். தெரிகிறதா! இவர்களுக்கு உன்னை விட்டால் வேறு துணை இல்லை. என் சகோதரர்களோ சகோதரிகளோ இவர்களுக்கு உற்ற துணையாக ஒருபோதும் இருக்க மாட்டார்கள்

என்பது உனக்குத் தெரியும். நான் உன்னைத்தான் பூரணமாக நம்பியிருக்கிறேன். உன்னை என் உயிரினும் மேலாக மதித்துத் தான் இவர்களை உன்னிடம் அடைக்கலமாக விட்டுச் செல்கிறேன். நான் கேட்டுக் கொண்டபடி காப்பாற்றுவாயா? மங்கை! என் கையில் அடித்துச் சத்தியம் செய்து கொடு'' என்று கேட்டாள்.

மங்கை கோவெனக் கதறி விட்டாள். பிள்ளையவர்களின் கண்களிலும் தாரை தாரையாக நீர் பெருகி ஓடியது. பின் திலகவதி, தன் கணவனின் கரங்களை எடுத்து மங்கையின் கைகளில் சேர்த்து வைத்தாள். மங்கை ஏதோ பதில் சொல்ல முயன்றாள். ஆனால், அவள் நாவிலிருந்து வார்த்தை எதுவும் வெளிவரவில்லை. அதரம் மட்டும்தான் துடிதுடித்தது.

இச்சமயத்தில் கோகிலா, "இதோ அம்மா, பெரியண்ணு!'' எனக் கூறியவாறு கணேசனை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு வந்தாள். சிவகுமாரன் என்னவோ ஏதோ எனப் பதறியோடி வந்தான். சொல்லி வைத்தாற் போல் அண்ணன் பின்னேடேயே விசுவநாதனும் வந்தான்.

திலகவதி ஜாடை காட்டி எல்லோரையும் நெருங்கி வருமாறு செய்து, அவர்களுடைய கரங்களையும் மங்கையின் கரங்களில் ஒப்படைத்தாள். தாயினுடைய அப்போதைய நிலை சிவன், விசுவம் ஆகியவர்களின் கண்களிலும் நீரை வரவழைத்தது.

இருந்தாற் போலிருந்து கலகலவென ஓசை கேட்டது. திலகவதியின் தொண்டையில் மீண்டும் சளியும் கோழையும் ஏற்பட்டு அவளை மூச்சுத் திணற வைத்தது. கண்கள் மலர மலர விழித்தன. அடுத்த கணம் திலகவதியின் தலை சாய்ந்து விட்டது. மனைவியின் உயிர் பிரிந்து விட்டது என்று பிள்ளையவர்கள் அறிந்து 'ஒ'வெனக் கூவினர். மங்கையும் உண்மை புரிந்து கொண்டு 'அக்கா' என்று கதறியவாறு பிரேதத்தின்மீது விழுந்து விட்டாள். பிள்ளைகளனைவரும் தேம்பித் தேம்பி அழலாயினர்.

# 11

அன்று வெள்ளிக்கிழமை, காலை பத்து மணிதான் ஆகியிருக்கும்; ஆனாலும் சூரியன் தென்திசை நோக்கி விரைந்து செல்வதாலோ என்னவோ! நண்பகல் போல் வெய்யில் கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. அரைமணி நேரத்துக்கு முன்புதான், நீதி மன்றத்துக்குப் போன சதானந்தம் பிள்ளை எதையோ எடுத்துக்கொண்டு போக மறந்து விட்டுப் போய் வழியில் திடீரென நினைத்துக் கொண்டவராய் வீடு திரும்பலானார். அவர் வீட்டு வாசலில் காலடியெடுத்து வைத்த சமயத்தில் வேலைக்காரி வேதம் ஏதோ வேலையாக வந்து கொண்டிருந்தாள். வீட்டு எசமானைக் கண்டதும் அவள் பயபக்தியுடன் ஒதுங்கி நின்று வழி விட்டுப் போகலானாள்.

வீட்டுக்குள் நுழைந்ததுமே, "மங்கை!" எனக் கூப்பிட வாயெடுத்த பிள்ளையவர்கள் பூஜையறையிலிருந்து வந்த பிரார்த்தனை கீதத்தைக் கேட்டு, அழைப்பதைவிட்டுத் தம் அறைக்குச் சென்றார். மேல் உத்தரீயத்தை எடுத்து அங்கிருந்த சோபாவொன்றின்மீது போட்டுவிட்டு அவர் ஒரு பீரோவண்டை சென்று அதைத் திறந்து தான் எடுத்துக் கொண்டு போக வந்த சட்டப் புத்தகமொன்றைக் கையில் எடுத்தார்.

பூஜையறையிலிருந்து வந்த ஊதுவத்தியின் புகையும் நறுமணமும் அவற்றின்மீது மிதந்து வருவதுபோல் வந்த இனிய குரல் இசையும் அவருடைய உள்ளத்தையும் உடம்பையும் கிளுகிளுக்கச் செய்தன. பீரோவிலிருந்து எடுத்த சட்டப் புத்தகத்தை மேஜைமீது வைத்தது அவர் கரம். அடுத்து அவருடைய கால்கள் பூஜையறை நோக்கி நடக்கலாயின.

"பிறந்து மொழிபயின்ற பின்எல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்

மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்?''

இனிய கண்டத்திலிருந்து உருக்கமாக வெளிவந்து கொண்டிருந்த அற்புதப் பாடலொன்று அவர் செவிகளில் தேன் போல் இனிமையாகப் பாய்ந்தது. பிள்ளையவர்கள் அப்பாடலில் லயித்துப் போய் அப்படியே நின்றுவிட்டார்.

''இடர்களையா ரேனும் எமக்கு இரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்—சுடர்உருவில்
என்புஅருக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்புஅறாது என்நெஞ்சு அவர்க்கு.''

தொடர்ந்து மற்றொரு பாடல் இனிமையும் பக்தியும் சொட்டச் சொட்டக் காற்றில் வந்தது அவருக்குத் தெளிவாகக் கேட்டது.

இது கேட்டு, பிள்ளையவர்கள், ''ஆஹா!'' என்று பரவசப் பட்டுப் போனார். அவர் அப்புளகாங்கித நிலையிலிருந்து விடுபடுவதற்குச் சில விநாடிகள் ஆயின.

பின்னர் அவர் பூஜையறையை நெருங்கி வெளியிலிருந்தவாறே மெல்ல எட்டிப் பார்க்கலானார். அங்கு காணப்பட்ட காட்சியைக் கண்டு அவர் பிரமித்துப் போனார். அவர் தினந்தோறும் இருந்து பூஜை புரிந்துவரும் பூஜையறை முற்றிலும் புதுமைக் கோலங்கொண்டிருந்தது. அந்தப் பூஜையறையில் சுவர் முழுவதும் கடவுளின் திருவுருவப் படங்கள் அழகாக மாட்டப்பட்டிருந்தன. அறையின் நடுவில் அழகிய விதானமொன்று அமைத்து, அதற்குள் அண்ட சராசரங்களையும் சகல லோகங்களையும் ஆட்கொண்டு அருளும் பெருங்கருணையுடனே அநவரதமும் ஆனந்த தாண்டவம் புரிந்துகொண்டிருக்கும் அம்பலவாணனின் அழகிய திருவுருவங்கொண்ட பஞ்ச லோகங்களாலான சிலா விக்கிரகத்தையும், இடப் பாகத்தில் சிவகாம சுந்தரி சிலையையும் வலப்புறம் மாணிக்க வாசகப் பெருமானின் சிலையையும் சதானந்தம் பிள்ளை வைத்திருந்தார். அதற்கு நேரே கீழ்ப்புறத்தில் ஓங்கார

சொரூபமான விநாயகப் பெருமானையும், இரு பக்கமும் லக்ஷ்மி, சரசுவதிதேவியரையும் சப்பரமொன்று செய்துவைத்திருந்தார். இப்போது பிள்ளையாரும் கலைமகளும் திருமகளும் நடராஜப் பெருமான் திருவோலக்கங்கொண்டிருந்த விதான பீடத்திலேயே முன்புறத்தில் வைக்கப்பட்டிருந்தனர்.

பிள்ளையார் பூஜை செய்யுமிடத்தில் திலகவதியின் உருவப் படம் வைக்கப்பட்டிருந்தது. பெரிய அளவில் வரையப்பட்டிருந்த அவ்வண்ணப் படத்தின் முன், திலகவதி அணிந்திருந்த ஆடையணிகள் அழகுற வைக்கப்பட்டிருந்தன. சுவாமி சிலைகளுக்கும், படங்களுக்கும் பூமாலைகள் சூட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தது போலவே, திலகவதியின் உருவப்படத்துக்கும் வாச மிகுந்த மலர்மாலைகள் சூட்டப்பட்டிருந்தன அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆடைகள்மீது நகைகளும் அவற்றின்மேல் ஜாதிக் கதம்ப மலர்களும் வைக்கப்பட்டிருந்தன. வெள்ளிக் குத்து விளக்குகள் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன. இருபக்கமும் ஊதுவத்திகள் கற்றையாகப் பொருத்தி வைக்கப்பட்டு எரிந்துகொண்டிருந்தன. இதன் புகையும் தூபகொலு சத்திலிருந்து எழுந்த சாம்பிராணிப் புகையும் நாலாபக்கமும் பரவி நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. தட்டத்தில் கற்பூரம் ஏற்றிவைக்கப்பட்டு ஜோதியாக எரிந்து கொண்டிருந்தது.

இவற்றுக்கு முன்பு மங்கையர்க்கரசி மண்டியிட்டு அமர்ந்துகொண்டிருந்தாள். அவள் கண்கள் திலகவதியின் உருவப்படத்தின் மீதே பதிந்திருந்தன. அவளுடைய கரங்கள் வரங்கேட்பதுபோல், அப் படத்துக்கெதிரே நீண்டிருந்தன. அவள் தரித்திருந்த தும்பைப் பூப்போன்று துல்லியமான வெண்ணிறப் புடவை பிள்ளையவர்களின் கண்களைப் பறித்தன. மங்கையின் நா ஏதோ உச்சரித்துப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தது. "அக்கா! நீ எங்களையெல்லாம் விட்டுப் போய்விட்டாய் என்பதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை, நம்பவும் முடியவில்லை. எங்கள் எல்லோரையும் அநாதையாக விட்டுச் சென்று ஒரு

மாதத்துக்கு மேலாகிவிட்டது. குடும்பத் தலைவியாயிருந்து எங்களுக்கெல்லாம் வாழ்வளித்து வந்த நீ, நாங்கள் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத நெடுந்தொலைவில் உள்ள மேல் லோகத்துக்குப் போய்விட்டாய்! போன மாதம்வரை எங்களிடையே இந்த மாளிகையில் மானிடப் பெண்ணாக உலவிவந்த நீ இப்போது தெய்வமாகிவிட்டாய். இது வரை பூதவுடலில் இருந்து எங்களுக்கு வழிகாட்டிவந்த நீ இப்போது சூக்ஷ்ம தேகத்தில் இருந்து வழிகாட்டி வருவாய் என்பதில் சந்தேகமில்லை. நீ தெய்வத்தோடு தெய்வமாகி விட்டாலும் எங்களை மறக்கமாட்டாய்; கைவிடமாட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. பொதுவாக நம் நாட்டில் பெண்கள் சுமங்கலிகளாக இறந்துவிட்டால் ஒவ்வொரு குடும்பமுமே அவர்களைத் தங்கள் தெய்வங்களாகக் கோடித்து வருவது வழக்கம். அதுபோலவே, நாங்களும் எங்கள் குலதெய்வமாக—ஏன்? அதற்கு மேலாகவே—பாவித்துக் கோடித்து வருவோம். நம் குடும்பத்தில் ஒவ்வொரு காரியத்தையும் உன்னை நினைத்தே செய்வோம்.

அக்கா! நீ இறைவன் திருவடியை அடைந்ததிலிருந்து உன்னை நினைக்காத நேரமில்லை; நாளில்லை. ஆனால், உன்னோடு ஆத்மார்த்தமாகப் பேசிப் பிரார்த்தித்துக் கொள்ள இன்றுதான் அவகாசம் கிடைத்தது. உனக்கு எல்லாம் தெரியும். நான் சொல்லவேண்டியதில்லை. நீ தான் எல்லாவற்றையும் ஆவி ரூபமாயிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறாயே! உன் இறுதிச் சடங்குக்கு வந்திருந்த உற்றாரும் உறவினரும் போக இவ்வளவு நாட்களாயின. அம்மா கூட நேற்றுத்தானே போனார்கள்? கருமாந்திரம் ஆன பின்னர், உன் சகோதரிகளும் சகோதரர்களும் செய்த அட்டகாசங்களையும், பேசிய பேச்சுக்களையும் இப்போது நினைத்துப்பார்த்தாலும் என் உடல் விதிர்ப்புறுகிறது, அக்கா! நீ அணிந்திருந்த நகை நட்டுகளையும் துணிமணிகளையும் கேட்டு, பணங்கேட்டு அத்தானை எத்தனை தொல்லைப்படுத்தி விட்டார்கள்? எப்படியும் இங்கிருந்து முடிந்தவரை கிடைக்கக்

கூடியவைகளையெல்லாம் சுருட்டிக்கொண்டு போய்விட வேண்டும் என்றல்லவா சாகஸங்கள் எல்லாம் செய்தார்கள்? தங்கள் சகோதரிக்கு இவ்வளவு பிள்ளைகள் இருக்கின்றனவே! அவர்கள் முன்னேற வேண்டாமா? அனுபவிக்கவேண்டாமா? என்ற எண்ணமே கிஞ்சித்தும் இருந்ததாகத் தெரியவில்லையே! இதுதான் சமயமென்று அவர்கள் அத்தானைப் பிய்த்துப் பிடுங்கியதைப் பார்த்தபோது தானே, உயிர் பிரியும் சமயத்தில் உடன் பிறந்தாரைப்பற்றி நீ வெளியிட்ட அபிப்பிராயம் எவ்வளவு உண்மையானதென்று தெரிந்தது? அவர்களுடைய பேச்சையும் செயலையும் கவனித்த பிறகுதான் என் மீது எவ்வளவு பெரிய பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது? நீ கட்டளையிட்டுச் சென்றவாறு, என் கடமையை எவ்வளவு கண்ணும் கருத்துமாகச் செய்யவேண்டும்? என்பதை என்னுல் உணர்ந்து கொள்ளமுடிந்தது.

அக்கா! நீ என்னிடம் வைத்துள்ள முழு நம்பிக்கையை நான் ஒரு சிறிதும் பொய்யாக்க மாட்டேன். நீ எனக்கு விதித்துச் சென்ற கடமையை நிறைவேற்றும் விஷயத்தில் கடுகளவும் பிசகமாட்டேன். ஆனுல், நீ எனக்கு அதற்குரிய வலிமையைத் தந்துகொண்டிருக்கவேண்டும். எனக்குத் தோன்ருத் துணையாயிருந்து எல்லா விஷயங்களிலும் வழி காட்டி யுதவவேண்டும் அத்துடன் சுற்றத்தாரும் அக்கம் பக்கத்தில் சூழ்ந்திருப்பவர்களும் பொருமை, பொச்சரிப்பு காரணமாகப் பேசும் பழிப்புப் பேச்சுகளையும், சுமத்தும் வீண் பழிகளையும், அபவாதங்களையும் தாங்கிக்கொள்ளும் சக்தியை எனக்கு அளிக்கவேண்டும்.

இழவுக்கு வந்தவர்கள் பலர் அதிலும் உன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—முக்கியமாக உன் சகோதரிகள் என்னைப் பற்றி மறைவிலும் நேரிலும் எவ்வளவு கேவலமாகப் பேசினர்கள் என்பது உனக்குத் தெரியும். நீ எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதானே இருந்தாய்? அப்பப்பா! அதை நினைத்தாலே உடம்பு கிடுகிடுக்கிறது; நெஞ்சு நடுக்கங் கொள்கிறது இந்த இழிமொழிகளைக் கேட்கச் சகிக்காமல், நான்

அம்மாவுடன் ஊருக்குப் போய்விடலாம் என்றுகூட நினைத்தேன். ஆனால் அம்மா அதற்கு இசையவில்லை. மற்ற வர்களைப் போல் நாமும் அக்கா குடும்பத்தை நிராதரவாக விட்டுவிட்டுப் போவது சிறிதும் நியாமில்லை என்று எடுத்துச் சொன்ன பிறகுதான் உணர்ச்சி தாங்காமல் நான் புரிய இருந்த தவறு புரிந்தது. அத்துடன், அக்கா! நீ கடைசி காலத்தில் எனக்கு இட்ட கட்டளையையும் நான் உனக்களித்த வாக்குறுதியையும் நினைத்துக் கொண்டேன். யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்தாமல் என் கடமையைச் சரி வரச் செய்து உன் குடும்பத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று முன்னைவிட அதிகமாக உறுதி கொண்டேன்.

அக்கா! நீ எங்களைவிட்டுப் பிரிந்துபோகும் சமயத் தில் மொழிந்த ஒவ்வொரு மொழியையும் நினைத்துப் பார்த்தால் என் உடம்பு புல்லரிக்கிறது. "இது உன் வீடு; நீதான் இக் குடும்பத்தின் தலைவி; இங்கிருப்பவர்கள் உன் பராமரிப்பில் இருப்பவர்கள். இவர்களை உன் னிடத்தில் ஒப்படைத்துச் செல்கிறேன்'' என்று கபம் தொண்டையை அடைக்கும் நிலையிலும் குழறியபடியே கூறிய சொற்கள் என்றும் என் நெஞ்சத்தில் நிலைத் திருக்கும். உன் ஸ்தானத்தில் நீ என்னை வைத்து விட்டுச் சென்றிருக்கிறாய். ஆனால் அக்கா! நான் அதற்கு ஒரு சிறிதும் அருகதையுடையவள் அல்ல. நீ ஆவியாக மாறிவிட்டாலும் நீதான் இந்த இல்லத்தின் அரசி, தலைவி; ஆதலால், இந்தக் குடிலையே உன் கோவிலாகக் கொண்டு இங்கேயே நிலைத்திருந்து உன் குடும்பத்தையும், என்னையும் பாதுகாத்து வரவேண்டும். உன் ஏவல்படி நான் பணிப்பெண்ணாக இருந்து அத்தானுக்கும் பிள்ளைகளுக்கும் பணிபுரிந்து வருவேன். இக் குற்றேவலில் எக்குறையும் நேராதவாறு, தவறு ஏற்படாதவாறு நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். 'என்னதான் வயதானாலும், மனைவியை இழந்திருக்கும் ஆண்பிள்ளை இருக்கும் வீட்டில் பருவப்பெண் ணொருத்தி அதிலும் இளமையிலேயே விதவையாய்விட்ட ஒரு பெண்—இருந்து குடும்பம் நடத்துவது சரியேயல்ல'

என்று பலர் சொல்லுவதில் நியாயமிருக்கிறது; உண்மையு மிருக்கிறது, ஆனாலும், இருந்தாக வேண்டியிருக்கிறதே! என்ன செய்வது? எனவே, யார் என்ன சொன்னாலும் என் முன் நிற்கும் கடமையைச் செய்வதில் நான் சிறிதும் பின் வாங்கமாட்டேன். உனக்குக் கொடுத்துள்ள உறுதி மொழியி லிருந்து ஒரு சிறிதும் பிசகமாட்டேன். எந்தவிதமான அபவாதமும் களங்கமும், கெட்ட பெயரும் வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். உனக்காக—உன் குடும்பத்துக்காக—எதை ஏற்கவும் நான் துணிந்துவிட்டேன்.

ஆனல் அக்கா! உனக்கு ஒரு சிறு வேண்டுகோள். தெய்வ மாய்விட்ட உன்னிடம் ஒரு வரம் வேண்டுகிறேன். இளம் பருவங்காரணமாக என் உள்ளத்தில் இன்ப நினைவு எப்போ தேனும் தப்பித் தவறி ஏற்படக் கூடும். சந்தர்ப்ப சூழ் நிலைகள் தவறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியும். நானும் மனிதப் பிறவிதானே; மானிட ஜன்மத்துக்கு இயற்கையாக வுள்ள குற்றங்குறைகளும் பலவீனங்களும் எனக்கும் இருக் கும். ஆதலால், சந்தர்ப்ப உணர்ச்சிக்கோ, சூழ்நிலைக்கோ நான் அடிமையாய் விடாமல் என்னை நீ பாதுகாக்கவேண்டும், நான் எளிதில் அவ்வித அவல நிலைகளுக்கு ஆளாகமாட்டேன். இங்கு வந்த புதிதில் தற்செயலாக நிகழ்ந்துவிட்ட ஒரு சிறு தவறுதலுக்கே நான் அடைந்த மன வேதனையும், தண்டனை யும் ஜன்ம ஜன்மத்துக்கும் மறக்காதே! ஆகையால் நான் தவறு புரிய மாட்டேன். தவறுவதற்கான சூழ்நிலைக்கு எப் போதும் இடம் அளிக்கமாட்டேன். என் உடம்பையும், உள்ளத்தையும் அவ்வளவு தூரம் ஒறுத்து மரத்துப் போகும் படியாகப் பக்குவப்படுத்தி வைத்திருக்கிறேன். ஆனாலும், அக்கா! ஒருவேளை என்னை அறிந்தோ அறியாமலோ தவறு நேர்ந்தால் அக்காலத்தில் நீ என்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும். அக்கா! பிழை புரியாதவாறு தடுத்துப் பாது காக்க வேண்டும். தெய்வமாக நீ சாந்நித்தியங் கொண் டுள்ள இந்த வீட்டில் தவறு நேரமுடியாது. எங்கும் கண்ணுங் காதுமாயுள்ள உன்னையறியாமல் இங்கு ஒன்றும் நடக்காது.

நடக்க யாருக்கும் துணிவு ஏற்படாது. அத்தானைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டியதில்லை. அவர் உத்தமர்; பெரிய மனிதர் நான்தான் எல்லாவற்றிலும் சிறியவள்; சிறுமை யுடையவள். என்னைத்தான் நீ கண்காணித்து வரவேண்டும். நாள் தவறினாலும் நான் உன்னைக் கோடித்து வருவதிலிருந்து ஒரு பொழுதும் தவறமாட்டேன், அக்கா!''

மங்கையின் பேதை நெஞ்சத்திலிருந்து வெளிவந்த இப் பிரார்த்தனை வாசகங்களைச் செவியேற்ற சதானந்தம் பிள்ளையவர்கள் உள்ளம் உருகிப் போனார். அம்மன நெகிழ்ச்சி கண்ணீராக வெளிவந்து கொண்டிருந்தது. அவருடைய வாய் மெல்ல முணுமுணுக்கத் தொடங்கியது.

'மங்கை, உன்னை என்னவோ என்று நினைத்திருந்தேனே! நீ எவ்வளவு பெரியவள்? நீ உன்னைச் சிறியவள்; சிறுமை யுடையவள் என்று சொல்லிக் கொள்ளுகிறாயே! நீ வயதில் சிறியவளாயிருக்கலாம். நல்ல அறிவிலும் உயர் குணத்தி லும், ஒழுக்கத்திலும் பெரியவளாக அல்லவா இருக்கிறாய்? நீ சாதாரணப் பெண்ணல்ல; அபூர்வப் பெண். இத்தகைய பெண்ணரசியான நீ எங்கள் குடும்பத் தலைவியாகவும் செவிலித்தாயாகவும் வாய்த்தது எவ்வளவு பெரும் பேறு? குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக நீ எவ்வளவு பெரிய தியாகஞ் செய்திருக்கிறாய்? நீ உன் வாழ்க்கையையே அர்ப் பணித்து விட்டாயே! அது மட்டுமா! நீ எங்கள் குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன் வந்திருப்பதனால் உனக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தையும், பழியையுங்கூடப் பொருட்படுத்தாமல் அல்லவா உன் வாழ்வை எங்கள் குடும் பத்துக்கு ஒப்படைத்து விட்டாய்? நீ எங்களைப் பராமரிப்ப தற்காக, எங்கள் குடும்ப நலனைப் பாதுகாப்பதற்காக உனக்கு ஏற்படக்கூடிய எத்தகைய அவப்பெயரையும் அபவாதத்தை யும் ஏற்கவல்லவா துணிந்துவிட்டாய்? இது சாமானியமாக நினைத்துப் பார்க்கக்கூடியதா? ஒரு பெண் எதையும் தியாகஞ் செய்ய முன் வருவாள்; ஆனால், அவள் தன் வாழ்வைத் தியா கஞ் செய்ய முன்வர மாட்டாள். தன் வாழ்க்கைக்கு ஏற்

படக் கூடிய களங்கத்தை, தன் கற்பைப் பற்றியே பிறர் சந்தேகத்துப் பழி பேசக்கூடிய கேவல நிலையை உண்டாக்கிக் கொண்டு தியாகஞ் செய்யத் துணிவு கொள்ளமாட்டாள். அத்தகைய அரும்பெரும் காரியத்தை நீ எங்கள் குடும்பத்துக் காக, எங்களுடைய குடும்பத்தைக் கண்காணித்துப் பாதுகாப்ப தற்காக, செய்திருக்கிறாய். இதற்காக நானும் என் பிள்ளை களும் உனக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நன்றிக் கடனை நாங்கள் எப்படி உனக்குத் திருப்பிக் கொடுக் கப் போகிறோம் என்பதே எனக்குப் புரியவில்லை. நீ எங்களை —எங்கள் குடும்பத்தை வாழ்விக்க வந்த குலதெய்வம் என்றே நான் மதிக்கிறேன். நாங்கள் உன்னைத் தெய்வப் பாவையாக வைத்தே வழிபட்டு வருவோம்.

மங்கை! நீ உடுத்திருக்கும் சுத்த வெள்ளைப் புடவையை போல, உன் உள்ளமும் தூய்மையாயிருக்கிறது. வாக்கும் துல்லியமாயிருக்கிறது. களங்கமும் குற்றமும் கற்புக் கனலி யான உன்னை நெருங்க அஞ்சும்; நீ பெண்களிலேயே மிக நல்லவள்; நற்குணமும் நல்லொழுக்கமும் வாய்ந்தவள். நீ தும்பைப் பூ போன்று துல்லியமானவள்; தூய்மையானவள். செடி கொடிகளில் எத்தனை எத்தனையோ வண்ண வண்ண மலர்கள் விதவிதமாக மலர்கின்றன. ஆனல் அவைகளில் மிகச் சிலவே வெண்ணிறமுடையனவாக இருக்கின்றன. அவ் வெண்ணிறப் பூக்களிலும் மல்லிகை, முல்லை போன்றவை களையே மக்கள் விசேஷமாக விரும்பிச் சூடிக் கொள்ளு கிறார்கள். மல்லிகை, முல்லை வகைகளைப் பார்க்கையில் தும்பைப்பூ சிறிது மங்கலான வெண்ணிறமுடையதுதான்: தாவரங்களில் தாழ்வாக உள்ள சிறு செடிகளில் பூப்பவை தான் தும்பைப்பூ ஆனல், மக்களிடையே இந்தத் தும்பைப் பூவுக்கு உள்ள மதிப்பும், பெயரும் மல்லிகை முதலிய வாசனை மிகுந்த மலர்களுக்குக்கூடக் கிடையாது. வெண் மையான பொருளை, வெண்ணிற ஆடையைப் பார்த்தால், 'தும்பைப் பூப்போல் துல்லியமாக இருக்கிறது; தும்பைப் பூப்போலத் தூய்மையான வெள்ளை நிறமுடையதாக இருக்

கிறது; என்று பாராட்டுகிறார்களே தவிர, மல்லிகையைப் போல, முல்லையைப் போல, மற்ற மற்ற பூக்களைப்போல இருக்கின்றன என்று யாருஞ் சொல்வதில்லை.

நான் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதுண்டு. தும்பைப்பூ, மல்லிகை முல்லை முதலிய பூக்களைப் போல வெண்ணிற முடையதல்ல; வாச மிகுந்தது மல்ல. அப்படியிருக்க, நறுமண மிக்க வெண்ணிற மல்லிகை முதலிய மலர்களைவிட, தும்பைப்பூ மக்களிடம் மதிப்பு எப்படிப் பெற்றது? என்று சமயம் ஏற்படுங் காலங்களில் எண்ணிப் பார்ப்பதுண்டு. மல்லிகை முல்லை முதலிய மலர்களின் நறுமணம் மக்களை மயக்கக் கூடியது; மோகத்தை யுண்டாக்குவது; மூக்கைத் துளைத்து உட்புகுந்து உள்ளத்தில் கிளு கிளுப்பையும் உடம்பில் ஒருவிதக் கிறுகிறுப்பையும் உண்டாக்கக் கூடியது. தும்பைப் பூவின் ஒருவித மென்மையான வாசம் மோந்து பார்ப்போரை மயக்காது; அதற்குப் பதிலாக மயக்கத்தைப் போக்கும்; அதாவது மக்களை—முக்கியமாக மழலைச் செல்வங்களான குழந்தைகளைப் பீடிக்கும் சிற்சில நோய்களைப் போக்கி உடம்பைக் குணப்படுத்த இது உதவுகிறது. தும்பைப் பூவின் சாறு குழந்தைகளுக்கு அருமருந்து. ஔஷத மலிகைகளில் ஒன்றாகத் தும்பைப்பூ இருப்பதால்தான் மற்றப் பூவுக்கு இல்லாத மதிப்பு இதற்கு இருக்கிறது.

நீ தும்பைப்பூ போன்றவள் என்று நான் மதிப்பதற்கு இதுதான் காரணம், எத்தனையோ மங்கையர் சமுதாயத்தில் இருக்கின்றனர். அவர்களில் பலர் தங்களுக்குள்ள அழகாலும் அணி பணி ஒப்பனைகளாலும் ஆடவரை மயக்குந் தன்மையுடையவரா யிருக்கின்றனர். நீயும் அந்த அழகு மங்கைகளிரைப் போல அழகுடையவள்தான்: ஆனால் உன் அழகு ஆண்களை மயக்கக் கூடியதல்ல. உன் அழகில் பகட்டு இல்லை: ஆடம்பரம் இல்லை. வீடுகளில் தொட்டிகளில் பதியம் வைத்து வளர்க்கப்படும் பட்டு ரோஜாவுக்கும், காடுகளில் இயற்கையாக வளர்ந்து பூக்கும் காட்டு ரோஜாவுக்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா! அதுபோலத்தான் உனக்கும்

மற்ற அழகிய நங்கையருக்கும் உனக்கும் வேறு பாடு இரிக்கிறது. அழகு வாய்ந்த பெண்கள் சிலர் தங்கள் செயற்கை அலங்காரங்களால் மல்லிகை, முல்லைகளைப் போல, ஆண்களை மயக்குகின்றனர். ஆனால் நீயோ தும்பைப் பூப்போல யாரையும் மயக்க வில்லை. உன் இளமையும் அழகும் உன்னிடமுள்ள கற்பு எனும் பொற்பினால் பார்ப்பவர்களை மனங்குவிந்து வணங்கச் செய்கின்றனவே யொழிய, உள்ளக் கிளு கிளுப்பை உண்டாக்கவில்லை. இப்போது நீ தரித்திருக்கும் பரிசுத்தமான வெண்ணிற ஆடை உன்னை ஒரு தேவதை போல அல்லவா காட்சியளிக்கச் செய்கிறது? வானத்தினின்றும் இழிந்து வந்துள்ள தெய்வப் பெண் போலல்லவா எண்ணச் செய்கிறது? காவல்லியமான இத்தூய வெள்ளாடைக்குள் நீ ஒரு பளிங்குப் படிவம் போல் விளங்குகிறாய். என் உள்ளத்தில் உன்னை நான் தெய்வமாக வைத்துவிட்டேன். ஆம், நான் அனுதினமும் வணங்கி வழிபடத்தக்க தெய்வம் நீ! நான் உன்னை வணங்குகிறேன்,

பிள்ளைவவர்களுடைய நா மெல்ல உள்ளத்துக்குள் பேசிக் கொண்டே போனது. அவரையறியாமல் அவர் கரங்கள் கூப்பின. அவர் உடம்பு ஒரு குலுங்கு குலுங்கி நின்றது. மங்கை திலகவதியின் உருவப்படத்தின் முன் கும்பிட்டு விழுந்து வணங்கி எழுந்திருப்பதற்கு முன், தாம் வந்த சுவடு தெரியாமல் அவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்ற எண்ணத்தோடு, கண்ணைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு அவர் ஓசையெழாதவாறு மெல்ல அடிவைத்து நடந்து விரைந்து வெளியே போகலானார்.

முற்றுப் பெற்றது